குண்டூசி

மார்ச் '53... எட்டு அணா

399

லிபர்டி பிக்சர்ஸாரின்

மதன மோஹினி

டைரக்ஷன்... M.L.பதி * மேற்பார்வை... J.ஸின்ஹா

ஜுபிடர் & மேகலா
எம்.ஜி.ராம்சந்தர் நடிக்கும்
நாம்
மார்ச் 5உ முதல்
சென்னை
ஸ்ரீ கிருஷ்ணா
சித்ரா......
ராஜகுமாரி
மற்றும் தென்னாடெங்கும்......
மு.கருணாநிதி... A.காசிலிங்கம்... சங்கீதம்: C.S.ஜெயராம் ......நெப்ட்யூன்

இப்பொழுது திரளான ஜனங்கள் கண்டு களிக்கின்றனர்.

கிருஷ்ணா பிக்சர்ஸ்

மருமகள்

டைரக்ஷன்: யோகானந்த் • சூபர்விஷன்: பிரசாத்

பாரகன்—பிரபாத்—காமதேனு

& லக்ஷ்மி (பெரம்பூர்)

விநாயகர்
சுருட்டுகள்
ஷெல் பிராண்டு

TRADE MARK REGISTERED
PROPRIETOR V. ARUMUGA CHETTY

மணிலா சுருட்டுகள்

V. ஆறுமுக செட்டி, 18. அண்ணா பிள்ளை தெரு,
N.B. பொடிக்கு உயர்ந்த பந்தர் புகையிலைகளும்.....சென்னை-1.
எம்மிடம் கிடைக்கும்....

800 009
134143
JL NWm1k67 N53

சினிமா பத்திரிகை வானில் புது ஜோதி!

நக்ஷத்திரம்

(மாதாந்தர சினிமாப் பத்திரிகை)

மார்ச் மாத ★ இறுதியில் மலர்கிறது

ஆசிரியர் : கேஸரி

சூர்யகுமாரின் 'நான் சொல்லுகிறேன்', வாஸனுடன் ஒரு நாள், சுப்ரமணியம் சொல்கிறார், கிருஷ்ணஸ்வாமி கேட்கிறார், சுவைக்க அவியல், இதோ பதில், விமர்சனம், இது சகஜம், அம்பலம், உங்கள் ராசி பலன்.

மற்றும் சிந்தனையைக் கிளரும் கட்டுரைகள் வர்ணப் படங்கள். 70 பக்கங்கள். பிரதி விலை அணா நாலு.

வருஷ சந்தா ரூ. 3. நாலணா ஸ்டாம்பு அனுப்பி மாதிரிப் பிரதிகள் பெற்றுக் கொள்ளலாம். எங்கும் ஏஜெண்டுகள் தேவை.

மானேஜர் :

நக்ஷத்திரம், தியாகராயநகர், சென்னை-17.

படத்தில் இல்லாத நக்ஷத்திரம்

உங்களுக்குத் தெரியும் நக்ஷத்திரங்கள் படங்களில் நீங்கள் காணும் நடிக, நடிகைகள் தான். உங்களைச் சிரிக்கவோ அழவோ செய்பவர்கள் அவர்கள் தான். ஆயினும் அவர்கள், டைரக்டர் ஆட்டி வைக்கும் பொம்மைகளே. இவர்தான் நக்ஷத்திரங்களுக்கு அவசியமும், அர்த்தமும் கொடுப்பவர், நாம் படத்தில் பார்க்காமலும் பாடாமலும் இருக்கும் இவர்தான் உண்மையான நக்ஷத்திரம்.

தேனீரின் குணங்களும் இதுபோன்றதுதான் அதைப்பற்றி யாரும் பாடாவிட்டாலும் உலகிலுள்ள லக்ஷக்கணக்கான மக்கள், புத்துயிரளிப்பதும் எப்பொழுதும் விரும்பி ஏற்றுக் கொள்ளக்கூடியதுமான தேனீரை அருந்தி ஊக்கமும் இன்பமும் பெறுகின்றனர்.

உங்களுக்கு அதிக இன்பத்தை கொடுக்கிற

ஸென்ட்ரல் 'டீ' போர்டாரால் வெளியிடப்பட்டது

CTB—

இந்த ஊசியில்

வருஷ சந்தா

இந்தியா, இலங்கை ... ரூ. 6
வெளிநாடுகள் ... ... ரூ. 9

தனிப் பிரதி

இந்தியா ... ... 8 அணு
இலங்கை ... ... 50 சதம்
வெளி நாடு ... ... 12 அணு

கட்டுரையாளர்களுக்கு

"குண்டூசி"யில் வெளியிடுவதற்கு நல்ல சிறு கதைகள், கட்டுரைகள், ஹாஸ்யத் துணுக்குகள் முதலியவை வரவேற்கப் படுகின்றன. வெளியிடப் படுபவைகளுக்குத் தக்க சன்மானம் உண்டு.

அங்கீகரிக்கப் படாத விஷயங்களைத் திரும்பப் பெற வேண்டுபவர்கள் போதிய ஸ்டாம்ப் உள்ள கவர் வைத்து அனுப்ப வேண்டும்.

குண்டூசி காரியாலயம்,
26, கிடங்குத் தெரு,
சென்னை—1.

மார்ச் 1953

கண்டிராத நிகழ்ச்சி	... தலையங்கம்	5
சாவித்திரி	வாழ்க்கை வர்ணனை	8
குண்டூசியைக் கேளுங்கள்	பதில்கள்	13
மாமியார் ...	பட விமர்சனம்	19
மாதுரி தேவி ...	மூவர்ணப் படம்	21
சாவித்திரி ...	... ஆர்ட் படம்	22
நுனிப்புல் ...	'வெட்டுக்கிளி'	23
நாடகப் பெரியார் கௌரவிக்கப் பட்டார் ...	...	... 30
நாட்டிய முத்திரைகள்	... அ. ரா. கி.	32
ஸீரியா மா ...	ரேடியோ பேட்டி	36
பொதுஜனம் பேசுகிறார் ...	கடிதங்கள்	42
புஸ்தகப் பொழுது ...	விமர்சனம்	48
வீரத்தேவன் கோட்டை ...	'லக்ஷ்மி'	51
பூங்கோதை ...	பட விமர்சனம்	61
ஸ்ரீராம், பி.எஸ்.சரோஜா	ஆர்ட் படம்	63
(யோக) மங்களம்	... ஆர்ட் படம்	64
பி. என். ரெட்டி ...	... 'குதூகலன்'	65
பிரம்மலோகம் ...	படச் செய்திகள்	70
இது செய்தி ...	... செய்திகள்	73
மருமகள் ...	பட விமர்சனம்	81
குண்டூசி டைரி ...	தினக் குறிப்புகள்	84

குறிப்பு:—"குண்டூசி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகள், விகடத் துணுக்குகள் முதலியவைகளில் காணப்படும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. அவை நிஜ நபர் எவரையுமே குறிப்பிடுபவை அல்ல.

குண்டூசி

ஆசிரியர்-பி.ஆர்.எஸ்.கோபால்

நிகரற்ற விநியோகமுள்ள மாத சினிமாப் பத்திரிகை

மார்ச். 1953

| பட்டை—6 | ஊசி—6 | பிரதி—66 |

கண்டிராத நிகழ்ச்சி

தமிழ்நாட்டில் புயலைப்பற்றி எவ்வளவு பேசப் பட்டதோ அவ்வளவுக்கு சென்னையில் சென்ற ஒரு மாத காலமாய் ''எம். ஆர். ஏ.''யைப்பற்றிப் பேசப்பட்டு வருகிறது.

தஞ்சைப் புயல் தமிழ் நாட்டில் பல ஊர்களையும், உயிர்களையும் அழித்துவிட்டுச் சென்றது. ஆனால், எம். ஆர். ஏ. சேதம் அடைந்த உள்ளங்களுக்கு ஒரு புதுக் கொள்கைமூலம் உயிரளித்து அமைதியை நிலைநாட்ட முயலுகிறது.

பத்திரிகைகள் மூலமோ, ரேடியோ மூலமோ, ஒலிபெருக்கி வண்டிகள் மூலமோ பிரசாரம் எதுவுமே யில்லாமல் இந்தக் கோஷ்டி சந்தடியில்லாமல் சென்னையை அடைந்தது. பூ கடைக்கு விளம்பரம் அவசியமில்லை யல்லவா! இக் கோஷ்டியார் சென்னையை விட்டுச் செல்லும்போது அவர்களைப்பற்றி அறியாதவர்களே இல்லை என்றாகிவிட்டது.

''எம். ஆர். ஏ.'' என்பது என்ன? ஆங்கிலத்தில் ''மாரல்-ரீ-ஆர்மமென்ட்'' என்ற பதங்களின் முதல் எழுத்துக்களே இவை. ''நீதிநெறி புனருத்தாரணம்'' என்பதே இதன் அர்த்தம்.

உலக மஹாயுத்தங்கள் இரண்டு நடந்துவிட்டது. இன்னும் உலகத்தில் அமைதியில்லை. அதற்குப் பதில் மூன்றாவது உலக யுத்தம்பற்றிய பயமே அதிகரித்து வருகிறது. உலகத்தினரிடையே நிரந்தர அமைதி நிலவ முடியுமா? எனின், அதற்கு என்ன வழி?—இந்தக் கேள்விகளை டாக்டர் புச்மென் என்ற மேனாட்டு அறிஞர் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார். ''சுயநலம், பேராசை, அகம்பாவம் இவைகளை ஒழித்துவிட்டு, 'யார் சரி' என்பதற்குப் பதிலாக 'எது சரி?' என்று அறிய முற்படவேண்டும். இத்துடன் பிறர் நலம் பேணும் மனப்பான்மையையும் பெற்றால் ஒரு புது சக்தியை நாம் காணமுடியும். தனி நபர்கள் திருந்தினால் தேசம் திருந்தும்; தேசங்கள் திருந்தினால் உலகம் திருந்தும்; உலகம் திருந்தினால் மானிட வர்க்கமே திருந்திவிடும். பிறரைத் திருத்த முயலுவதற்குப் பதில் நாமே முதலில் திருந்தவேண்டும்'' என்பதே புச்மெனின் புதுக்கொள்கை.

பார்க்கப்போனால், இது புதுக் கொள்கையேயல்ல. இந்த சமரச தத்துவங்களை இந்தியாவிலும் இதர பாகங்களிலும் அவதரித்த காந்திஜி உள்ளிட்ட பல மஹான்கள் சொல்லிப் போயிருக்கின்றனர். தத்துவங்கள் தத்துவங்களாக மட்டும் இருந்தென்ன பயன்? அவைகளை மக்கள் உணர்ந்துகொண்டு, கடைப் பிடிப்பதற்காகப் புராணக் கதைகளை எழுதினார்கள். பிறகு, அவைகளை சாதாரண மக்களின் மனதில் பதியச் செய்வதற்கு கதாகால க்ஷேபங்கள், நாடகங்கள் முதலியவற்றைக் கருவிகளாகக் கொண்டார்கள். நாளாவட்டத்தில், வயிற்றுப் பிழைப்பிற்காகச் சிலர் புராணங்களையும், தத்துவக் கதைகளையும் நாடகங்களில் கையாளத் தொடங்கவே, அவைகளிலிருந்து தத்துவப் பகுதி மறைந்து, வெறும் பொழுது போக்கு அம்சம் மட்டும் நிற்கிறது.

டாக்டர் புச்மெனும் தம் தத்துவங்களை பிரசாரம் செய்வதற்கு நாடகங்களையே சிறந்த கருவியெனத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருப்பது கவனிக்கத் தக்

அகில இந்தியப் புகழ் பெற்றவரான வடநாட்டு சினிமா-நாடக நடிகர் பிருதிவி ராஜ் தம் கோஷ்டியுடன் சென்னைக்கு விஜயம் செய்த போது, ஸினி டெக்னிஷ்யன்கள் சங்கத்தினர் அவருக்கு ஒரு வரவேற்பு அளித்து உபசரித்தனர்.

எம். ஆர். ஏ. கோஷ்டியினரையும் ஸினி டெக்னிஷ்யன்கள் சங்கத்தினர் வரவேற்று உபசரித்தனர்.



எம். ஆர். ஏ. கோஷ்டியார் சென்னையில் நடத்திய ''மறந்து போன விஷயம்'' என்ற நாடகத்தில் ஒரு காட்சியை கீழே காணலாம்.

கது. உலகத்தில் பல நாடுகளில் எம்.ஆர். ஏ. நாடகங்கள் நடந்திருக்கின்றன. இக்கோஷ்டியில் ஈடுபட்ட அத்தனைபேரும் புச்மெனின் தத்துவங்களை ஆதரிப்பவர்களானதாலும், ஒவ்வொருவரும் சொந்த ஆர்வத்துடன் நடிப்பதாலுமே எம். ஆர். ஏ. நாடகங்கள் உலகப் பிரசித்தி பெற்றிருக்கின்றன. அவர்கள் எதிர்பார்ப்பது போலவே, இவை பார்ப்பவர்களின் மனதைக் கவர்ந்து, மக்களை நல்வழிப்படுத்தும் சக்தியையும் பெற்றிருக்கின்றன.

நான் இதுவரை எவ்வளவோ நாடகங்களைப் பார்த்தாகிவிட்டது. ஆனால் எம். ஆர். ஏ. நாடகங்களுக்கு இணை அவையே தாம். இரண்டே ஸீன்களை வைத்துக் கொண்டு அவர்கள் ஜெகஜ்ஜாலம்செய்து காட்டினார்கள். மேடைமீது ஒளிவீச்சே ஒரு தனி ரகமாயிருந்தது. நடிக நடிகைகளோ அத்தனை பேரும் பொறுக்குமணிகள். 'சம்பாஷணைகள் முன்பே தயாரிக்கப்பட்டது' என்ற எண்ணம் ஏற்படாதபடி அதிவேகமாய் பேசி, மிக இயல்பாக நடித்தார்கள். சுருங்கச் சொல்ல வேண்டுமானால், மேடையில் ஒரு நாடகத்தைப் பாப்பதாக எண்ணம் துளிக்கூட ஏற்படவில்லை. ஒவ்வொரு சம்பவமும் உண்மையாகவே நிகழ்வது போலிருந்தது. இந்த நாடகங்களை இன்னும் எவ்வளவு வேண்டுமானாலும் புகழலாம். எவ்வளவு புகழ்ந்தாலும் தகும். மக்களின் மனதில் கருத்துக்களை ஆழப் பதியச் செய்யும் விஷயத்தில் நாடகங்கள் சினிமாவுக்கு எந்த விதத்திலும் தாழ்ந்தவை அல்ல என்று இந்த நாடகங்கள் நிரூபித்துக் காட்டின.

எம். ஆர். ஏ. நாடகங்களை நினைத்துவிட்டு நம் நாடகங்கள் பக்கம் திரும்பினால், கண்களை மூடிக் கொள்ளலாமா என்று தோன்றுகிறது. நம் நாடகங்கள் எவ்வளவோ முன்னேற வேண்டியிருப்பது ஒருபுறமிருக்க, சமீப காலமாக, மேடைக்கு வரும் பல நாடகங்களில் நாஸ்திகப் பிரசாரமும், ஆபாசமான காமக் காட்சிகளும், அசம்பாவிதமான கருத்துகளும், அர்த்தமற்ற கதைகளும் காணப்படுகின்றன. இது மாதிரியான பொறுப்பற்ற முயற்சிகளின் விளைவாகவே நம் நாடக மேடை சீர்குலைந்து போயிருக்கிறது. எம். ஆர். ஏ. நாடகங்களைப் பார்த்த பின்னராவது நம் நாடகக் கர்த்தாக்கள் எம். ஆர். ஏ. நாடகங்களைப் போன்ற உன்னதமான நாடகங்களைத் தயாரிக்க முயலுவார்களா!

தங்க பஸ்பம் புகையிலை

காரம்
மணம்
கமழ்வது

N. ARUMUGAM PILLAI
KARAIKUDI.

சாவித்திரி

சந்திர மண்டலத்தையும், செவ்வாய் கிரஹத்தையும் அடைவதற்கென பிரத்தியேகமான ''ராக்கெட்'' விமானங்கள் கட்டப்பட்டு வருகின்றன; இவை முடிவடைந்து, முதல் பிரயாணத்தைத் தொடங்குவதற்கு இன்னும் சுமார் இருபத்தைந்து வருஷங்களுக்கு மேல் பிடிக்கலாம். ஆனல், இந்த விமானங்களின் முதல் யாத்திரையில் பங்கெடுத்துக் கொள்ளுவதற்காக இப்பொழுதே பலர் இடத்தை ரிஸர்வ் செய்துவிட்டார்களாம்! கிரஹ யாத்திரை வெற்றிகரமாக முடிந்தால் பிறகு நக்ஷத்திர யாத்திரை பற்றியும் முயற்சி செய்யப்படலாம்.

சமீப காலத்தில் தமிழ்ப் படவுலகில் பிரவேசித்து, பிரகாசிக்கத் தொடங்கியிருக்கும் தெலுங்கு நக்ஷத்திரம் சாவித்திரியை பேட்டி கண்டு, வாழ்க்கை வர்ணனையை எழுத முயற்சித்தபோது எனக்கு சட்டென்று மேற்படி செய்தி ஞாபகத்திற்கு வந்தது.

சாவித்திரியின் வீட்டிற்குச் சென்று சௌகரியமான நேரத்தைத் தெரிந்து வரும்படி நான்கைந்து தடவை ஆபீஸ் பையனை அனுப்பினேன். ஆனல், ஒவ்வொரு தடவையும், ''ஷூட்டிங்கிற்குப் போயிருக்கிறாராம், ஸார்'' என்ற பதிலுடன் பையன் திரும்பி வந்தான். நானே முன் வைத்த காலை பின் வைக்கும் சுபாவமற்றவன். ஆதலால், ஸ்டுடியோவுக்கே சென்று பார்த்துவிடுவது என்று புறப்பட்டேன். பல தமிழ்-தெலுங்குப் படங்களில் ஏக காலத்தில் நடித்து வரும் இந்த நக்ஷத்திரத்தை எந்த ஸ்டுடியோவில் என்று தேடுவது! இந்தப் பிரச்னை ஏற்பட்ட போதுதான் ராக்கெட் விமானம் பற்றிய எண்ணம் எனக்கு ஏற்பட்டது. வானுலக நக்ஷத்திர-கிரஹ—மண்டலங்களு



''கல்யாணம் பண்ணிப் பார்'' தமிழ்ப் படத்தில் ஜி. வரலக்ஷ்மி, சாவித்திரி.

வாழ்க்கை வர்ணனை.

க்குச் செல்லுவதற்கு விமானங்கள் கண்டு பிடிப்பது பிறகு ஆகட்டும். முதலில் சினிமா நக்ஷத்திர மண்டலத்தைச் சுலபமாக சுற்றி வருவதற்கு அந்த விஞ்ஞானிகள் ஒரு ராக்கெட், கிக்கெட், எதையாவது கண்டு பிடித்துக் கொடுத்தால் நலமாயிருக்குமே என்று எனக்குத் தோன்றியது.

பொதுவாக, பிரபலமடையாத சினிமா ஆசிரியர்களுக்கு நக்ஷத்திரப்பேட்டி சுலபமாய் கிடைத்து விடுவதில்லை. சில ஆசிரியர்கள் இந்தப் பேட்டிக்காக பன்முறை அலைந்து முடிவில் வெற்றி பெறுகிறுர்கள். வேறு சில ஆசிரியர்களோ பல முயற்சிகளுக்குப் பிறகும் தோல்வியுறுவது உண்டு. இது போன்ற துரதிருஷ்டரகத்தைச் சேர்ந்த ஒரு ஆசிரியர் ஒரு பிரபல கன்னட—தமிழ்—தெலுங்கு நக்ஷத்திரத்தின் வீட்டிற்கு விடாப்பிடியாய் பத்துப் பதினைந்து தடவை சென்று பேட்டிகாண முயற்சித்தாராம். பாவம், ஒவ்வொரு தடவையும், ''அம்மா எண்ணெய் தேய்த்துக் குளிக்கருங்க'' என்ற ஒரே பதிலே அவருக்குக் கிடைத்ததாம்! இதே போலத்தான் சாவித்திரியும்

சதா ஷூட்டிங்கிற்குப் போயிருப்பதாகப் பொய் சொல்லியனுப்பி யிருப்பாரோ என்று ஒரு நிமிஷம் சந்தேகித்தேன். ஆனால், பையன், "செல்லப் பிள்ளை ஷூட்டிங் முடிந்தால்தான் அவர் வீட்டிற்கு வருவாராம், ஸார்" என்று அதிகப்படியான ஒரு புதுச் செய்தியை சொன்னதும் இச் சந்தேகம் பறந்துவிட்டது, அதைத் தொடர்ந்து எங்கள் மோட்டா

4, 5—"ஆதர்சம்" என்ற தெலுங்குப் படத்தில் ராமசர்மாவும், சாவித்திரியும்.

ரும் பறந்து சென்று ஏவி.எம். ஸ்டுடியோ விற்குள் நுழைந்தது. நாங்கள் நேராகச் சென்று, "செல்லப் பிள்ளை" ஷூட்டிங் நடந்து கொண்டிருந்த அரங்கத்திற்குள் நுழைந்தபோது, யாரோ ஒரு ஆண் அதுவும் மிகப் பழக்கமான ஆண் பேசிய சில வார்த்தைகள் எங்களை ஸ்தம்பிக்கச் செய்துவிட்டது. மேலே செல்லாமல் அங்கேயே நின்று, கூர்ந்து கவனித்தேன். டைரெக்டர் ப. நீலகண்டனின் குரல் தான் அது என்பதை அறிந்ததும் எங்கள் ஆச்சரியம் அதிகரித்து விட்டது.

"இப்பொழுது நம்மிடம் இருப்பதெல்லாம் சுத்தமான சர்க்கார் நோட்டுகள். கள்ள நோட்டுகளைத்தான் நாம் அங்கேயே மாற்றிக்கொண்டு வந்து விட்டோமே" என்றது அக் குரல்.

"ஓ! நம்ம நீலகண்டனா கள்ள நோட்டு உற்பத்தியில் இறங்கி விட்டார்! ஒருவேளை சீக்கிரமாக கோடீஸ்வரர் ஆகிவிட வேண்டும் என்ற பேராசை ஏற்பட்டு விட்டதோ? சே, சே! ஒருக்காலும் இருக்காது. ஆனால், இப்பொழுது அவர் சொன்னது...!" இப்படி நான் யோசித்து முடிப்பதற்குள் ஸ்டுடியோ நிர்வாகி ஒருவர் "உள்ளே வாருங்கள், ஸார்! ஏன் இங்கேயே நிற்கிறீர்கள்?" என்று கூறி அழைத்துச் சென்று ஷூட்டிங் நடந்து கொண்டிருந்த இடத்தில் எங்களை அமரச் செய்தார். நீலகண்டன் எங்களைப் பார்த்ததும் முக மலர்ச்சியுடன் வணக்

கம் தெரிவித்து விட்டு, "ஓக்கே! ரெடி பார் டேக்! கேட்ஸ் ஆன்!..." என்று உரக்கக் கூறினர். இருள் சூழ்ந்திருந்த ஷூட்டிங் அரங்கம் மறு வினாடியில் ஜகஜ்ஜோதியாய் பிரகாசித்தது. நாங்கள் ஒரு பெரிய பங்களாவின் உட்புறத்தில் இருப்பதாக எண்ணம் ஏற்பட்டது.

உதவி டைரெக்டர், "ஸைலென்ஸ்! ஸைலென்ஸ்!" என்று பலமாகக் கூவினர். உடனே ஒரு மணி ஒலித்தது. அரங்கத்திற்கு வெளியேயிருந்த சிலரும் "ஸைலென்ஸ்! ஸைலென்ஸ்!!" என்று உரக்கக் கத்தினர். எல்லா ஓசைகளும் அடியோடு மறைந்து விட்டன; ஊசி கீழே

1, 3,—"பில்லட் டுரு" என்ற தெலுங்குப் படத்தில்.

2—"தேவ தாஸ்" தமிழ், தெலுங்குப் படங்களில்.

விழுந்தால் கூட சப்தம் கேட்கும்; அவ்வளவு நிசப்தம். சாவித்திரியும், ஹாஸ்ய நடிகர் ராதா கிருஷ்ணனும் கேமிரா முன் நின்றனர். சிறிது நேரத்திற்கு முன்னுல் நீலகண்டனின் வாயினின்று வெளிப்பட்டு எங்களை ஆச்சரியத்தில் மூழ்கடித்த

அதே வசனங்களை நடிகர் ராதாகிருஷ்ணன் தகுந்த நடிப்புடன் கூறினர்! சரிதான். நாங்கள் கேட்டது "செல்லப் பிள்ளை"யில் சேர்க்கப்பட்டு வரும் வசனமா? அப்பாடா!...

இந்த 'ஷாட்' முடிந்ததும் நீலகண்டன் எங்களிடம் வந்தார். "எங்கே, இவ்வளவு தூரம்!" என்று கேட்டார். ஒன்றுமில்லை. இந்த சாவித்திரியின் வாழ்க்கை வர்ணனையை எழுதுவதற்காக ஒரு வாரமாக அவரை வலை போட்டுத் தேடி வருகிறேன்; அகப்படவே யில்லை. அவருடன் நான் கால் மணி நேரம் பேச அநுமதிப்பீர்களா?" என்று கேட்டேன். "தாராளமாய் அநுமதிக்கிறேன். அடுத்த 'ஷாட்' தயாரானவுடன் அனுப்பி வைக்கிறேன். பேசுங்கள். உங்களுக்கு இல்லாத நக்ஷத்திரமா, எங்களுக்கு!" என்று அன்பொழுகக் கூறினர். இப்படி அவர் தாராள மனதுடன் நடந்து கொண்டிரா விட்டால் இந்த மாத ஊசியில் சாவித்திரியின் வாழ்க்கை வர்ணனை நிச்சயம் வெளிவந்திருக்க முடியாது.

கள்ள நோட்டு பற்றிய 'காட்சி'கள் ஷூட்டிங் ஆன பின் சாவித்திரி சிரித்த முகத்துடன் எங்களிருப்பிடத்திற்கு வந்து அமர்ந்தார். உடனே பேட்டி ஆரம்பமாகியது.

பெஜவாடாவைச் சேர்ந்த கொம்மரெட்டி வெங்கடராமய்ய சௌத்ரி என்பவரின் இண்டாவது புத்திரியாக

[தொடர்ச்சி 77ம் பக்கத்தில்]

1—"வஞ்சம்" தமிழ்ப் படத்தில் காந்தா ராவும், சாவித்திரியும்.

2—"செல்லப் பிள்ளை"யில்.

3—"கல்யாணம் பண்ணிப் பார்."

குண்டூசியைக் கேளுங்கள்

சினிமா, நாடகம், நடனம், சங்கீதம் ஆகிய கலைகள் சம்பந்தமாக உங்களுக்குள்ள சந்தேகங்களைத் தீர்ப்பதற்கே இந்தப் பகுதி ஏற்பட்டிருக்கிறது. யாருடைய மனமும் நோகாதபடி தமாஷாகவே பதிலளித்து, மேற்சொன்ன கலைகளைச் சீர்திருத்துவதே என்னுடைய நோக்கமாகும்.

என். ஏ. துரைசாமி (பெரம்பலூர்)

ஆங்கிலேயன் நம் நாட்டை விட்டுச் சென்று ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகின்றன. இருந்தபோதிலும் தமிழ்ப் படங்களிலிருந்து ஆங்கிலச் சொற்கள் அகலவில்லையே? ஏன்?

தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி, மராத்தி, உருது, வங்காளி, சௌராஷ்டிரம், கொங்கிணி பாஷைகளைத் தாய் பாஷையாகக் கொண்டவர்களெல்லாம் தமிழ்ப் படங்களில் நடித்தாகி விட்டது. ஆங்கிலேயர்களையும் நடிக்கச் செய்யாத குறையை ஒருவாறு நீக்குவதற்காக ஆங்கிலச் சொற்களை நிறையப் புகுத்தி வருகிறார்கள் போலும்!

எஸ். வரதன் (கொழும்பு)

நாகேஸ்வர ராவ், என். டி. ராமராவ் —இவ் விருவருள் நடிப்பிலும், அழகிலும் சிறந்தவர் யார்?

என். டி. ராம ராவ்தான்.

நா. கோமதி நாயகம் (நெல்லை)

"பராசக்தி" படத்தில், "டேய்! கும்பகர்ணா எழுந்திரடா!" என்று நாஸ்திகர் கருணாநிதி ஆஸ்திக புராணத்திலிருந்து உபமானம் கூறியிருப்பது சரியா?

சரியல்ல தான். அவர் உதடும், பேனாவும் நாஸ்திகத்தைக் கக்கினாலும், உள்ளம் ஆஸ்திகத்துடனேயே உறவாடிக் கொண்டிருக்கிறது என்பது இதிலிருந்து தெரியவில்லையா!

ஆர். சுந்தர் (பங்களூர்)

மாதுரி தேவி ஒரு வங்காளியை மணம் செய்து கொண்டது அழகிற்கா? பணத்திற்கா? முகர்ஜியைவிட அழகானவர்களோ, பணக்காரர்களோ தமிழ் நாட்டில் இல்லையா?

தனித் தமிழ் வெறி உம் தலைக்கேறியிருக்கிறது என்று உம் கேள்வி அறிவுறுத்துகிறது. ஒரு மில்லில் வட இந்தியக் காவலாளி இருக்கக் கூடாதென்றும்,

பிரசாத் ஆர்ட் புரொடக்ஷன்ஸ் தயாரித்து வரும் "பெற்ற மனம்" தமிழ்ப் படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார் ராஜேந்திரன்.



''காப்பி ஜில்லென்றிருக்கிறதே! அதற்கு உன் குளிர்ந்த பார்வைதான் காரணமோ?'' என்று பாலய்யா (துரைசாமி முறைத்துப் பார்ப்பதைக் கூட கவனியாமல்) ராஜகுமாரியிடம் கூறுகிறார் போலும்?—''வாழப் பிறந்தவள்'' தமிழ்ப் படத்தில் ஒரு காட்சி இது.

வடநாட்டினர் இங்கு ஹோட்டல் நடத்தக் கூடாதென்றும் மறியல் செய்தது எவ்வளவு புத்திசாலித்தனமோ அவ்வளவு புத்திசாலித்தனமானதுதான் உமது கேள்வியும்! காதலும் கல்யாணமும் தனி நபர் சுதந்திரமானவை என்பதைக் கூட நீர் மறந்து விட்டீர்.

எஸ். கிருஷ்ணன் (எட்டியாந்தோட்டை)

சினிமா நக்ஷத்திரங்களுக்கு இந்தியாவில் ஓட்டுரிமை உண்டா?

சினிமா நக்ஷத்திரங்கள் உள்பட வயது வந்தவர்கள் அத்தனை பேருக்கும் ஓட்டுரிமை உண்டு.

எல். செல்வராஜன் (எட்டியாந்தோட்டை)

சமீபத்தில். சென்னையில் மல்யுத்தம் செய்த தாராசிங் படத்தில் நடிக்கப் போவதாகக் கேள்விப் படுகிறேன். உண்மைதானா?

இல்லை. அவருடைய மல்யுத்தத்தை மட்டும் துண்டுப் படமாய் தயாரித்துக் காட்டுவதற்குச் சில படமுதலாளிகள் முயற்சிக்கின்றனர். இத் துண்டுப் படத்தை சினிமா ரஸிகர்கள் அனைவரும் பார்த்தார்களானால், கள்ள மார்க்கெட் நபர்களிடம் டிக்கெட் வாங்காது, அஞ்சாமல் முண்டியடித்துக்கொண்டு சென்று டிக்கெட் வாங்குவதற்குத் தானாக தைரியம் ஏற்பட்டு விடும்!

''குண்டூசி ரஸிகன்'' (மல்லசமுத்திரம்)

சினிமாவில் சேரவிரும்பும் ஒருவனுக்கு என்னென்ன அம்சங்கள் அமைந்திருக்க வேண்டும்?

முக அழகு, பொதுத் தோற்றம், நடிப்பு, பேச்சு, பாட்டு, குறைந்தபட்சம் சாதாரணப் படிப்பு, விஷயங்களை எளிதில் புரிந்துகொள்ளும் தன்மை, மற்றவர்களுடன் ஒத்துழைக்கும்-சங்கோஜமற்ற

சகஜ குணம், உலக அனுபவம்— இந்த அம்சங்கள் பூராவாகவோ, பெரும் பாலோ பொருந்தியிருக்க வேண்டும். "தற்போது சினிமாவில் நடிப்பவர்களில் ஒருவரிடம் கூட மேற்சொன்ன அம்சங் கள் பூரணமாகப் பொருந்தியிருக்க வில்லையே" என்று கேட்டுவிடாதீர்.

பி. கே. சுகுமாரன் (தஞ்சாவூர்)

ஸி. ஆர். ராஜகுமாரி, பி. எஸ். சரோஜா இருவரும் மலையாள நடிகை களா?

சரோஜா மட்டுமே மலையாள தேசத் தவர். ராஜகுமாரி காஞ்சீவரத்தைச் சேர்ந்தவர்.

"கலை அரசு" (கடலூர்)

சினிமா ஸ்டுடியோக்களில் 'இரும்புத் திரை'க்குப் பின்னல் நடக்கும் மர்மங் கள் என்ன?

துப்பாக்கிக்குப் பதில் கேமிரா மூலம் 'சுட்டுத் தள்ளி' கலைக்'கொலை' செய்கி ருர்கள்! ஆனல், இரும்புத் திரைக்குப் பின் நிகழும் இந்த மர்மங்களெல்லாம் துப்பறிபவனின் துணையின்றியே வெள் ளித்திரை முன் அம்பலமாகி விடுகின்றன!

எஸ். எக்ஸ். கே. சாமிப்பிள்ளை (அவசாவெல்ல)

மாநில வாழ்க்கையை தென்றலாகக் கருதுவதா? அல்லது புயலாகக் கருது வதா?

கல்யாணத்தின் முன் நின்ருல் வாழ்க் கையை தென்றலாகக் கருதலாம்; காதல் முன் நின்ருல் புயலாகக் கருதவேண்டி யிருக்கும்!

ஸி. ஆர். ராமராஜு (குப்பம்பாளையம்)

எம். வி. ராஜம்மா, மாதுரி தேவி, லலிதா, பத்மினி, ஸ்ரீரஞ்சனி, ஜி. வர லக்ஷ்மி இவர்களில் அழகில் சிறந்தவர் யார்? சோக நடிப்பில் சிறந்தவர் யார்?

அழகில் பத்மினியைச் சிறந்தவரென்று கருதுகிறேன். சோக நடிப்பில் ஜி. வர லக்ஷ்மிக்கு முதல் மார்க் அளிக்கலாம்.

பிரகாஷ் புரொடக்ஷன்ஸ் தயாரித்துக் கொண்டிருக்கும் "பெற்ற தாய்" தமிழ்ப் படத்தில் எம். என். நம்பியாருக்கு சிவராம் ஏதோ குயுக்தி சொல்லிக் கொடுக்கிருர் போலிருக்கிறது.

ஸ்ரீ ரஞ்சனியோ சாதாரணமாகவே சோகத் தோற்றத்துடன் காட்சியளிக்கிறார்.

சுப்பிரமணியன் (மதுரை)

ரஞ்சன் தற்போது எந்த தமிழ்ப் படத்தில் நடிக்கிறார்?

ரஞ்சன் தற்போது தமிழ்ப் படங்களில் நடிக்கவில்லை. அவர் ஹிந்திப் படங்களில் நடித்து வருவதோடு, ஒரு ஹிந்திப் படம் டைரெக்ட் செய்வதிலும் முனைந்திருக்கிறார்.

ஆர். ராமச்சந்திரன் (பண்ருட்டி)

எனக்கு வயது இருபது. நான் ஒரு சினிமா நடிகனாக வேண்டும். இதற்கு என்ன செய்யவேண்டும்?

"நம்மைவிட எவ்வளவோ அதிக வயதானவர்கள் எத்தனையோ பேர்கள் சினிமாவில் சேர முடியாமல் தவிக்கும்போது நமக்கு என்ன அவசரம்"—என்று நீர் மனதைத் தேற்றிக் கொள்ள வேண்டும்!

'டெக்னிக் பிரியன்' (பாளையங்கோட்டை)

சந்திரலேகா, கன்னியின் காதலி, கைதி, தாய் உள்ளம், மல்லேஸ்வரி ஆகியவற்றில் சினிமா டெக்னிக் சிறப்புக்குத் தக்கபடி வரிசையாய் கூறவும்.

"சந்திரலேகா". "தாய் உள்ளம்", "மல்லேஸ்வரி", "கன்னியின் காதலி", "கைதி" என்று வரிசைப்படுத்தலாம்.

ப. பன்னீர் செல்வம் (தாராபுரம்)

சிவாஜி கணேசன் 'புயல் நிவாரண நிதி'க்கு ரூ. 1000 நன்கொடையளித்திருக்கிறாரே, அதுபோல் மற்ற நக்ஷத்திரங்களும் தாராளமாய் உதவுவார்களா?

புயல் நிவாரணத்திற்கு நன்கொடை அளித்திருக்கும் நக்ஷத்திரங்களின் ஜாபிதாவைப் புரட்டிப் பார்த்தால் அவமா

"வேஷத்திற்கு ஏற்றபடி என்னால் வீரமாகவும் நடிக்க முடியும்." லிபர்ட்டி பிக்சர்ஸின் "மதன மோஹினி" தமிழ்ப் படத்தில் வி. ஆர். ராஜகுமாரியும், நரசிம்ம பாரதியும்.

சோகமும், சோகமும் ஒன்று சேர்ந்தால்?...''செல்லப் பிள்ளை''யில் கண்ணம்பாவும், பண்டரி பாயும் நடிக்கின்றனர்.

னமே ஏற்படுகிறது. முன்னணியில் நின்று லக்ஷக் கணக்கில் சம்பாதிக்கும் நக்ஷத்திரங்களெல்லாம் பத்தும் பதினைந்தும் நன்கொடை அளித்திருப்பது வெட்கக்கேடாயிருக்கிறது.

''திடீர் குபேரன்'' (மதுரை)

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா என்பதற்கிணங்க நடிப்பிலும், பாட்டிலும், வசனத்திலும் நற்கியாதி பெற்றிருந்த பி. யூ. சின்னப்பாவின் புத்திரன் ராஜாபகதூர் தகப்பனரின் ஸ்தானத்தை எட்டிப் பிடிப்பாரு?

பேஷாய் இருக்கிறது உம் கேள்வி! எங்கே நூற்றுக்குள் ஒரு நம்பர் சொல்லும் பார்க்கலாம்!

நா. கோமதி நாயகம் (நெல்லை)

திரைப்படம் சம்பந்தமான விஷயங்களை நேர்மையான முறையில் நேயர்கள் எழுதி அனுப்பினல் ஏற்றுக் கொள்ளுவீர்களா தங்களுடைய பத்திரிகையில்,

நேயர்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தங்கு தடையின்றி வெளியிட வேண்டும் என்பதற்காகவே ''பொதுஜனம் பேசுகிருர்'' பகுதி சேர்க்கப் பட்டுள்ளது.

கே. ஆறுமுகம் (கோயமுத்தூர்)

எம். கே. டி. பாகவதர், டி. ஆர். மஹாலிங்கம் இவர்களில் யார் அதிக இனிமையாய் பாடக்கூடியவர்? இவர்கள் நடித்த படங்களில் எவற்றை முதன்மையாகக் கூறலாம்?

தற்போதைக்கு இருவரது பாட்டுமே ஒரு மாதிரியாகத் தானிருக்கிறது. பாகவதர் நடித்த சிறந்த படம் ''ஹரிதாஸ்'', மஹாலிங்கம் நடித்த சிறந்த படம் ''நாம் இருவர்''.

கே. கங்காதரன் (குளித்தலை)

''பொன் வயல்'' படம் எப்பொழுது வெளிவரும்?

இப்படம் இப்பொழுது பாதியளவு தயாராகி யிருக்கிறது.

பியூலாராணி (தட்டப்பாரை)

டைரெக்டர் பிரகாஷ்ராவின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

அவருடைய பெயருடன் — பிரகாஷ் ஸ்டுடியோ, கோடம்பாக்கம். சென்னை-24—என்று சேர்த்துக்கொள்ளும்

ஏ. டபிள்யூ. எம். நசூன் (கொழும்பு)

நான் ''வாள் வீரன்'' என்ற கதையை எழுதியிருக்கிறேன். இது விசேஷமாக சிறுவர்க்கென்றே எழுதப்பட்டது. இதை ஜெமினிக்கு அனுப்பினல் படமாகத் தயாரிப்பார்களா?

நான் எப்படிச் சொல்ல முடியும். அனுப்பிப் பாரும். சிறுவர்க்கான கதை என்பதால், ''இப்படத் தயாரிப்பில் உபயோகிக்கும் கத்திகள் அட்டைக் கத்திகளாக இருக்கவேண்டும்'' என்ற முக்கிய குறிப்பை சிகப்புமையில் எழுதியனுப்பும்.



தட்டு நிறைய பெரிய முறுக்குகளைப் பார்க்கும்போது ஜி. வரலக்ஷ்மியும், கே. ஆர். செல்லமும் ''ரேஷன் முடிவு விழா''க் கொண்டாடப் போவதாகத் தோன்றுகிறதல்லவா? பிரகாஷ் புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் ''பெற்ற தாய்'' தமிழ்ப் படத்தில் ஒரு காட்சி இது.

பார்வதி (மாதுங்கா, பம்பாய்)

நீங்கள் ஸ்ரீராமின் விலாஸத்தில் ''ராஜா பாதர் தெரு'' என்று குறிப்பிட்டிருக்கிறீர்களே? இது ''ராஜப்பா தெரு'' என்று இருக்கவேண்டுமோ?

இல்லை, நான் சரியாகவே குறிப்பிட்டிருக்கிறேன். அது ''ராஜாபாதர் தெரு'' தான்.

மாலதி (ஆயிங்குடி)

கலை முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் நடிகர், நடிகைகள், டைரெக்டர்கள், முதலாளிகள் படவுலகில் எத்தனை பேர்கள் இருப்பார்கள்?

அதிகப்படியாக மதிப்பிட்டால் 5 சதவிகிதம் எனக் கூறலாம்.

கிருஷ்ண குமார் (புனா)

ஏவி. எம். தயாரிக்கும் ''லட்கி'' (பெண்) படம் எப்பொழுது வெளிவரும்?

இப்பொழுது பாதிக்குமேல் தயாராகிவிட்டது—என்பதை மட்டும்தான் நான் கூறமுடியும்.

அ. தங்கய்யன் (திருச்சி)

பாலச்சந்தரின் மனைவி சாந்தா சினிமாவில் நடித்திருக்கிறாரா?

இல்லை. அவருக்கும் சினிமாவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

கே. ஜே. வேலாயுதம் (திருநெல்வேலி)

''சிகாமணி'', ''சிவலீலா'', ''சிவயோகி'' ஆகிய மூன்று படங்களும் வெளிவந்தனவா?

இவற்றுள் ''சிகாமணி'' மட்டுமே வெளிவந்தது. ''சிவயோகி'' பாதிக்குமேல் தயாரிக்கப்பட்டது; ஆனால் வெளிவரவில்லை. ''சிவலீலா'' தயாரிக்கப்படவேயில்லை.

"மாமியார்"-ஒரு அசம்பாவிதப் படம்

அசட்டுக் கதையுடன் வெறுக்கத்தக்க காட்சிகள்

"முன்னால் பார்த்தால் செட்டியார் குதிரை மாதிரியும் பின்னால்பார்த்தால் ராவுத்தர் குதிரை மாதிரியும் இருக்கிறது" என்று ஒருவன் சாட்சிசொன்ன கதைதான் "மாமியாரை"ப் பார்த்ததும் எனக்கு நினைவுக்கு வந்தது. அவனாவது அதைக் குதிரை என்று ஒப்புக் கொண்டான்; ஆனால், "மாமியாரை" படம் என்று சொல்லுவதைவிட "சர்வ பிதற்றல்" என்றுதான் கூறவேண்டும். முன் பகுதியைப் பார்க்கும்போது மாமியார்களுக்கு ஒரு சூடு கொடுக்கும் கருத்துடன் படம் முடியுமோ என்று தோன்றியது; ஆனால் பின் பகுதியோ மருமகள் ஒருத்தி பண்ணும் அட்டஹாஸங்கள் கொண்ட ஹாஸ்யக் கதம்பமாக இருக்கிறது. ஆக மொத்தம், படம் ஒரு கோமாளிக் கூத்தாக முடிந்திருக்கிறது.

ஒரு மாமியார், பணம் காசு இல்லாது வரும் மருமகளைக் கொடுமைப் படுத்துகிறாள். அந்தக் கைங்கரியத்தில் நாத்தனாரும் கலந்து கொள்ளுகிறாள். மருமகளைக் கொடுமைப் படுத்துவதற்காக மகளையே வீட்டைவிட்டு அப்புறப்படுத்தவும் தாய் தயங்கவில்லை. பிறகு, மருமகளையும் வீட்டைவிட்டு விரட்டி விடுகிறாள். இரண்டாவது மகனுக்கு நவநாகரிக மங்கை ஒருத்தியை மணம்செய்து வைத்து அவள் ஆட்டியபடி ஆடுகிறாள். இடையில் விதவையான மகள் கள்ளப் புருஷனுடன் ஓடிவிடுகிறாள். அப்பொழுதுதான் முதல் மருமகளின் அருமை தெரிகிறது. பிறகு, கதை சுபமாகவே முடிக்கப்படுகிறது.

கதையில் எந்தவிதமான புதுமையும் கிடையாது. அசட்டுத்தனமான கற்பனை அளவுகடந்து போயிருக்கிறது. மருமகள் மாமியாரிடமும், மாமனாரிடமும் எழுதி வாங்கிக்கொண்டு கல்யாணம் செய்து கொள்வதாக உள்ள கற்பனை சுத்த அபத்தம். "மாமியார்" என்பதற்குப் பதில் "விதவையின் காதல்" என்று பெயர் கொடுத்திருக்கலாம். சாதாரணக் காதல் கூட இல்லை; விதவையின் கள்ளக் காதல்! இந்த அம்சம் கதையில் அருவருப்பை அளிக்கும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது. ஒரு விதவை முதன் முதலில் சந்திக்கும்ஒரு ஆண் மகனுடன் மோட்டார் ஸைக்கிளில் ஏறிப் போய்விடுவாள் என்பது கதாசிரியரின் அபார கற்பனையில்தான் நடக்கக் கூடியது! உமா ஒரு காமாந்தகாரனிடம் அகப்பட்டுக் கொள்வதும், அவனைத் திருத்துவதுமான காட்சிக்கும் கதைக்கும் சம்பந்தமே கிடையாது. படத்தின் நீளத்தை வளர்த்தவே பல சம்பவங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. காமா சோமா வென்ற கதையமைப்பு படத்தைக் குட்டிச் சுவராக்கி யிருக்கிறது.

கதை அமைந்திருக்கும் அழகுபோல் தான் இருக்கிறது வசனங்களும்—சர்வ சாதாரணமாக. சில இடங்களில் பிராமண பாஷையாகவும் மற்ற இடங்களில் வேறு மாதிரியாகவும் இருக்கின்றன. 'அழகு நிலவினிலே' என்ற ஒரு பாட்டைத் தவிர மற்ற பாட்டுகளின் சாஹித்யம் நன்றாக இல்லை. பல பாட்டுகள் வசன காவியங்களாகவே இருக்கின்றன.

மாமனாராக வரும் பி. ஆர். பந்துலு அதிகம் அலட்டிக் கொள்ளாது நன்றாக நடித்திருக்கிறார். மனோஹர் கதாநாயகனாய் கச்சிதமாக நடித்திருக்கிறார். சரியானபடி மேக்-அப் செய்யப் படாமையால் குளோஸப்புகளில் முகம் ஒருமாதிரியாக இருக்கிறது. அசட்டு வெங்கடேசனாக வரும் ரேலங்கியின் நடிப்பை சகிக்க முடியவில்லை. ஹாஸ்ய பாத்திரம் என்ற

மாமியார்

தயாரிப்பு :

ஸ்ரீ கஜானனா புரொடக்ஷன்ஸ்

கதை : சதாசிவ பிரம்மம்

வசனம் : எம். எஸ். சுப்ரமண்யம்

ஸ்டுடியோ : ரேவதி

டைரெக்ஷன் : கே. வேம்பு

நீளம் : 17,727 அடிகள்

நடிகர்கள் :

மனோஹர், பி. ஆர். பந்துலு, ரேலங்கி, எஸ். வரலக்ஷ்மி, பி. எஸ். சிவபாக்கியம், கிரிஜா, சூர்யகாந்தம், மற்றும் பலர்.

பெயரில் அவர் பண்ணும் கொனஷ்டைகள் ரொம்பவும் அருவருப்பை அளிப்பதாக இருக்கிறது.

கொடுமையான பாத்திரங்களில் நடிப்பதில் பெயர் பெற்ற பி. எஸ். சிவபாக்கியம் அசல் மாமியாராகவே காட்சி அளிக்கிருர். கதாநாயகி உமாவாக வரும் எஸ். வரலக்ஷ்மியின் நடிப்பு திருப்திகரமாக இல்லை. நடிப்பை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் பல இருந்தும் அவைகளைத் தவறவிட்டிருக்கிருர். நாத்தியாக வரும் சூரியகாந்தம் பரவாயில்லை. ஆட்டி வைக்கும் மருமகளாக வரும் கிரிஜா நடிப்பில் நன்கு அபிவிருத்தி அடையவேண்டும்.

மட்டமான கதையைக் கொண்ட ''மாமியாரை'' வேம்பு சிரமப்பட்டு டைரெக்ட் செய்திருக்கிருர். ஆனல், அவருடைய திறமை சோபிக்காமல் போனதுடன் 'ஒன்றுமே இல்லை' என்று சொல்லும்படியும் இருக்கிறது.

படத்தில் எவ்வளவோ குறைகள் உள்ளன. பி. ஏ. பாஸ் பண்ணிவிட்டதாகக் கூறும் சங்கர், பின்னல், ''பரீக்ஷைக்கு இன்னும் பத்து நாள்கூட இல்லை'' என்று சொல்லுகிருன். கார் விபத்து சரியானபடி சித்திரிக்கப்படாமல் ஒரே குழப்பமாய் இருக்கிறது. கார் விபத்து நடக்கும் இடத்துக்கு சங்கரன், அவனது தம்பி, அவன் மனைவி, இவர்கள் வரவேண்டிய பிரமேயம் என்ன? டைரெக்ஷனைப் பொருத்தவரை படத்தில் இரண்டொரு இடம் ரொம்ப உயர்வாகவும் இருக்கிறது. கையில் இருந்ததெல்லாம் போன பின் 'அடுத்தது என்ன' என்று கதாநாயகன் யோசிப்பதை, மணலில் கேள்விக் குறி போட்டுக் காட்டிய இடம்; உமாவின் உபதேசம் கேட்ட காமுகனுக்கு ஞானோதயம் ஏற்படும் கட்டத்தில் அவன் முகத்தில், கதவுக்குள் கதவாக பல கதவுகள் திறந்து கொள்வது ஆகியவைகளைக் குறிப்பிடலாம்.

ஒலிப் பதிவு, ஒளிப்பதிவு, இரண்டுமே சுகமில்லை. மொத்தத்தில், ''மாமியார்'' படத்தைப் பார்த்தபோது, சமூகப்படங்களின் நிலை ''வர வர மாமியார்........ ஆனளாம்'' என்ற மாதிரி ஆகிவருகிறதே என்று நான் வருந்தாமலிருக்க முடியவில்லை.

—'ஜாம்பவான்'

படித்துக் கொண்டிருப்பது தெரியாமல் அந்த ஸ்திரீ (குமாரி) கைக் குழந்தையுடன் வந்து தொந்தரவு கொடுப்பதை ரங்காராவ் பெரிய 'இன்ஸல்ட்'டாகக் கருதக்கூடும், பிரஸாத் ஆர்ட் புரொடக்ஷன்ஸாரின் ''பெற்ற மனம்'' தமிழ்ப் படத்தில் ஒரு காட்சி.



மாதுரி தேவி

ஜூபிடர்—லாவண்யா கூட்டுத்
தயாரிப்பான "மனிதன்"
தமிழ்ப் படத்தில் மாதுரி தேவி.

ஏவி. எம். "செல்லப் பிள்ளை" தமிழ்ப் படத்தில்

சாவித்திரி

நுனிப்புல்

'வெட்டுக்கிளி'

சென்ற மாத ஊசியில் 'அஸ்வப் பிரியர்கள்' பற்றி நான் எழுதி யிருந்ததைப் படித்துப் பார்த்த, தமிழ் நாட்டின் பிரபல நாவல் ஆசிரியை ஒருவர் என்னைப் பாராட்டினார். "அடடே, சினிமா உலகிலுள்ள இவ்வளவு பேர்களா குதிரைப் பந்தயத்திற்கு வருகிறார்கள்!" என்று ஆச்சரியப் பட்டார். "அந்த ஜாபிதா வரும் ஊசியிலும் தொடரப்போகிறது" என்று நான் சொன்னபோது "நல்ல வேளையாப் போச்சு, முன்னாடியே சொல்லி வைத்தீர்களே" என்று சொன்னார். "ஏன்? என்ன?" என்று நான் கேட்ட போது விஷயத்தைச் சொன்னார். அவரும் ரேஸுக்கு—வேடிக்கை பார்க்கத்தான்—போக வேண்டுமென்று இருந்தாராம். "அப்படி நான் போயிருந்தால் என் பெயரும் அல்லவா உங்கள் ஜாபிதாவில் இடம் பெற்றிருக்கும். முன்னதாகவே நீங்கள் சொல்லி வைத்ததினால் நான் போகாமல் நின்று விட செளகரியமாக இருக்கிறது" என்று விளக்கினார். ஆனால், ரேஸுக்குப் போகிறவர்கள் அது பிறருக்குத் தெரிந்து விட்டதே என்று கவலைப்பட வேண்டியதில்லை. குடிப்பது போலவோ, மற்ற துர்ப் பழக்கங்களைப் போலவோ அது ஒன்று என்று நான் சொல்ல மாட்டேன். அது பணக்காரர்களின் பொழுது போக்கு சாதனம்; அதே சமயம் பாடுபட்டு உழைக்கும் பாமரர்கள் மறக்க வேண்டிய விஷயம்.

* * *

"மிஸ் மாலினி" படத்தில், சம்பத்தின் சகவாசத்தால் குதிரைப் பந்தயத்திற்குப் போய் பணத்தைத் தொலைக்கும் பாத்திரமாக நடிக்கும் புஷ்பவல்லி நிஜ வாழ்க்கையிலும் அந்தப் பழக்கம் உள்ளவர் தான். அவர், நிரந்தரமாக இல்லாவிட்டாலும், எப்பொழுதாவது அங்கு வரத்தான் செய்கிறார். இவரைப் போல் தான் எஸ். வரலக்ஷ்மி, பி. ஏ. பெரியநாயகி, எஸ். ஆர். லக்ஷ்மி ஆகியவர்களும். இவர்கள், ஓடும் குதிரைகள் மீது பணம் கட்டி ஆடுவதை விட, அப்படிக் கட்டி 'கோட்டை' விடுகிறவர்களை வேடிக்கை பார்ப்பதையே தான் நான் அதிகமாகப் பார்த்தேன்.

* * *

நடிகர், டைரெக்டர், பத்திரிகாசிரியர் என்ற மூன்று பெரும் பொறுப்புகளையும் பெற்ற எஸ். கிருஷ்ணஸ்வாமி, ரேஸிலும் தமது அதிர்ஷ்டத்தைப் பரிசோதிக்க வந்து விடுகிறார். அவர் யாருடனும் கலந்து ஆலோசனை கேட்பதே கிடையாது; பேசுவது கூடக் கிடையாது. ஏன், அங்கு வரும், தமது உறவினரும், தாம் இத்துறைக்கு வர ஓரளவு காரணமாக இருந்தவருமான சகோதர பத்திரிகாசிரியர் டி. வி. ராமநாத்திடம் கூட அவர் யோசனை கேட்டு நான் பார்க்கவில்லை. இவருடைய "யோகம்" குதிரைப் பந்தயத்தைப் பொறுத்தமட்டில் எப்படி என்பதை நான் அவரிடம் விசாரிக்க மறந்து விட்டேன்.

* * *

இந்த ஜாபிதாவில் சேர்ந்தவர்களென இரண்டு சங்கீத டைரெக்டர்களைத்

ரூ. 5 க்கு 15 ஜ்வெல் கைக்கடிகாரம்

ரூ. 5-க்கு ஒரு பவுண்டன் பேனாவும், 15 ஜ்வெல் கைக்கடிகாரமும் அடையலாம். அழகுக்கும், உறுதிக்கும் 15 வருஷ உத்தரவாதம்.

AMERICAN SWISS WATCH SUPPLIER
Putli Ghar (G. M) Amritsar

ரூ. 5க்கு ஒரு ரேடியோ!

மின்சாரமோ, பாட்டரியோ இல்லாமல், ஸ்பஷ்டமான, இனிய நாதத்தைக் கொடுக்கும். எமது புதிய திட்டத்தை பிரபலப்படுத்தவே இவ்விதம் கொடுக்கிறோம். குறைந்த அளவே ஸ்டாக் உள்ளது. ஏமாற்றமடைவதைத் தவிர்க்க உடனே விண்ணப்பித்துக் கொள்ளவும்.

AMERICAN CORPORATION
P. B. No. 86, (G.M) Amritsar.

''இந்தத் தோல் பையிலிருப்பது பணமா, மருந்தா? சொல்லுங்கள் பார்க்கலாம்''—என்று கேட்கிறாரோ எம். என். நம்பியார் ''நாம்'' தமிழ்ப் படத்தில்?

தான் நான் கடந்த மாத ஊசியில் குறிப்பிட்டிருந்தேன். முக்கியமான ஒரு நபரை மறந்தே போனேன். இப்பொழுது பட முதலாளியாகவும் கூட மாறி யிருக்கும் சங்கீத டைரெக்டர் ஜி. ராமநாதனும் இந்த கோஷ்டியில் ஒருவர். இவர், ஒரு பெரிய வெள்ளை வேஷ்டியைத் தலையில் முண்டாசாகக் கட்டிக்கொண்டு, பெரிய கூலிங் கிளாஸ் ஒன்றையும் போட்டுக் கொண்டு, கூடத் துணைக்கு அழைத்துக் கொண்டு வரும் சகபாடிகளுடன் கொழ கொழவெனப் பேசியபடி கலகலப்பாக இருக்கிறார். ஒவ்வொரு பந்தயத்திலும் ஆடுவதை விட 'ட்ரிபிள்' ஆடுவதிலேயே இவர் அதிகமாகக் கவனம் செலுத்துகிறார். ஒரு குறிப்பிட்ட தினம் அவர் 'ட்ரிபள்' டிக்கெட் வாங்கி வெற்றி பெற்ற போது, தாம் தயாரிக்கும் படம் மேற்கொண்டு ஆயிரம் அடிகள் வளர்ந்திருந்தால் எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பாரோ, அவ்வளவு சந்தோஷப்பட்டார்.

* * *

அதிருஷ்டப் பரீட்சைக்கு அங்கு வரும் மற்றொரு இரட்டையர் ''மதன மோஹினி'' பட சம்பந்தப் பட்டவர்கள். அப் படத்தின் மேற்பார்வையாளர் ஜே.ஸின்ஹாவும்—பட டைரெக்டர் எம். எல். பதியும் தான் அந்த ஜோடி. படத்தை உருவாக்குவதில் இருவரும் கலந்து ஆலோசித்து காரியத்தை முடித்தது போலவே, அங்கும் இருவரும் ஆழ்ந்து யோசித்து, அஸ்வ ஜாதகங்களை ஆராய்ந்து தான் டிக்கெட் வாங்குகிறார்கள்.

* * *

ஜெமினி ஸ்டுடியோவில் 'மேக்-அப் மென்'னாக இருந்துவரும் ராமகிருஷ்ண ராவ் தவறாது கிண்டி அஸ்வ பூமியில் ஆஜராகி விடுகிறார். அவர் ரொம்ப அடக்கமாக, யாரிடமும் பேசாமல் தமது போக்கிலே ஆடுகிறார். அவருக்கு நஷ்டமா லாபமா என்பதை அவர் முகத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளவே முடியவில்லை. அவர் செய்வது மேக்-அப் வேலை அல்லவா? ஆகவே, ஒரு நாள் 'கையைக் கடித்து' விட்டாலும் மற்றொரு நாள் மேக்-அப் (ஈடு) செய்து கொள்ளலாம் என்ற தைரியம் அவருக்கு இருக்கலாம்.

* * *

''நான் தயாரித்த படம் எப்படியானாலும், நான் புள்ளி போடும் குதிரை தோல்வி அடையாது; வெற்றிதான் பெறும்'' என்று கூறுகிறவர்போல, மைதானத்திலே பிரபல ஆசாமிகளுக்கிடையே வளைய வருகிறார் சுகுமார் டி. வி. சுந்தரம். தமது பேடண்ட். நீலக் கலரிலே வெள்ளை நீளக் கோடுகள் போட்ட

"இது சுலபம்...

லக்ஸ் டாய்லட் சோப் உபயோகித்து அதிக அழகுடன் விளங்குங்கள்" என்று கூறுகிறார்

ராகினி

ராகினி கூறுவதாவது: "நான் வழக்கமாக லக்ஸ் டாய்லட் சோப் உபயோகித்து பெறும் சரும பாதுகாப்பை ஒருபொழுதும் தவறவிடமாட்டேன். லக்ஸ் டாய்லட் சோப்பின் சருமத்திற்கு ஊட்டமளிக்கும் சக்தி என் சருமத்தில் அற்புத மாறுதலை ஏற்படுத்தியிருப்பதைக் காண்கிறேன்... சருமத்திற்கு புது சோபையும், மகிழ்ச்சிதரும் வழவழப்பும் அளித்திருக்கிறது."



லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 360-50 TM

''பொன் வயல்'' படத்தில், மனோஹர் மல்கோவா மாம்பழத்தின் இனிமையைப் பற்றி மைனாவதியிடம் விவரித்துக் கூறுகிற மாதிரியிருக்கிறதல்லவா?

'கோட்'டை அணிந்துகொண்டு புகுந்து புகுந்து டிக்கெட்டுகள் வாங்குவதில் மும்முரமாக இருக்கிறார். வழக்கமான 'கோட்' அணிந்துவரும் அவர், அங்கு கோட்டை விடுவதில்லை என்று நினைக்கிறேன்.

*　　　*　　　*

இவர்கள் தவிர, உதிரியாக அங்குவரும் அதிகப் பிராபல்யமில்லாத, சினிமாப் பிரமுகர்கள் அனந்தம். இப்படிப்பட்டவர்கள் நிரந்தரமாக வருகிறவர்கள் இல்லை. கையில் பணப் புழக்கம் இருக்கிறபோதுதான் வருகிறவர்கள். அந்த நீண்ட ஜாபிதாவில் பீம்ஸிங் ஸாயிராம் என்ற குட்டி ஹாஸ்ய நடிகரும், ராமய்யா சாஸ்திரி என்ற பழையகால ஹாஸ்ய நடிகரும் குறிப்பிடத்தக்கவர்கள். ஏதாவது ஒரு படத்தில் சொற்பத் தொகை வாங்கி விட்டார்களானால் போதும், அவர்களை கிண்டியிலே பார்த்துக் கொள்ளலாம் — அந்த வாரத் ''திருவிழா''வின்போது நிச்சயமாக.

நேரிடையாக சில நக்ஷத்திரங்கள் பிரசன்னமாகி ஆட்டத்திலே ஈடுபடாவிட்டாலும் அவர்களுக்குச் சம்பந்தப்பட்டவர்கள் வந்து அதிருஷ்டப் பரிட்சை செய்கிறார்கள். அப்படிப்பட்ட சிலரை மட்டும் இங்கு குறிப்பிடுகிறேன். முதலாவதாக, நடிகை மேனகாவின் தாயார். அவர், யாருடைய கண்ணிலும் பட்டுவிடக்கூடாது என்பதற்காக கூடிய வரை பதுங்கிப் பதுங்கியே டிக்கெட் வாங்குவதிலும், வெற்றி ஏற்பட்டால் டிக்கெட்டைப் பணமாக மாற்றுவதிலும் ஈடுபட்டிருக்கிறார். அடேயப்பா! கடைசிப் பந்தயம் முடிந்ததும், அவர் 'எலக்ட்ரிக் ட்ரெயின்' ஏறிப் போக மைதானத்தை விட்டு வெளிப்படும் வேகத்தைப் பார்க்கும் யாரும் கண்டிப்பாக பிரமித்துப் போகாமல் இருக்க முடியாது.

மற்ருெரு நக்ஷத்திரப் பிரதிநிதி ஹாஸ்ய நடிகை எம். எஸ். சுந்தரி பாயின் தாயார். அவர் மற்றவர்களைப்போல கிண்டி ஸ்பெஷல் பஸ்ஸுக்குக் காத்து நிற்பதோ, டாக்ஸியைத் தேடிப் போவதோ கிடையாது. ராயப்பேட்டையில் இருக்கும் தம் வீட்டிலிருந்து கிண்டிக்கு (சுமார் பத்து மைல்கள்!) நேரே ஜம்மென்று வாடிக்கை ரிக்ஷாவிலேயே வந்து இறங்கி விடுகிருர். மைதானத்திற்குள்ளே வந்ததும் ஒரு மரத்தடியில் நிழலில் நின்றபடி, எதிர்ப்படும் தமக்கு அறிமுகமான நபர்களிடமெல்லாம், "எந்தக் குதிரை வெற்றி பெறும்" என்று யோசனை கேட்டுவிட்டு, தமது கணக்குப்படி, இஷ்டப்படி டிக்கெட் வாங்குவார். அந்தக் குறிப்பிட்ட குதிரை ஜயித்து விட்டால், "எனக்குத் தெரியும். அதனுல்தான் நான் யார் யோசனையையும் கேட்காமல் அதன்மேல் டிக்கெட் வாங்கினேன்" என்று பெருமைப்பட்டுக் கொள்வார். அது வெற்றியடையாவிட்டாலோ, "உங்கள் யோசனையைக் கேட்காமல் போனேனே..." என்று அங்கலாய்ப்பார், அழாக் குறையாக.

மூன்ருவது நபர் லக்ஷ்மணன் செட்டியார். இவர் பிரபல ஹாஸ்ய நடிகை எம். எஸ். எஸ். பாக்கியத்தின் கணவர். இவருக்கு ரேஸ் பழக்கம் இந்த வருஷம் தான் புதிதாக ஏற்பட்டிருக்கிறது. ஆரம்பத்தில் வெற்றியுடன் ஆதாயத்தில்–ஆரம்பித்தார். பிறகு வரவர 'அவ்வளவு சுகமில்லை' என்று இழுத்தாற்போல் அவரே சொன்னுர். இவர் ஒவ்வொரு ரேஸிலும் தாமே முழு டிக்கெட் வாங்கி விடுவதில்லை. யாருடனுவது கூட்டு சேர்ந்தே டிக்கெட் வாங்குகிருர். நஷ்டம் வந்தாலும் அதிகம் வராது. அதேபோல லாபம் வந்தாலும், பங்கு வந்தால் போதும் என்ற எண்ணம் கொண்ட இவரைப் போலவேதான் — பின்னணிப் பாடகியான ரத்னமாலாவின் சகோதரர் ஜியார்ஜும் கூட.

* * *

பின்னணிப் பாடகி என்றதும், இப்பொழுது பிரபலமாயுள்ள பின்னணிப் பாடகி எம். எல். வஸந்தகுமாரியின் கணவரான விகடம் ஆர். கிருஷ்ணமூர்த்தியின் நினைவுவருகிறது. 'ஒத்தைக்கட்டை'

ஏவி. எம். சீக்கிரமே வெளியிடப் போகும் தமிழ்ப் படமான "செல்லப் பிள்ளை"யில் எஸ். வி. ஸஹஸ்ரநாமம் ஆழ்ந்த யோசனையிலிருக்கிறார் போலும்.

யாக இருந்த காலத்தில், இவர் ரேஸ் கோர்ஸ் மெம்பர்களான சில செட்டியார்களுடன் அடிக்கடி வருவார். ஆனால், கிருஹஸ்தரான பிறகு கிண்டி பக்கமே அவர் தலை காட்டவில்லை? காரணம், அங்கு வர அவருக்குப் பொழுது இல்லையோ. அல்லது. 'நமக்குக் கட்டி வராது' என்றபுத்தி சாலித்தனமோ தெரியவில்லை.

* * *

இன்று பட உலகில் பிரபல புள்ளியாக இருந்துவரும் எஸ். எஸ். வாஸன், ஒரு காலத்தில், குதிரைப் பந்தய வட்டாரத்திலே பிரபலமாக இருந்தவர் என்பது பலருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. இப்பொழுது பம்பாய்க்கும், கல்கத்தாவுக்கும் தமது படங்களின் ஆரம்ப தினத்திற்கெனப் பறந்து போய்த் திரும்பி வந்து கொண்டிருக்கும் அவருக்கு அந்த நகரங்கள் புதியவையே அல்ல. அங்கெல்லாம் ரேஸ் ஸீஸன் ஆரம்பமாகி முடிகிற வரை ஒரு 'மீட்டிங்' தவறாது போய் வருவார். ஆனால், இதெல்லாம் பழங்கதை. அவர் பட உலகில் பிரவேசிப்பதற்கு முன் நடந்த விஷயம். சும்மா ரேஸ் ஆடுகிறவராகமட்டும் இருக்கவில்லைஅவர் ஒரு நல்ல குதிரையின் சொந்தக்காரராகவும் கூட இருந்தார். அந்தக் குதிரையின் பெயர்கூட இவரது ராசிப் பெயரான ஜெமினிதான். இன்று ஜெமினிப் படங்கள் என்றாலே ரஸிகர்களிடை பரபரப்பு இருப்பது போல அந்தக் காலத்தில் ஜெமினி குதிரை மீதே அஸ்வப் பிரியர்கள் கவனமாகத்தான் இருந்தார்கள்.

* * *

ரேஸுக்குப் போகும் மனப்பான்மை உள்ளவர்கள் அந்தப் பழக்கத்தை அடியோடு நிறுத்தி விடுவது கடினம். அப்படி நிறுத்தி விட்டாலோ அதைப் பெரிய சாதனை என்று பாராட்டத்தான் வேண்டும். அப்படிப்பட்ட சாதனையைச் செய்து காட்டியவர் எஸ். எஸ். வாஸன். பல வருஷப் பழக்கத்தை ஒரே நாளில் சட்டென்று நிறுத்தியவர் அவர். அதில் வேடிக்கை என்னவென்றால், நஷ்டம் ஏற்பட்டு 'நமக்கு வேண்டாம்' என்று சலிப்படைந்து நிறுத்தி விடவில்லை. ஏரா

ளமான ஒரு பெரிய தொகை லாபம் கிடைத்த பிறகே ரேஸுக்கு முழுக்குப் போட்டுவிட்டு, தமது குதிரையையும் விற்று விட்டார். தமக்குப் பணம் கிடைத்த மகிழ்ச்சியில், தமது பத்திரிகையான ஆனந்த விகடனில் அப்பொழுது வேலை பார்த்து வந்த — ஆபீஸ் பையன் முதல் மானேஜர் உள்ளிட்ட — இருநூறு பேர்களை தமது சொந்தச் செலவில் மைசூருக்கும் பங்களூருக்கும் அழைத்துப் போய்க் காட்டிவிட்டு வந்தார் எஸ்.எஸ். வாஸன்.

டைரெக்டர் ப. நீலகண்டனையும், ஏவி. எம். கேமிரா மென் மாருதி ராவையும், மூன்று வருஷங்களுக்கு முன்பு ஒரு நாள் ரேஸ் கோர்ஸில் பார்த்த போது எனக்குத் திகைப்புத் தான் ஏற்பட்டது. ஆனால் அப்புறம் தான் விஷயம் புரிந்தது. அப்பொழுது தயாராகி வந்த "ஓர் இரவு" படத்திற்கு ரேஸ் காட்சிகளைப் படம் பிடிப்பதற்காகவே அவர்கள் அங்கு வந்திருந்தார்கள் என்ற விஷயம்.

* * *

'ரேஸ் கோர்ஸில், நடிகர் நாகய்யாவைச் சந்தித்தேன்' என்றால் உங்களுக்கெல்லாம் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா! "என் வீடு" படத்தில் குதிரைப் பந்தயப் பைத்தியத்தினால் ஏற்படும் கேடுகளைக் குறித்து பாலய்யாவுக்கு ஒரு குட்டிப் பிரசங்கம் பண்ணும் நாகய்யாவா குதிரைப் பந்தயத்திற்கு வந்தார் என்று நீங்கள் வியப்படையக் கூடும்-ஆனால் அவர் வந்தது தமது அதிருஷ்டத்தைப் பரிசோதிப்பதற்காக அல்ல. அன்று ஒரு "பணக்காரி"யுடன் வந்திருந்தார் அவர். அந்தப் பணக்காரி வேறு யாருமல்ல. டி. ஆர். ராஜகுமாரி தான். "பணக்காரி" பட சம்பந்தமாக ஒரு காட்சி தயாரிப்பதற்காகவே அவர்கள் அங்கு வந்திருந்தார்கள். அன்று அங்கு வந்திருந்த ஆயிரக்கணக்கான அஸ்வப் பிரியர்களும். அப்பொழுது ஓடிக் கொண்டிருந்த 'ரதிகுமாரி' என்ற அபிமானக் குதிரையைப் பற்றிக் கூட அக்கறை கொள்ளாமல் அபிமான நக்ஷத்திரமான ராஜகுமாரியைப் பார்ப்பதிலே சிரத்தை காட்டினார்கள்.

சென்ற மாதம் வெளிவந்துள்ள "மாமியார்" தமிழ்ப் படத்தில் கிரிஜா.

நாடகப் பெரியார் கௌரவிக்கப்பட்டார்

'கலை தூய்மையானது; ஜாதி மத வித்தியாசம், கட்சி பேதம் அரசியல் விவகாரம் இவைகளுக்கு அங்கே இடம் கிடையாது' என்பதை உண்மையாக்குவது போன்றதொரு சம்பவம் சென்ற மாதம் 1-ம் தேதி சென்னையில் நடைபெற்றது. ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யர், ராஜாஜி, திரு. வி. க., ஸி என். அண்ணாத்துரை, ப. ஜீவானந்தம் இப்படியான பல்வேறு கட்சியினரும் ஒரே மேடையில் கூடி ஒரு காரியத்தைச் செய்தனர் என்றால் அது ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா! அப்படிப்பட்ட ஆச்சரியம்தான் சென்ற மாதம் முதல் தேதி நடைபெற்றது. அது, நாடகக் கலை செய்த அதிருஷ்டம். நாடகக் கழகத்தின் பெரும் முயற்சி.

ராவ்பகதூர் பம்மல் சம்பந்த முதலியாரைத் தெரியாதவர்கள் இல்லை எனலாம். உயர்ந்த சர்க்கார் பதவியிலிருந்த அவர் நாடகக் கலைக்குச் செய்துள்ள தொண்டு நாடக சரித்திரத்திலே மறக்க முடியாத ஒரு விஷயம். தமிழ் நாட்டிலே நாடகக் கலையின் சிறப்புக்குப் பலவிதங்களில் பாடுபட்டவர் அவர். சென்னையிலுள்ள பிரசித்திபெற்ற அமெச்சூர் நாடக சபையான சுகுண விலாஸ சபை இவரால் புகழ் பெற்றது. இவர் அநேகம் நாடகங்கள் சொந்தமாக எழுதியுள்ளார். பிறமொழி நாடகங்களில் சிறந்தவற்றையும் தமிழில் எழுதியிருக்கிறார். இவரது மூன்று நாடகங்கள் தமிழ்ப் படங்களாகக் கூட வெளி வந்திருக்கின்றன. சிறு பிராயத்திலிருந்தே இவர் ஒரு சிறந்த நடிகர். பல வருஷங்களுக்கு முன்பு வெளிவந்த 'மனோஹரா'' தமிழ்ப் படத்தில் இவர் புருஷோத்தமனாக நடித்திருக்கிறார்.

இவருடைய எண்பதாவது வயது பூர்த்தி விழாதான் சென்ற மாதம் 1-ம் தேதி சென்னையில் நாடக அபிமானிகளால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்த மணியான விழா, திருவல்லிக்கேணி தேசியப் பெண்கள் பள்ளி கலாமண்டபத்தில் ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் தலைமையில் நடைபெற்றது. அன்று காலை, சென்னை மவுண்ட் ரோடு சுகுண விலாஸ் சபையிலிருந்து நாடக மேதை சம்பந்த முதலியார் ஊர்வலமாக திருவல்லிக்கேணி கலாமண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஆயிரக் கணக்கான நடிகர்களும் ரஸிகர்களும் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். கே. சாரங்கபாணியும், கணேசனும் உட்கார்ந்திருந்த யானை முன்னால் போக, பின்னால் ஸாரட்டில் நாடக மேதை அமர்ந்திருந்தார். அவருக்கு இருபக்கத்திலும் இரு ஹாஸ்ய நடிகர்கள், என். எஸ். கிருஷ்ணன்–டி. ஆர். ராமச்சந்திரன் உட்கார்ந்திருந்தார்கள். டி. கே. ஷண்முகமும், டி. கே. பகவதியும் குடை பிடித்தனர். ஸாரட்டு ஓட்டும் காசாரிக்குப் பக்கத்தில் உட்கார்ந்தபடி டி. எஸ். பாலய்யா ''நாடகக் கலை வாழ்க, சம்பந்த முதலியார் வாழ்க'' என்று கோஷங்கள் எழுப்பிக் கொண்டிருந்தார்.

கலாமண்டபத்திலே. ஸர். ஸி. பி. தலைமையில் பாராட்டு விழா ஆரம்பமாயிற்று. சென்னை முதல் அமைச்சர் ராஜாஜி சம்பந்த முதலியாரைப் பாராட்டிப் பேசி, பொன்னாடை போர்த்தினார். பல சங்கங்கள் வாழ்த்துப் பத்திரங்கள் வாசித்து அளித்தன. விழாவின் தலைவர் ஸர். ஸி. பி., சம்பந்த முதலியார் நாடகக் கலைக்குச் செய்துள்ள அரிய தொண்டுகளை எடுத்துக் கூறினார். அதன்பின் வி. வி. ஸ்ரீனிவாஸ அய்யங்காரும், என். எஸ். கிருஷ்ணனும் பேசினார்கள்.

பிறகு ''பம்மல் சம்பந்தம் புத்தக சாலை''யை தமிழ்ப் பெரியார் திரு. வி. க. ஆரம்பித்து வைத்தார். சம்பந்த முதலியார் தமக்களித்த வரவேற்புக்கு தகுந்த முறையில் பதிலளித்தார். எவ்வளவு பிறவி யெடுத்தாலும் தமக்கு நாடகக் கலைக்குத் தொண்டு செய்வதே பிரியம் என்று கூறினார். மா. பொ. சிவஞான கிராமணி, ப. ஜீவானந்தம் ஆகியோரும் நாடக மேதையைப் பாராட்டிப் பேசினார்கள்.

பிற்பகல் நிகழ்ச்சிகள் எம். பக்தவத்சலம் தலைமையில் ஆரம்பமாயின. டாக்

[தொடர்ச்சி 62ம் பக்கத்தில் பார்க்கவும்]

சீக்கிரமே வெளிவரப் போகும் ஜூபி
டர் - மேகலா தயாரிப்பான "நாம்"
படத்தில் உள்ள(த்)தைப் பாதுகாக்க
முயலுகிறார் பி. கே. சரஸ்வதி.

நாட்டிய முத்திரைகள்

பிரபல நாட்டியக் கலை ஆராய்ச்சியாளரான அ. ரா. கிருஷ்ணமூர்த்தி நாட்டிய முத்திரைகளைப் பற்றி ''குண்டூசி''யில் எழுத இசைந்துள்ளதை சந்தோஷத்துடன அறிவிக்கிறோம். இக் கட்டுரைகள ''குண்டூசி''யில் தொடர்ந்து வெளிவரும்.

அ. ரா. கிருஷ்ணமூர்த்தி

ஒரு நாட்டிய நாடகக் கச்சேரி நடக்கிறது; அல்லது பாட்டுக்கு ஒரு நடி அபிநயம் பிடிக்கிறாள். அதைப் பார்க்கும் போது, அந்த நடி என்ன சொல்கிறாள், அவள் உணர்ச்சி, மனோநிலை, முதலிய எல்லாம் நமக்கு தெளிவாகப் புலப்படுகின்றன. 'எதை எப்படிச் செய்தால்சபையோருக்குப் புரியும்' என்பது நடிகர்கள் அநுசரிக்க வேண்டிய விதிகள். இந்த விதிகளை கூடுமானவரை நடப்பை ஒட்டியே அமைத்திருப்பதால்தான், நாட்டியத்தையோ, பதாபிநயத்தையோ நாம் பார்க்கும்போது, புரிந்துகொண்டு அநுபவித்து ரஸிக்க முடிகிறது.

நடிகர்களின் உடை, அவர்கள் எந்தப் பாத்திரத்தைத் தாங்கி நடிக்கிறார்கள்என்பதை விளங்க வைக்கிறது. அவர்களின் முக பாவங்கள் அவர்கள் அநுபவிக்கும் உணர்ச்சிகளை தெளிவாக்குகின்றன; அங்க அசைவுகள் அவர்களது போக்கையும், செயலையும் காட்டுகின்றன; பேச்சும் பாட்டும் இவை எல்லாவற்றிற்கும் துணை புரிந்து நிற்கின்றன.

சாதாரணமாக, பாமர மக்கள் பேசும் போது கைகளை ஆட்டியும், நீட்டியும் பேசுவதை நாம் பார்க்கிறோம். இவைகளையே ஒரு ஒழுங்குபடுத்தி, மெருகூட்டி அழகோடு காட்டுவதை அங்க அபிநயம் என்கிறார்கள். அங்க விகாரங்களில் முத்திரைகள் வெகு முக்கியமானவை. ஒவ்வொரு சொல்லையும், பூரணமாக விளக்க வேண்டுமானால் முத்திரைகளினால்தான் அது சாத்தியமாகும். இவைகளை 'பாவ பாஷை' என்ற பெயரில் ஒரு தனி பாஷையாகவும் கூறுகின்றனர்.

'சாஸ்திரீய முத்திரைகளை மேடை மீது உபயோகிப்பதால் ரஸிகர்களுக்கு என்ன விளங்கும்; அதைக் குறைத்துக் கொண்டு சாதாரணமாக கைகளை ஆட்டுவதாலும், வீசுவதாலும், மற்றும் அது போன்ற செய்கைகளாலும் முத்திரைகளின் இடத்தைப் பூர்த்தி செய்துவிடலாம்,' எனச் சிலர் இப்போது கூறுகின்றனர். இவர்கள் முத்திரைகளுக்கும் சாதாரணமாகப் பேசும்பொழுது நம்மையுமறியாமல் ஏற்படும் அங்க இயக்கங்களுக்கும் உள்ள ஆச்சரியமான ஒற்றுமையை கவனிக்கவில்லை என்றே கூறவேண்டும்; சில அங்க அசைவுகள் உலக முழுவதும் ஒரே அர்த்தத்தை விளக்கக் கூடிய மானிட பாஷையாக விளங்குகின்றன. குழந்தைகள் பேச வராத பருவத்தில் அதன் தேவையை நமக்கு வார்த்தைகளின்றி சைகைகளால் அறிவிக்கின்றன. இவற்றில் ஜப்பான் தேசக் குழந்தை ஒரு விதமாகவும் அமெரிக்க தேச குழந்தை ஒரு விதமாகவும் செய்வதில்லை. வயிற்றுப் பசிக்காக உணவு கேட்பவன் விரல்களைக் குவித்து (பத்மகோச முத்திரை) வாய்க்கு நேராகக் காட்டுகிறான். தண்ணீர் வேண்டுபவன் கட்டை விரலை நீட்டி (சிகரம்) வாயிடம் கொண்டுபோகிறான். ஆப்பிரிக்க காட்டுமிராண்டிகள் முதல் அமெரிக்க நாட்டு நாகரீக மக்கள்வரை எல்லோரிடமும் ஒரே விதமாகத்தான் காணப்படும் செய்கைகள்.

முத்திரை என்ற சொல் (SEAL) பெர்ஷிய பாஷையிலிருந்து தந்த்ர சாஸ்திரங்களுக்கு வந்திருக்க வேண்டும் எனக் கருதுகிறார்கள். தந்த்ர சாஸ்திரங்களில் பரிபூரண ஆனந்தம் என்ற சொல்(முத்)லிருந்து முத்திரை என்ற சொல் வந்ததாக நம்பப்படுகிறது. 'ஒரு நிலைப்பட்ட மனதை வலியுறுத்துவதால் இந்த ஆனந்தம் கிடைக்கிறது' என்று அந்த சாஸ்திரம் கூறுகிறது. மந்திரங்களில் ஒவ்வொரு பாகமும் முடியும்போது காட்டப்படும் இச்சைகைகளை (முற்று) முத்திரை என அழைத்திருக்கலாம் என்பது சிலர் அபிப்பிராயம். முத்திரைகள் புத்த மதத்தில் (வஜ்ராயனம்) முக்கிய இடம் பெற்றிருந்தன. திபெத்திய பாஷையிலுள்ள பௌத்த தந்த்ர சாஸ்திரங்களில் 'ஸ்ரீ சக்ரமண்டல' பூஜையில் மந்திர உச்சாடன காலங்களில் காட்டவேண்டிய முத்திரைகளைப் பற்றிக் கூறப்பட்டுள்ளன. பரலோக ஐஸ்வர்யங்களைக் குறிக்கும் முத்திரை, தர்ஜனீ (பயமுறுத்தக்கூடிய) முத்திரை (கட்டை விரல் நுனியைத் தொடும்படி நடுவிரலை மடித்து ஆள் காட்டி விரலை உயர்த்த வேண்டும்) போன்ற முத்திரைகள் அவற்றில் சில ஆவன.

நாட்டிய நூல்கள் தொகுக்கப்படுவதற்கு முந்திய காலத்தில்கூட முத்திரைகள் வழக்கத்திலிருந்திருக்கின்றன. அப்போது வேதம் ஓதுகையில் சில ஹஸ்த அசைவு (முத்திரை)களை உபயோகித்து வந்தனராம். தந்த்ர சாஸ்திரங்களில் 'தெய்வ வழிபாடுகளின்போது ஹஸ்த முத்திரைகளை உபயோகித்தால் தெய்வங்கள் திருப்தியுற்று, பாவத்தைத் துடைத்து அருள் சொரிகின்றன' என்று கூறப்பட்டுள்ளது.

பண்டைய காலத்தில் முத்திரைகள் உபயோகத்திலிருந்தன என்பதற்கு அக்கால சிற்பங்களும், சித்திரங்களும் நமக்கு சாக்ஷி கூறும். அவை எல்லாமே (அநேகமாக) ஏதாவதொரு நாட்டிய நிலையில்தான் சமைக்கப்பட்டன. அதன் கைகள் ஏதாவது முத்திரைகளைக் குறித்து நிற்கும். 'பார்வதி' என்று நினைத்தால் அருள்சொரியும் அபய, வரத (இரு அர்த்த சந்திர)க் கைகள், நம் மனக் கண் முன்னே நிற்கின்றன. இவை வழி வழியாக நம் மனதிடையே ஊன்றியுள்ள உருவ அமைப்புகள். தெய்வச் சிலைகளில் எந்த எந்த தெய்வத்திற்கு என்னென்ன



சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்: சுராஜ் ஏஜன்ஸீஸ், 37, ஜானி ஜான்கான் ரோட், திருவல்லிக்கேணி, மதராஸ். கோயமுத்தூர். பாலக்காடு, நீலகிரிக்கு ஸோல் ஏஜெண்டுகள்: B. பாலபட்டாபி (1933ல் ஸ்தாபிக்கப்பட்டது) -- கோயமுத்தூர்.

முத்திரைகள் என்பதை ஆகமங்களும் சிற்ப சாஸ்திரங்களும் கூறுகின்றன.

எல்லா வகைகளிலும் இப்படி வழக்கத்தை ஒட்டியே நூல்கள் தொகுக்கப்பட்டன. நாட்டியத்தைப் பற்றிய நூல்களில் அபிநய தர்ப்பணமும், பரதரின் நாட்டிய சாஸ்திரமும் பழைய நூல்கள் எனக் கருதப்படுகின்றன. நாட்டியசாஸ்திரத்தில் நடனம், நாடகம், சங்கீதம், முதலிய எல்லாம் விளக்கப்பட்டிருக்கின்றன. அபிநயதர்ப்பணத்தில் நடனத்தின் ஆங்கிகாபிநயத்தை மட்டும் விளக்குகிறார் ஆசிரியர். இந்த அபிநயதர்ப்பணத்தில் 28 அசம்யுத ஹஸ்தங்களும், 24 சம்யுத ஹஸ்தங்களும் கூறப்பட்டுள்ளன.

அபிநயதர்ப்பணத்தில் முத்திரைகளைப் பற்றி விவரிக்க ஆரம்பிக்குமுன், முத்திரைகளை சுலபமாகச் செய்வதற்குறிய கைகளின், 12 வித அசைவுகளைப் (ஹஸ்த பிராணம்) பற்றி சொல்லப் பட்டிருக்கிறது. விரல்களை நன்ருக நீட்டுவது, மடிப்பது, விலக்குவது, கைகளை நீட்டி விரல்களை (பதாகை முத்திரையைப் போல்) உயர்த்துவது, உள்ளங்கை கிழ் நோக்கும்படியான கையின் நிலை, கையை பின்புறமாக திருப்புதல். உள்ளங்கை மேல் நோக்கும் நிலை, கையைப் பின்புறமாகத் திருப்பி விரல்களை மேல் நோக்கி நீட்டுதல், இருபுறமும் அசைத்தல், வார்த்தைகளின்றி விரல்களின் அசைவுகளாலேயே ஒன்றை விளக்குதல், குறி காட்டுதல், வார்த்தைகளின் அர்த்தங்களை உணர்த்தல், இந்த 12 வித அசைவுகளும் ஹஸ்த பேதங்களுக்கு காரணமாக நிற்கின்றன.

பதாகை, திரிபதாகை, அர்த்தபதாகை, கர்தரீமுகம், மயூரம், அர்த்த சந்திரம், அராளம், சுகதுண்டகம், முஷ்டி, சிகரம், கபித்தம், கடகாமுகம், ஸூசி, சந்திர கலா, பத்மகோசம், சர்ப்பசிரஸ், மிருக சீர்ஷம், சிம்ஹ முகம், லாங்குலம், சோல பத்மம், சதுரம், பிரமரம், ஹம்ஸாஸ்யம், ஹம்ஸபக்ஷம், சந்தம்சம், முகுளம், தாம்ரசூடம், திரிசூலம்--ஆக இருபத்தி எட்டு ஹஸ்தங்களும் அபிநய தர்ப்பணத்தில் விவரிக்கப்பட்டுள்ள ஒற்றைக் கை முத்திரைகள் ஆகும்.

கை விரல்களை நீட்டி, பெரு விரலால் மற்ற விரல்களை தொடும்படி நிறுத்துவது பதாகை முத்திரை எனப் படுகிறது.

[தொடர்ச்சி 83-ம் பக்கத்தில் பார்க்க]

இப்பொழுது தமிழ் நாடெங்கிலும்

நடைபெறுகிறது

ஸ்ரீ கஜானனாவின்

மாமியார்

தமிழ்

ஸ்ரீ கஜானனா புரொடக்ஷன்ஸ்

115 B, மோப்ரீஸ் ரோடு,
சென்னை - 4

61 B, பிரிகேட் ரோடு,
பங்களூர் (கன்ட்.)



காற்றினிலே நக்ஷத்திரப் பேட்டி

சியாமா

"இந்த வரிசையிலே, பேட்டிகள் ஆரம்பத்தில் ரஸிகர்களுக்கு மிகப் பிரபலமான, ஆனால் சிறு வயதினரான நக்ஷத்திரம் நிம்மியை அறிமுகப் படுத்தினோம். இன்று மற்றொரு சிறிய வயதினரான நக்ஷத்திரம் தன் வாழ்க்கைக் கதையை உங்களுக்குக் கூறப் போகிறார். இந்த இருவருக்கும் உள்ள ஒரே வித்தியாசம், நிம்மி திடீரென்று நக்ஷத்திரமானவர்; சியாமாவோ படிப்படியாக உயர்ந்து நக்ஷத்திர பதவி அடைந்தவர். மற்றொரு வித்தியாசம் சியாமா அழகிய ஒரு பொம்மை மாதிரி இருக்கிறார். இவர் சிறு சிறு பாத்திரங்களில் நடித்து நன் மதிப்புப் பெற்று, இப்பொழுது நக்ஷத்திரமாகப் பிரகாசிக்கிறார். வாஸ்தவமாகச் சொல்லப் போனால் இவருக்கு அறிமுகமே தேவை இல்லை. இவர் டஜன் கணக்கான படங்களில் நடித்திருக்கிறார்; அவைகளில் சிறு பாத்திரங்களிலும், பிரதம பாத்திரங்களிலும் நடித்திருக்கிறார். இவர் மிகவும் எளிமையாகவும் பாந்தமாகவும் இருக்கிறார். இவருடன் பேசுவதே ஒரு இன்பம் தான். இவருடைய எளிமையான நடத்தையைப் புகழாது என்னால் இருக்க முடியவில்லை தவிர........."

சியாமா:—போதும், போதும். தயவு செய்து என்னைப் புகழ்ந்து கொண்டே போக வேண்டாம்.

பால்:—நான் உண்மையைத் தானே சொல்லிக் கொண்டிருந்தேன். அது சரி சியாமாஜி! சியாமா என்பது உங்கள் சினிமாப் பெயர் தானே?

சியாமா:—ஆம், ஏன்!

பால்:—உங்கள் உண்மைப் பெயர் என்ன!

சியாமா:—குருஷீத் அக்தர்.

பால்:—உங்களுக்கு மற்றொரு பெயர் கூட உண்டு இல்லையா!

சியாமா:—அது என்ன பெயர்!

பால்:—உங்கள் செல்லப் பெயர் 'பேபி' இல்லையா! நான் கூறுவது சரிதானே.

சியாமா:—(சிரித்து) ஆம், நீங்கள் சொன்னது சரி; பேபி என் செல்லப் பெயர்.

பால்:—நான் உங்களை எந்தப் பெயர் கொண்டு அழைப்பது?

சியாமா:—எல்லாருக்கும் தெரிந்தபெயரைக்கொண்டுதான்.

பால்:—சியாமா என்று?

சியாமா:—ஆம்; நீங்கள் என்னை வேறு பெயர் கொண்டு அழைத்தால், ரஸிகர்கள் வேறு யாரோ நக்ஷத்திரத்தை நீங்கள் பேட்டி காண்கிறீர்கள் என்று நினைத்துவிடக் கூடும். (இருவரும் சிரித்தனர்.)

பால்:—உங்களுக்குக் குழந்தைப் பருவம் முதலே பட உலகில் ஆசை ஏற்பட்டு விட்டதா?

சியாமா:—ஆம். எனது சிறு வயதில் நான் நிறையப் படங்கள் பார்ப்பேன். வீட்டில் கண்ணாடி முன் அந்தப் பட நடிகர்களைப் போல் நடித்துப் பார்ப்பேன். எனக்கு நடிப்பதில் ரொம்ப ஆசை விழுந்து விடவே, என் வயதையொத்த சிறுமிகளை அழைத்து வந்து அவர்களுடன் சேர்ந்து சிறு சிறு நாடகங்கள் போடுவேன். ஒரு சமயம், குர்ஷீத் – ஈஸ்வர்லால் நடித்த படம் ஒன்றைப் பார்த்தேன். எனக்கு குர்ஷீத்தின் நடிப்பு ரொம்பவும் பிடித்தது; அது முதல் நானும் சினிமா நக்ஷத்திரமாகிவிட வேண்டுமென ஆசை கொண்டேன்.

பால்:—சிறு பிராயத்திலேயே சினிமா நக்ஷத்திரமாக வேண்டுமென்ற ஆவல் உங்களுக்கு ஏற்பட்டு விட்டது என்று சொல்லுங்கள்.

சியாமா:—ஆம்; ஆனால் அது நிறைவேறுவது ஓரளவு அதிருஷ்டத்தைப் பொறுத்திருந்தது. ஷவுகத் ஹுஸைன் என்பவரின் "ஜீனத்" என்ற படப் பிடிப்பை வேடிக்கை பார்க்கப் போயிருந்தேன். என்னைப் பார்த்த அவர் எனக்கு ஒரு சிறு பாத்திரம் கொடுத்தார்.

பால்:—சரியான சந்தர்ப்பம் கிடைத்தது உங்களுக்கு.

சியாமா:—அதை நீங்கள் அப்படிக் குறிப்பிடலாம். நான் அதை ஏற்று ஒத்திகைகளுக்கு பத்தொன்பது நாட்கள் தொடர்ந்தாற் போல் போனேன்.

பால்:—முதன் முதலில் உங்களுக்கு

நடுக்கமோ, லஜ்ஜையோ ஏற்பட்டதா!

சியாமா:—கிடையாது. நக்ஷத்திரமாக வேண்டுமென்ற ஆவல் ஒரு பக்கம். தவிர, என் போன்ற சிறுமிகள் பலர் கூட நடித்தனர். ஆகவே தைரியமாக என்னுல் முடிந்த அளவு நன்ருக நடித்தேன்.

பால்:—உங்கள் பந்துக்கள் இதற்காக உங்கள் மீது கோபம் கொள்ளவில்லையா?

சியாமா:—ஓ! அப்பாவுக்குத் தெரிந்ததும், சினிமாத் தொழில் கௌரவமானதல்ல என்று அவர் குதியாகக் குதித்தார். ஆனுல் என் சகோதரி குல்ஸர் அக்தரும், என் தாயும் எனக்காகப் பரிந்து பேசினுர்கள். நக்ஷத்திரமாக வேண்டும் என்பது என் வாழ்க்கை லட்சியம் என்றும், அதைத் தடை செய்தால் மனம் உடைந்து போவேனென்றும் அவர்கள் அவரிடம் கூறினுர்கள். கடைசியில் தந்தை சம்மதித்தார்.

பால்:—''ஷீனத்''துக்குப் பிறகு என்ன நடந்தது!

சியாமா:—எனக்குக் கிடைத்த அந்த சந்தர்ப்பம், பிரபல நக்ஷத்திரமாக வேண்டும் என்ற என் ஆவலைத் தூண்டிவிட்டது. நான் படிப்பை நிறுத்திவிட்டு சங்கீதம் கற்றுக் கொள்ள ஆரம்பித்தேன். படங்களில் சிறு பாத்திரங்களில் நடித்தபடி, நான் பிரபல நடன டைரெக்டரான பத்ரி பிரசாத்திடம் நடனம் கற்றுக் கொண்டேன்.

பால்:—இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டது உங்கள் உடல் நிலையை ஒன்றும் பாதிக்கவில்லையா!

சியாமா:—ஆம், என் உடம்பு மிகவும் பலஹீனம் அடைந்தது. பல விஷயங்களையும் ஒரே சமயத்தில் கவனிக்க முடியாத நிலை வந்து விட்டது. ஆகவே, சங்கீதம் கற்பதை நிறுத்தி விட்டு நடனத்திலேயே முழு கவனத்தையும் செலுத்தலானேன்.

பால்:—உங்கள் விருப்பமான நடனம் எது?

சியாமா:—எனக்கு மிகவும் பிடித்தது கதக்தான்.

பால்:—நீங்கள் சிறு பாத்திரங்களில் நடித்துக் கொண்டே இருந்தீர்களாக்கும்!

சியாமா:—ஆம்; ''பர்வானு'' என்ற படத்தில் காலஞ் சென்ற சைகாலின் சகோதரியாகவும், காலஞ்சென்ற ஷியாம் நடித்த ''கனேஜ்'', மோதிலாலின் சகோதரியாக ''பேட்டி டின்'' ஆகியவைகளில் நடித்தேன். நான் பலருக்கு சகோதரியாக இருந்திருக்கிறேன்! ''நிஷான்'' ''சோட்டி பாபி'' ''சுராஜ்'' இவைகளில்கூட நான் நன்ருக நடித்திருக்கிறேன்.

பால்:—நீங்கள் படத் தொழிலில் புகுந்த ஆரம்ப காலத்தில் நடைபெற்ற, உங்களால் மறக்க முடியாத சம்பவம் எதையாவது குறிப்பிட முடியுமா?

சியாமா:—முடியும். காலஞ்சென்ற சைகாலின் சகோதரியாக நான் ''பர்வானு'' படத்தில் நடித்து வந்த சமயம். நான் மன வேதனையுடன் ஒரு நாள் உட்கார்ந்திருந்தேன். சைகால் என்னை அழைத்துப் போய் எனக்காக ஒரு அருமையான பாட்டுப் பாடி, ''குழந்தாய், கவலைப்படாதே. சிரமப்பட்டு உழை, நீ நிச்சயம் வெற்றி பெறுவாய்'' என்று அன்புடன் கூறினுர். சைகாலின் அந்த அன்பு வார்த்தைகள் எனக்கு இன்றும் நினைவில் இருக்கின்றன. அதுமுதல் நான் எப்பொழுதும் தவறியதே இல்லை. நான் எப்பொழுதும் சிரமப்பட்டு உழைத்திருக்கிறேன். மிஸ்டர் பால்ராஜ்! அந்த சம்பவத்தை நான் என்றும் மறக்க முடியாது.

பால் :—எப்பொழுது நீங்கள் பிரமத பாகங்களில் நடிக்க ஆரம்பித்தீர்கள்?

சியாமா :— திலீப்குமார், மதுபாலா, இவர்களுக்கு அளிக்கப்பட்டது போன்ற பிரதம பாத்திரமில்லையென்றாலும், முக்கியமான ஒரு பாத்திரமாக "தரானா"வில் நடிக்க சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் அதைத் திறம்பட நடித்ததில் எனக்கு மிக மகிழ்ச்சி. ரஞ்சித்தின் "ஹம்லோக்"கிலும் எனக்கு நல்ல பாத்திரம் கிடைத்தது. பிறகு பில்ம்ஸ்தானின் "ஸ்ரீமத்ஜி"யில் பிரதம பாகத்தில் நடிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது. அதில் நான் புது மாதிரியான கதாபாத்திரமாக நடித்தேன். இந்தப் பாத்திரத்திற்கு என்னைத் தேர்ந்தெடுத்ததற்கு டைரெக்டர் ஜன் ஹருக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். நான் அதை மிகவும் சிரத்தையுடன் நடித்தேன். "ஸ்ரீமத்ஜி" திரையிடப் பட்டதும் எனக்கு பல படங்களில் நடிக்க அழைப்புக் கிடைத்தது.

பால் :—எந்தப் படத்தில் முதலில் கதாநாயகியாக நடிக்கும் பாக்கியம் உங்களுக்குக் கிடைத்தது?

சியாமா :—"பாயலி" என்ற பக்ஷி ஜங் பகதூரின் பஞ்சாபி படத்தில்தான். அது ஒரு ஹிந்திப் படம். நான் ஆத்ரே ஆர்ட் பில்மின் "போஸ்டி"யிலும் நடித்தேன்.

பால் :—உங்கள் அபிப்பிராயத்தில் நீங்கள் நடித்த படங்களில் எது சிறந்தது?

சியாமா :—எல்லாப் படங்களிலுமே நான் நன்றாக நடிக்கத் தான் முயற்சிக்கிறேன். ஆனால் "ஸ்ரீமத்ஜி"யில் என் பாகம் எனக்குப் பிடித்திருக்கிறது. "ஹம் லோக்" "மான்" இரண்டும்கூட எனது வெற்றிப் படங்கள்.

பால் :—அடுத்து வரப்போகும் உங்கள் படங்கள் என்னென்ன?

சியாமா :—"ஆஸ்வன்," "நிஷன் டன் கா". "ஜக்கூ". ரஞ்சித்தின் "பகதூர்" ஆகியவைகள்.

பால் :—எந்த மாதிரிப் பாத்திரங்களில் நடிக்க உங்களுக்குப் பிரியம்?

சியாமா :—நடிகையாயிருக்கக் கூடியவள் எல்லாப் பாத்திரங்களையும் நடிக்கக் கூடியவளாக இருத்தல் வேண்டும். நானும் ஒரு நடிகைதானே. ஆகவே எந்தப் பாத்திரத்தையும் நான் விரும்புகிறேன். எனக்கு எந்தப் பாத்திரம் கிடைத்தாலும் அதில் நான் ஒன்றிப் போய் விடுவேன்.

பால் :—நடிகை என்ற பெயருக்கு மிகவும் பொருத்தமானவள் தான் நீங்கள். உங்கள் அபிமான டைரெக்டர் யார்?

சியாமா :— சிரமப்பட்டு வேலை செய்தால் நிச்சயம் வெற்றி கிடைக்கும். யோக்கியமாக, தன் வேலையின் பொறுப்பை உணர்ந்து சிரமப்பட்டு வேலை செய்யும் டைரெக்டரின் கீழ் வேலை செய்வதையே விரும்புகிறேன்.

பால் :—உங்கள் வெற்றிற்கு உதவியவர்கள் யார்?

சியாமா :—எனக்கு சரியான புத்திமதிகள் கூறி உதவும் என் சகோதரி குல்ஸார் அக்தாருக்கு நான் என்றும் கடமைப்பட்டிருக்கிறேன்.

பால் :—இப்பொழுதெல்லாம் நீங்கள் ரொம்பவும் வேலையாயிருக்கிறீர்கள். தற்சமயம் நீங்கள் எவ்வளவு படத்தில் நடித்து வருகிறீர்கள்?

சியாமா :—ஒரு டஜன் படங்களில் நடித்து வருகிறேன்.

பால் :—உங்கள் அபிமான கதாநாயக இந்திய நடிகர் யார்?

சியாமா :— அசோக் குமார்.

பால் :—கதாநாயகி நடிகை.

சியாமா :—ஏன், நானேதான். (இருவரும் சிரிக்கின்றனர்.)

பால் :—நீங்கள் ஆங்கிலப் படங்கள் கூடப் பார்ப்பது உண்டு என எண்ணுகிறேன்.

சியாமா :—உண்டு.

பால் :—எந்த மாதிரிப் படங்கள் உங்களுக்குப் பிடிக்கும்.

சியாமா :—ஹாஸ்யப் படங்களும் சங்கீதப் படங்களும்.

பால் :—உங்கள் அபிமான ஆங்கில நக்ஷத்திரங்கள் யார்?

சியாமா :—கீன் கெல்லி, க்ரீகரி பெக், ஹெட்டி லாமர், பெட்டி ஹட்டன் ஆகியோர். பெட்டி ஹட்டன் நடித்த "அன்னி கெட் யுவர் கன்" என்ற படத்தை நான் சுமார் பத்து தடவை பார்த்திருக்கிறேன்.

பால் :—நீங்கள் தையல் வேலைகளில் திறமை வாய்ந்தவர் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேனே.



விரைவில் வெளிவர விருக்கும் ஜுபிடர் மேகலா கூட்டுத் தயாரிப்பான " நாம் " தமிழ்ப் படத்தில் எம். ஜி. ராமச்சந்திரனும், பி. கே. சரஸ்வதியும் தனிமையை ரஸிக்கும் காதல் கட்டம் இது.

சியாமா :—நான் அணிந்து கொள்ளும் ஆடைகள் அநேகமாக நான் தைத்தவைகள் தாம். எனக்கு தையல் வேலை செய்வதில் விருப்பம் அதிகம். அவகாசம் கிடைக்கும் போதெல்லாம் நான் தைக்க உட்கார்ந்து விடுவேன்.

பால் :—எந்த மாதிரி உடை உங்களுக்குப் பிடிக்கும் ?

சியாமா :—ஷல்வரும் கமீஸும் அணிய எனக்கு விருப்பம். வெள்ளை நிற உடைகளே எனக்கு அதிகம் பிடிக்கும்.

பால்:—நீங்கள் அத்தர் போன்ற வாசனைத் திரவியங்களை உபயோகிப்பது உண்டா !

சியாமா:—சில சமயங்களில் நான் அதை விரும்புவது உண்டு. அப்பொழுது நான் என் தாயைக் கேட்டு வாங்கிக் கொள்வேன். ஆனால் நான் வாசனை விஷயங்களில் அதிக சிரத்தை காட்டுவது கிடையாது.

பால்:—நீங்கள் சமையல் செய்வீர்களா!

சியாமா:—செய்வேன். நான் சிறுமியாக இருந்த போது என் சகோதரிக்கு சமைத்துப் போட்டிருக்கிறேன்.

பால் :—உங்களுக்கு அவகாசம் கிடைக்கும் போது என்ன செய்கிறீர்கள்!

சியாமா:—என் வீட்டிற்குப் பக்கத்தில் உள்ள குழந்தைகளையெல்லாம் அழைத்து வைத்துக் கொண்டு அவர்களுக்காக ரேடியோ வைப்பேன். சில சமயங்களில் அவர்களை என் காரில் அடைத்துக் கொண்டு உல்லாசமாகச் சுற்றி வருவேன்.

பால் :—ரொம்ப சரி. மிஸ்டர் சந்திரன், கேட்டீர்களா அவர்கள் சொன்னதை.

சந்திரன்:—நானும் அந்தக் குழந்தைகளில் ஒன்ருக இருந்திருக்கக் கூடாதா என்று நினைக்கிறேன்.

(எல்லோரும் சிரிக்கின்றனர்)

பால்:—நீங்கள் ஏதாவது ஆட்டம் ஆடுவது உண்டா?

சியாமா :—பாட்மின்டன் ஆடுவதை நான் மிகவும் ரஸிக்கிறேன். அது ஆடுவதற்கு நான் எப்படியாவது நேரம் சம்பாதித்துக் கொண்டு விடுவேன். நேரம் கிடைத்தால் ஸ்டுடியோவுக்குள்ளும் நான் விளையாடுவேன்.

பால் :—சியாமாஜி! நீங்கள் என் கேள்விகளுக் கெல்லாம் விடையளித்து விட்டீர்கள். உங்களுக்கு ஆட்சேபணை இல்லையெனில் நான் இப்பொழுது உங்களை ஒரு விஷயம் கேட்கப் போகிறேன். அது கொஞ்சம் விசித்திரமானது.

சியாமா:— நான் யாரையாவது காதலிக்கிறேனு ! அல்லது நான் எப்பொழுது கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன் என்பதுதானே அது?

பால்:—இல்லை. நான் கேட்க நினைத்ததே வேறு விஷயம். ஒரு நடிகை மணந்து கொள்ள வேண்டுமா ? — என்பதே அது.

சியாமா :—பெண்ணுகப் பிறந்த ஒவ்வொருத்தியும் மணக்க வேண்டு மென்று தான் நான் நினைக்கிறேன். நடிகை மட்டும் என்ன அதற்கு விதிவிலக்கு.

பால்:—நீங்கள் எப்பொழுதாவது உங்கள் கல்யாணத்தைப் பற்றி யோசித்தது உண்டா?

சியாமா:—இல்லை; அதுபற்றி இன்னும் நினைக்க வில்லை. தவிர அது என் வேலையல்ல; என்னுடைய பெற்றேர்களுடையது. எனக்குப் பிடித்தமான துறையை நான் தேர்ந்தெடுத்துக் கொண்டேன். அதற்கு அவர்கள் குறுக்கே நிற்கவில்லை. என் கல்யாண விஷயத்தில் முடிவை அவர்களிடம் விட்டு விட்டேன்.

பால்:—எத்தகைய ஆடவனை ஒருத்தி கணவனுக அடைய வேண்டும்!

சியாமா :—நல்ல குணம்; திட சரீரம்; சுமாரான பணம் இவைகள் உள்ளவனை. பணமும் அழகும் மட்டும் போதாது.

பால்:—உங்கள் கல்யாணத்திற்குப் பிறகும் நீங்கள் படங்களில் நடிப்பீர்களா!

சியாமா :—அதைப் பற்றி அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம்.

பால்:—ஸ்டுடியோ சூழ்நிலையைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் !

சியாமா :—வெளி உலகத்தைப் போலவே சினிமா உலகிலும் நல்லவர்களும் இருக்கிறுர்கள் ! கெட்டவர்களும் இருக்கிறுர்கள். நாம் நல்லவராக இருந்துவிட்டால் எல்லாம் சரியாக இருக்கும் என்னைப் பொருத்த வரை ஒவ்வொருவரும் என்னிடம் கெளரவமாகத்தான் நடந்து கொள்ளுகிறுர்கள்.

பால் :—உங்கள் அபிமானிகளிட மிருந்து வரும் கடிதங்களுக்கு நீங்கள் பதில் எழுதுவது உண்டா !

சியாமா :— ஒரு கடிதத்திற்குக் கூட பதில் எழுத முடியவில்லை என்பதை ஒப்புக் கொள்ள வெட்க மடைகிறேன். எனக்குப் பல கடிதங்கள் வந்திருக்கின்றன. கடிதம் எழுதியுள்ள அபிமானிகளுக்கு நான் கடமைப் பட்டிருக்கிறேன். வேலைத் தொந்தரவினுல் பதில் எழுத முடியவில்லை. இனிமேல் கண்டிப்பாக பதில் எழுதுவேன்.

பால் :— சியாமாஜி ! நானே உங்கள் அபிமானிகளில் ஒருவன்.

சியாமா :—அதைக் கேட்க எனக்கு சந்தோஷம்.

பால் :—உங்கள் போட்டோ ஒன்றை எனக்குக் கொடுங்கள்.

சியாமா :— இதோ ! நீங்கள் கேட்கக் கூடும் என்று நினைத்தே எடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன்.

பால் :—சரி, உங்கள் கையெழுத்தையும் கூட அதில் போட்டுக் கொடுங்கள்.

சியாமா :— இதோ) இந்தாருங்கள்.

பால் :—இடது கையினுல் கையெழுத்துப் போடுகிறீர்களே! வலது கையினுல் வேலை செய்ய முடியாதா !

சியாமா :—முடியும். ஆனுல் நான் எழுதுவதும் இடது கையினுல்தான். ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடுவதும் என் இடது கை வேலை (இடது கை வேலை என்ருல் ஹிந்துஸ்தானியில் 'குழந்தை விளையாட்டு' எனப் பொருள்)

(இருவரும் சிரிக்கின்றனர்)

பால் :—நீங்கள் சொந்தமாகப் படம் பிடிப்பதாகத் தெரிகிறதே?

சியாமா :— ஆம் ; "சந்திரலேகா", "நிஷான்" படங்கள் புகழ் ரஞ்சனுல் டைரெக்ட் செய்யப்படும் "ராஜ்கர்" என் சொந்தப் படம்.

பால் :—சியாமாஜி ! உங்களை நான் அதிக நேரம் நிறுத்திக் கொண்டு விட்டேன். நமஸ்தே!

சியாமா :— நமஸ்தே!

பால் :— ஒரே ஒரு விஷயம். நீங்கள் மேனுடுகளுக்கு குஷியாகப் போய்வர விரும்பவில்லையா!

சியாமா :—நிச்சயம் விரும்புகிறேன். அதுதான் கல்யாணம் செய்து கொண்ட பிறகு இருக்கலாம். இருவரும் உல்லாசமாக 'ஹனிமூன்' போய் வருவோம்.

[பிரபல "லிப்டன்" டீ கம்பெனியாரின் ஏற்பாட்டின் மூலம் ஒலி பரப்பப்பட்ட பேட்டி விவரங்களை நீங்கள் மேலே படித்தீர்கள்.]

THE LARGEST
SNUFF FACTORY
IN INDIA
STANDS FOREMOST IN THE MARKET
N.V. SHUNMUGAM & Co.,
HIGH CLASS SNUFF MANUFACTURERS
P.B. 555, MADRAS-21
TELEGRAMS: MOOKUTHOOL
PHONE: 4071

பொதுஜனம் பேசுகிறார்

★ இப்பொழுது நம் தமிழ்ப்பட முதலாளிகள் சமூகப்படம் எடுப்பதென்றால் சிகரெட் இல்லாமல் படம் எடுப்பதில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள் போலும். ''வேலைக்காரி''யில் ஆரம்பித்த இந்த சிகரெட் தொத்து நோய், ''வாழ்க்கை'', ''ஓர் இரவு'', ''அந்தமான் கைதி'', ''என் தங்கை'' முதலிய படங்களில் பரவியிருக்கிறது! திரைப் படங்களில் பெண்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கிறார்களோ அவ்வளவு முக்கியத்துவம் சமூகப் படங்களில் சிகரெட்டிற்கு அளித்திருக்கிறார்கள். சமூகப் படத்தில் கதாநாயகனாவது, அல்லது முக்கியமாக வில்லனாவது சிகரெட் பிடிக்கும் கட்டம் வந்துதான் ஆகிறது. மேனாட்டினர் செய்யும் நல்ல காரியங்களைப் பார்த்து நாம் பின்பற்ற வேண்டுமேயொழிய, அவர்கள் நாட்டு சீதோஷ்ண நிலைக்காக அவர்கள் புகை பிடிப்பதைப் பார்த்துவிட்டு. உஷ்ண நாடாகிய நமது நாட்டில் நாகரீகமென்று நினைத்து நாமும் புகை பிடிப்பது நியாயமில்லை. தியேட்டரில் புகை பிடிக்கக்கூடாது என்று சட்டம் இயற்றிய நமது அரசாங்கம் திரைப் படத்தில் புகை பிடிக்கும் காட்சி இருக்கக்கூடாது என்று சட்டம் இயற்றியிருந்தால் மிகவும் நலமாயிருக்கும். சினிமாப் பார்க்கும்போது திரைப் படத்தில் வரும் கதாநாயகர்களைப் போல் நாமும் நமது வாழ்க்கையில் இருக்க வேண்டும் என்று நினைக்கும் சிறுவர்களின் பிஞ்சு உள்ளங்கள், கதாநாயகர்கள் சிகரெட் பிடிப்பதைப் பார்த்துவிட்டுத் தாமும் அதேபோல் பிடித்து, பணத்தைக் கரியாக்குவதுடன், ஈரலையும் கரியாக்கிக் கொள்கிறார்கள். ஆகையால் சம்பந்தப்பட்டவர்கள் சினிமாவில் சிகரெட்டிற்கு விடுதலை அளிப்பார்களா?

நா. சிதம்பரம்,
ராங்கியம்.

★ பரிசு பெற்ற கடிதம்

எழுதியவர் :

நா. சிதம்பரம்,

என். வி. என். பங்களா,

ராங்கியம்.

படிப்பது ராமாயணம்....

சமீபத்தில் வெளிவந்த ''பணம்'' இதுவரை வெளிவந்த படங்கள் போல் சர்வ சாதாரணமான படம் தான். ஆரம்பத்திலிருந்து கடைசி வரை, பெண்களை அழவிட்டுப் படம் எடுப்பார்கள். இப்படத்தில் ஆண் அழுவதை கடைசி நிமிஷம் வரை பார்க்கிறோம். பணத்திற்காக மனைவியை தகப்பனார் துரத்தும் கட்டத்திலும் தைரியமாக ஒரு வார்த்தை சொல்லாமல், பரிதாப முகமும், கண்ணீருமாகக் காட்சியளிக்கிறான் கதாநாயகன். மாமனாரைத் தான் சுடவில்லை என்பது அவனுக்கே தெரிந்திருக்க பயந்தாங்கொள்ளி மாதிரி ஓடியது, பின்னிட்டு கதை வளர்வதற்காக செய்தமாதிரி இருக்கிறது. கிருஷ்ணன் ஹாஸ்யம் முன்னிருந்ததில் கால் பங்கு கூட இல்லை. நாஸ்திகப் பிரசாரம் நன்றாக செய்திருக்கிறார். 'சாம்பிராணிப் புகையாகப் புகைந்தாயோ' என்று பாடியதற்குப் பதிலாக, 'சிகரெட் புகையாகப் புகைந்தாயோ' என்று பாடியிருக்கவேண்டும். சிகரெட்டுக்குச் செலவாகும் பணத்தில் கால்பங்கு கூட சாம்பிராணிக்கு ஆவதில்லை. 'ஏழைகளுக்காக முதலைக் கண்ணீர் விடுத்து பளபளக்கும் கார்களில் செல்லும் படத்தயாரிப்பாளர்களின் பணப்பெட்டிகளில் மறைந்து கொண்டாயோ',—சமூக சித்திரம் என்ற பெயரால் சமூகத்தையும், தெய்வத்தையும், மக்களையும்—பொதுவாக தங்களைத் தவிர மற்றெல்லோர் மீதும் வசை புராணம் பாடும் பகுத்தறிவிலிகளின் பாக்கெட்டுகளை சரணடைந்தாயோ' என்று அந்தப் பாடலில் சேர்த்துக் கொள்ளலாம். திருக்குறளை கையில் வைத்துக் கொண்டு இம்மாதிரிப் பாட்டுக்கள் பாடுவது, ''படிப்பது ராமாயணம் இடிப்பது பெருமாள் கோவில்'' என்ற வசனத்தை நினைவூட்டுகிறது.

ஏ. கே. கல்யாணி.
கடலூர் என். டி.

நக்ஷத்திர கிரிக்கெட்

கடந்த ஜனவரி மாதம் 11ம்தேதி நடந்த நக்ஷத்திர கிரிக்கெட் வைபவத்தை ஆயிரமாயிரம்

கள்ள நோட்டுகளை யெல்லாம் கொடுத்து விட்டு நல்ல நோட்டுகளாக மாற்றிக் கொண்டு விட்டதற்காக இவர்கள் இப்படி சந்தோஷப்படுகிறார்களோ? "செல்லப் பிள்ளை" படத்தில் ராதாகிருஷ்ணன், சாவித்திரி, கே. ஆர். ராமசாமி.

ரஸிகர்கள் கண்டு களித்தார்கள். சென்ற வருஷம் நடந்த கிரிக்கெட் வைபவத்தைப் போலல்லாமல் இவ்வருஷம் நமது பிரபல நக்ஷத்திரங்கள் பங்கெடுத்துக் கொண்டது குறிப்பிடத் தக்கது. தங்களுடைய முக்கிய அலுவல்களைப் புறக்கணித்து விட்டு இதில் பங்கெடுத்துக் கொண்ட நடிகர், நடிகையரை ரஸிகர்களின் சார்பாகப் பாராட்டுகிறேன். ஆனால், இவ் வருஷமும் சில வருந்தத்தக்க நிகழ்ச்சிகள் இவ் வைபவத்தில் நடந்தன. முக்கியமாக தென்னிந்தியக் கட்சியில், சினிமா உலகிலேயே இல்லாத இருவரை சேர்த்துக் கொண்டது மிகவும் கண்டிக்கத்தக்கது. இம் மாதிரி சினிமா உலகில் சம்பந்தப் படாதவர்களை யெல்லாம், முக்கியமாக சினிமா நடிகர் அல்லாதவர்களையெல்லாம், சினிமா நக்ஷத்திரங்களின் கோஷ்டியில் சேர்த்துக்கொண்டு ஆடியது தென்னிந்திய படத்தொழிலுக்கே அவமானம் தரக்கூடிய ஒரு விஷயம் தென்னிந்திய சினிமா நக்ஷத்திரங்களில் அதிக 'ரன்'கள் எடுத்தவருக்குக் கொடுக்க வேண்டிய கோப்பையை, மேலே குறிப்பிட்ட இருவரில் ஒருவருக்கு (நக்ஷத்திரம் அல்லாதவருக்கு) கொடுத்தது மேலும் வெட்கப்பட வேண்டிய விஷயம். இனியாவது இம்மாதிரி அனாவசியமான, தென்னிந்திய படத் தொழிலுக்கே அவமானம் தரக் கூடிய, சம்பவங்கள் நடைபெறாதவாறு பார்த்துக் கொள்ளும்படி சம்பந்தப் பட்டவர்களைக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஏ. ஆர். ஸ்ரீனிவாஸன், சென்னை–17.

பட விமர்சனமும் வெளியீடும்

சினிமா ஒரு கலை; பட விமர்சனமும் ஒரு கலை. இவை இரண்டும் ஒன்றோடொன்று ஒன்றி இயங்கினால், சினிமாக் கலை புது மெருகு பெற்று முன்னேற்றம் அடைய ஏதுவுண்டு. இப்பொழுதெல்லாம், ஒரு படத்தின் பத்திரிகைக் காட்சி

எலும்பு மனிதனைக் கண்ட நம்பியாரின் ஹிருதயத் துடிப்பை மூர்ச்சையாகிவிட்ட பாக்கியம் தெரிந்து கொள்ள முடியுமா? ஜூபிடர்-மேகலா தயாரிப்பான ''நாம்'' படத்தில் இக் காட்சியைக் காணலாம்.

ஒரு நாள் நடைபெறுகிறதென்றால், அன்றைக்கே அல்லது மறு நாளே அப்படமும் திரையிடப்பட்டு அநேக இடங்களில் ஓடுகிறது. அதற்குப் பிறகு தான் அப் படத்தின் விமர்சனம் பத்திரிகைகளில் வெளிவருகிறது. 'அப் படம் எப்படி எப்படி எடுக்கப்பட்டிருந்தால், எங்கெந்த இடத்தில் கத்தரிக்கோல் பிரயோகம் செய்திருந்தால்' இன்னும் நன்றாக இருக்கும்' என்று விமர்சகர்கள் கூறும் யோசனைகளை செய்கையில் காட்ட இயலாமல் போய் விடுகிறது. ஆகையால் நான் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். ஒரு படம் வெளியிடத் தயாராக இருக்கும் பொழுது பத்திரிகைக் காட்சி நடத்தி, பத்திரிகைகளில் வரும் விமர்சனங்களை யெல்லாம் சேகரித்து, அவற்றில், படத்தின் முன்னேற்றத்திற்காகக் கூறப்பட்டிருக்கும் ஆலோசனைகளை ஊன்றிப் படித்து விமர்சகர்களின் ஏகோபித்த அபிப்பிராயப்படி--பத்திரிகைகள் ரஸிகர்களின் பிரதிநிதிகளாகையால். ரஸிகர்களின் அபிப்பிராயப்படி என்று கூடச் சொல்லலாம் — இயன்றவரை மாற்றங்கள் செய்து, புது மெருகேற்றி, அதன் பின் படத்தை வெளியிட்டால் பத்திரிகைக் காட்சிகளினால் பயனுண்டு; அர்த்தமுண்டு. படக் கலை முன்னேறும். படங்களின் தரமும் உயரும்.

வி. ஏ. சிங்காரவேல் முதலியார்,
அழுக்குவத்தை.

காரணம் யார்?

''பராசக்தி'' போன்ற படங்களைத் திரையிட, அனுமதி அளித்தது தணிக்கை போர்டின் தவறு எனக் குறைகூறும் நேயர்களை, ''பராசக்தி'' போன்ற படங்களை அனுமதித்தது யார் குற்றம்? எனக் கேட்கிறேன். பொதுமக்களின் ஆதரவில்லாமல் எந்தப் படமாவது நடைபெற முடியுமா? வசூல் இல்லாத ஒரு படத்தை

எடுக்க எந்தப் பட முதலாளியாவது துணிவாரா? அப்படிப்பட்ட வசன கர்த்தாக்களுக்கு மேலும் வசனம் எழுத சந்தர்ப்பம் அளிப்பார்களா? பொதுமக்கள் எவ்வளவோ நல்ல படங்கள் வெளிவந்தும், அவைகளையெல்லாம் பார்க்காது, இது போன்ற படங்களுக்கு மேலும், மேலும் சென்று "டிக்கட் இல்லை" என்று தியேட்டர் நிர்வாகிகள் சொல்லும் அளவுக்கு ஆதரவு அளிக்கும்போது ஏன் இது போன்ற படங்களைப் பட முதலாளிகள் எடுக்கமாட்டார்கள். இதுபோன்ற ஆதரவு கொடுக்கும் பொதுமக்களைத் திருத்துவதைவிட்டு சர்க்காரையும், தணிக்கை போர்டையும் குறை கூறுவது தவறு. இது போன்ற படங்களுக்கு பொதுமக்களின் ஆதரவில்லாமல் போகும்வரை, தணிக்கை போர்டே தலையிட்டாலும், பயன் ஏற்படாது என்பது மட்டும் உறுதி.

பி. லக்ஷ்மணன்,
கோவில்பட்டி.

பணம் எங்கே போகிறது

சமீப காலமாக வெளிவரும் படங்களிலிருந்து, திரை உலகும் நாஸ்திகப் பிரசாரமும் (காப்பியும் சர்க்கரையும் போல) பிரிக்கப்படாத விஷயங்களாகி விட்டன என்று அறிந்தோம். இம் மாதிரிப் படங்கள் வெற்றி அடையலாம், தரை மஹாஜனங்களிடமிருந்து. ஆனால், உயர்தர ரஸிகர்கள், ராஜஹம்ஸம் பாலிலிருந்து நீரை விலக்கி விடுவதுபோல இம்மாதிரிப் படங்களை ஏறெடுத்தும் பார்க்க மாட்டார்கள். சமீபத்தில் வெளிவந்த "பணம்" இந்தத் துஷ்பிரசாரத்துக்கு சிறிதும் விலக்கல்ல. இப்படத்தில் என். எஸ். கிருஷ்ணன் ஹாஸ்யமாக 'பணத்தை எங்கே தேடுவேன்' என்று ஒரு பாட்டுப் பாடுகிறார். முதலில் மிகவும் ஹாஸ்யமாய்த்தான் இருக்கிறது. கொட்டகையே அதிருகிறது. ஆனால், அதில் ஒரு அடியில் "திருப்பதி உண்டியில் போனாயோ", "மடாதிபதிகளிடம் போனாயோ" என்றெல்லாம் வருகிறது. இது மிகவும் வருந்தத் தக்கது. ஏனெனில், திருப்பதி உண்டியலைக் கேலி செய்ய லாயக்கில்லாத இவர், திருப்பதி உண்டியல் பணத்தின் உதவியால் ஸ்ரீ வெங்கடேஸ்வரர் காலேஜும், ஹாஸ்டலும், வைத்திய உதவியும் கிடைத்திருப்பதை அறிவாரா? மேலும் மடாதிபதியைக் கேலி செய்யும் இவர், மடங்கள் கல்வி வளர்ச்சிக்கு செய்யும் தொண்டைத்தான் அறிவாரா? தனக்கென படக் கம்பெனி இருக்கிறது என்றால் தன் மனதில் தோன்றும் எந்த விதமான எண்ணங்களையும் நிறைவேற்றிக் கொள்ளலாமா? என்றால் ரஸிக மக்கள் நாசமாய்ப்போகட்டும் என்பதுதான்

ஜயந்தியின் "பொன் வயலி"ல் டி. ஆர். ராமச்சந்திரன் நடுங்கிப் போயிருப்பது எலும்பு மனிதனைப் பார்த்தல்ல; மைனாவதியின் ஆலிங்கனத்தினால்தான்!

இவரது நோக்கம் போலும். மேலும், பணத்தைத் தேடப் புகுந்த இவர், ஏன் பணத்திலேயே மூழ்கிக் கிடக்கும் சினிமாக் கம்பெனிகளைப் பற்றிக் கூற மறந்து விட்டார்? பணம் எங்கே போகிறது? என்னைக் கேட்டால், இவரைப் போன்ற நாஸ்திகப் பிரசாரம் என்ற ஒன்றை மட்டும் படத்தில் புகுத்தி பாமர மக்களின் பணத்தைக் கொள்ளை யடிக்கும் படத் தயாரிப்பாளர் களின் மூலம்தான் பணம் சுரண்டப்படுகிறது என்பேன்.

பத்மா, மயிலாப்பூர்.

எதிர்பார்க்கலாமா ?

கனல் தெறிக்கும் வசனங்கள் இல்லை; அடுக்கு மொழியில் புரிந்து கொள்ள முடியாத வார்த்தைகள் இல்லை. தெய்வ நிந்தனை இல்லை; இரு பொருள் படும்படியான—அரசாங்கத்தைத் திட்டும் அடுக்குச் சொற்கள் இல்லை. நாம் வீட்டில் எப்படிப் பேசுகிறோமோ அதே மாதிரியான மொழிகள்; பண்டிதர் முதல் பாமரர் வரை புரிந்து கொள்ளும்படியாக — கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்ற கருத்தை உண்டாக்கி—ஒரு சிறந்த படமாக வெளிவந்திருக்கிறது 'அவர் இந்தியா பில்ம்ஸி'ன் ''என் வீடு''. சிறந்த குடும்பக் கதை; அனாவசிய சிக்கல்களில்லை. தமிழ் நாட்டைத் திட்டவில்லை; ஆனால் ஏழைக்கு இரங்க வேண்டும் என்ற நீதியைப் போதிக்கிறது. அடிக்கடி வட நாட்டைத் திட்டவில்லை; இரண்டு ஹிந்திப் பாட்டுகள் இடம் பெற்றிருக்கின்றன! சீர்திருத்தம், சீர்திருத்தம் என்று படங்களில் நாஸ்திகத்தை அதிகமாகப் புகுத்தி, குறிப்பிட்ட ஒரு இனத்தைத் தாக்குவதனால் ஏதோ ஒரு சில இடங்களில் அதிக வசூலையும், அபரிமிதமான கைத் தட்டலையும் பெற்று வருகிற இன்றையப் படங்களோடு ஒப்பிட்டால், 'என் வீடு'' நன்றாக இல்லை என்ற அபிப்பிராயம் சில இடங்களில் ஏற்படலாம். ஆனால், 'ஏழை படும் பாடு'' படத்தை ரஸித்தவர்கள், 'உயர்தரப் படங்களே வருவதில்லையே' என ஏங்கினவர்கள், நாஸ்திக வசனங்களைக் கேட்டே நொந்து போனவர்கள் ''என் வீடு'' படத்தைப் பெரிதும் விரும்புவார்கள் என்பது திண்ணம். இம்மாதிரி நல்ல படங்களே இனி *1953*ல் வரும் என எதிர்பார்க்கலாமா ?

கே. ரகுபதி, கும்பகோணம்.

தலைவலி வேண்டாம் !

''பணம்'' படத்தைப் பார்த்து வந்ததும் இரண்டு தலைவலி மாத்திரைகளும் ஒரு கப் காப்பியும் செலவு செய்ய வேண்டி வந்தது. படமா அது? வெறும் பிரசாரம். ஓயாமல் வீட்டு வேலை செய்து அலுத்து, படம் பார்க்க வரும் என் போன்ற பெண்கள் இந்த மாதிரிப்

படங்களைப் பார்த்தால் தலை வலிதான் வரும். பத்மினி போன்ற அழகிகள் ஏன் இம்மாதிரிப் படங்களில் நடித்து பெயரைக் 'கெடுத்துக் கொள்கிறார்கள்? இப்படத்தில் என்.எஸ்.கே. வீணைப் பிரசாரம் செய்துள்ளார். ஏன்? இப்படத்தைத் தயாரித்த அவரது நோக்கம் என்ன? பணம் சேர்ப்பது தானே? பின் ஏன் இந்த அநாவசியமான பிரசாரம்! இப்படத்தைத் தயாரிக்கச் செலவான பணத்தை அவரே தமிழ் நாட்டில் உள்ள ஏழைகளுக்குக் கொடுத்து உதவியிருக்கலாமே.

டி. எஸ். வஸந்தா, சென்னை-1.

கலைப் பயிரிலே காளான்கள்!

கலைப் பயிரிலே இன்று காளான்கள் வேரூன்றிவிட்டன. அவைகளைக் களைந் தெறிய தமிழர்கள் ஏனோ தயங்குகிறார்கள். எடுத்ததெற்கெல்லாம் புதுமையென்றும், புரட்சியென்றும் கூறி ஏமாந்து வருகிறான் தமிழன். "ஆண்டவனா? அப்படியும் ஒருவன் இருக்கிறானா?" என்று கேட்கும் கூட்டம் பெருகி, சினிமாக் கலைப் பயிரிலே தன் ஆதிக்கத்தை அளவு மீறிச் செலுத்த ஆரம்பித்து விட்டது. ஆம், "காலத்துக்குத் தக்க ஜாலர் போட்டு வரும் கபோதிகளும், காரியம் சாதிக்க கோள் மூட்டி வரும் காக்காய் பேர்வழிகளும், கட்சி பேரைச் சொல்லிக் காசு பறித்திடும் பச்சோந்திக் கும்பலும்" படத் துறையில் பெருகிவிட்டனர். பட வசனத் துறையில் வாலாட்டி வரும் இக் கூட்டம் சிறிது சிறிதாக பாடல் துறையில் தலை காட்டி வருகிறது. பாழ்பட்டு வரும் கலையை படுபாதாளத்தில் அழுத்துவதற்கு, என். எஸ். கிருஷ்ணன் புறப்பட்டிருக்கிறார்.

"மங்கையர்க்கரசி"யில் "பால் பழம் அபிஷேகம் பண்ணுவதைப் பார்—பாலில்லை என்று சிசு பதறுவதைப் பார்" என்று பாடினார். அண்மையில் வெளிவந்த "பண"த்திலே "திருப்பதி உண்டியலில் சேர்ந்து விட்டாயோ, திருவண்ணாமலை குகையில் மறைந்தாயோ, சூடம் சாம்பிராணியாய் புகைந்து போனாயோ பணமே" என்று பாடுகிறார். சீர்திருத்தம் என்று எதனைக் கலைவாணர் எண்ணுகிறாரோ? கேலியும், கிண்டலும் நிறைந்த குரலில் பரிகசித்து பிறர் நம்பிக்கையை பாடலில் வருந்தக்கூடிய விதத்தில் எதிரொலிக்கிறாரே, அது தான் சீர்திருத்தம் என்று நினைக்கிறாரோ? பிறரை மட்டம் தட்டி அதன் மூலம் காசு பறிக்க நினைக்கும் காளான்கள் என்று ஒழிகின்றார்களோ அன்று தான் படத் தொழிலுக்கு விடிவு காலம்.

எம். எம். பொன்னுசாமி, கரூர்.

இந்தப் பகுதியில் வெளியிடுவதற்கு உங்கள் அபிப்பிராயங்களை தாராளமாய் எழுதி அனுப்புங்கள். வெளியாகும் கடிதங்களில் சிறந்த ஒன்றிற்கு ஒருவருஷ சந்தா பரிசு உண்டு.

சென்ற மாதம் வெளிவந்துள்ள கஜானனாவின் "மாமியார்" தமிழ்ப் படத்தில் கிரிஜா மூட்டைப் பூச்சி சம்ஹாரம் செய்வதைக் காணலாம்.

'லிப்கோ' நோட்ஸ்கள்

வருஷா வருஷம் ஆயிரக்கணக்கான மாணவர்கள் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் தேறி வருகிறார்கள். இவர்களில் பலர் தேர்ச்சிபெறக் காரணமாக இருக்கிறார்கள் 'லிட்டில் பிளவர் கம்பெனி' யார். தங்களது ''லிப்கோ நோட்ஸ்கள்'' மூலம் மாணவர்களுக்கு ஒவ்வொரு பாடத்திலும் முக்கியமாக உள்ள பாகங்களை எடுத்து சுருக்கி சட்டென்று மனதில் பதியும் படி தக்க ஆசிரியர்களைக் கொண்டு நோட்ஸுகளாக வெளியிட்டு வருகிறார்கள். வருஷா வருஷம் போல. அடுத்து வரும் *1953*-ம் வருஷ எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷைக்கும் உதவ பின்கண்ட பாடங்களில் நோட்ஸுகள் வெளியிட்டிருக்கிறார்கள்.

சம்ஸ்கிருதம்

(ஆங்கிலத்தில்)

தமிழ்

(1 ஏ, 1 பி, 2-ம் பாகங்கள்)

SOCIAL STUDIES

(தமிழில்)

(மேற் குறிப்பிட்டுள்ள மூன்றும் ஒவ்வொன்றும் ரூ. 0-12-0 விலை)

GENERAL MATHEMATICS

(தமிழில்)

GENERAL SCIENCE ENGLISH

I & II (Papera)

(மேற்கூறிய புத்தகங்கள் ஒவ்வொன்றும் விலை ரூ. 0-15-0)

புஸ்தகப் பொழுது

COMPOSITE MATHEMATICS

(தமிழில் விலை: ரூ. 1-8-0. ஆங்கிலத்தில் விலை: ரூ. 2-0-0.)

ஒவ்வொரு பாடத்திலும் வரக்கூடிய முக்கிய கேள்விகளைத் தேர்ந்தெடுத்து அதற்கான பதிலையும் கொடுத்திருக்கிறார்கள். முன்னால் குறிப்பிட்டபடி எஸ். எஸ். எல். ஸி. போகும் மாணவர்களுக்கெல்லாம் இவை ஒரு வரப் பிரஸாதம் என்றுதான் குறிப்பிட வேண்டும்.

[மேற்படி புத்தகங்கள் அனைத்தும் கிடைக்கும் இடம்; லிட்டில் பிளவர் கம்பெனி, 8, ரங்கநாதன் ரோடு, சென்னை-17].

பாட்டு முடியு முன்னே...

[ஆசிரியர்: ''கம்பதாஸன்''; கிடைக்குமிடம்: கல்பனா பிரசுரம், சென்னை-6; விலை: குறிப்பிடப்படவில்லை.]

ஆசிரியரின் காதலி அவரைப் பிரிந்தபோது துன்பத்திலே தோன்றிய கவிதைக் குவியல் இப்புத்தகம். ஒரே இரவில் அவரால் எழுதப்பட்ட பாட்டுகளாம் அனைத்தும். பாட்டுகளில் பலவற்றைப் படிக்கும்போது நமக்குப் பிரபல மேனாட்டுக் கவிஞர்களின் நினைவு வருகிறது. ச. து. சு. யோகியார் ஆசிரியரை நன்கு புரிந்து சரியான ஒரு முன்னுரை அளித்திருக்கிறார்.

கோபுர வாசல்

[ஆசிரியர்: கி. ரா; விலை: ரூ. 1-0-0; கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிட்., சென்னை-18]

ஆசிரியரால் எழுதப்பட்ட 'கோபுர வாசல்' முதலிய எட்டு சிறு கதைகள் ஒரு புத்தகமாக வெளிவந்துள்ளது. எட்டு கதைகளும் வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டு சிறப்பாக இருக்கின்றன. ''ஸதி'', ''தீபாவளி ஜிலேபி'' இரண்டும் உயர்வாக இருக்கின்றன.

காட்டு வழிதனிலே

[ஆசிரியர்: பெ. தூரன்; விலை: ரூ. 1-4-0; கிடைக்கும் இடம்; அமுத நிலையம் லிட்., சென்னை—18]

ஆங்கில இலக்கியக் கட்டுரைகளின் பாணியிலே தமிழில் கட்டுரைகள் எழுதுபவர்கள் நம்மிடை வெகு குறைவு. அந்தத் துறையிலே முயன்று வெற்றியும் பெற்றவர் என்று பெ. தூரன் அவர்களைக் குறிப்பிடலாம். அதை மெய்ப்படுத்துவது போல் இருக்கின்றன ''காட்டு வழி தனிலே'' என்ற புத்தகத்தில் அடங்கியுள்ள பதினைந்து கட்டுரைகளும். கட்டுரைகள் எழுத விரும்பும் எழுத்தாளர்களுக்கு இந்தப் புத்தகத்தை ஒரு வழி காட்டி என்று குறிப்பிடலாம்.

சபதம்

[ஆசிரியர்: எல்லார்வி; விலை: ரூ. 2-4-0: கிடை

க்குமிடம்: அமுத நிலையம் லிமிடெட், சென்னை-18.]

மறுமலர்ச்சி எழுத்தாளர்களில் எல்லார்வியும் ஒருவர். இவரது சிறு கதைகளில் பதினைந்து ஒரு புத்தகமாகத் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது. கிராமங்களின் பெருமையையும், அதே சமயம் அவர்களில் சிலரிடம் படிந்து போயிருக்கும் மூடக்கொள்கைகளையும் கதைகளில் காண்கிறோம். அநேகமாக-ஒன்றிரண்டு கதைகள் நீங்கலாக-எல்லாக் கதைகளும் சிறப்பாக இருக்கின்றன.

துள்ளித் திரிகின்ற காலத்திலே...

[ஆசிரியர்: பி. ஸ்ரீ.; விலை: ரூ. 2-0-0; கிடைக்குமிடம்: அல்லயன்ஸ் கம்பெனி, தபால் பெட்டி நெ. 617, சென்னை-4]

அரிய செல்வங்களான குழந்தைகளை நாம் எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்பதை இந்நூல் மூலம் விளக்கியிருக்கிறார் புத்தக ஆசிரியர். குழந்தைகளிடை பிறப்பிலேயே அமையும் கைத்திறனையும், மூளைத் திறனையும் சரியானபடி வளர்க்கவில்லையெனின் அதனால் நேரிடக் கூடிய விபரீதங்களை எடுத்துக்காட்டியிருக்கிறார். பல பிரபலஸ்தர்களின் துள்ளித் திரிகின்ற காலத்தில் நடந்த சம்பவங்களைக் கூறியிருக்கிறார். பெற்றோர்கள் அவசியம் படிக்க வேண்டிய ஒரு புத்தகம் இது.

தப்பிப் பிழைத்தவர்

[மூல ஆசிரியர்: அலெக்ஸாண்டர் பார்மைமன்; மொழி பெயர்த்தவர்: ரா. அ. பத்மநாபன்.]

இது ஒரு ஸோவியத் ராஜதந்திரியின் சுய சரிதையாகும். ரஷ்யாவிலே இரும்புத் திரைக்குப் பின்னால் நடக்கும் உண்மை நிகழ்ச்சிகளை அம்பலப்படுத்தியிருக்கிறார், தெளிவான சுலபமான நடையிலே அழகாக மொழி பெயர்த்திருக்கிறார் ரா. அ. பத்மநாபன்.

தமிழின் வெற்றி

[ஆசிரியர்: கி. வா. ஜகந்நாதன்; விலை: ரூ. 1-4-0; கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிட்., சென்னை-18]

அந்தக் காலத்தில் புலவர்கள் தங்கள் கல்வித் திறனால் பல வியக்கத்தக்க காரியங்களைச் செய்துள்ளனர் என்பதை எடுத்துக் கூறுகிறார் ஆசிரியர். இப்புத்தகத்திலுள்ள பத்து கட்டுரைகள் மூலம், வெற்றி பெறுவது புலவர்கள் என்றாலும், அவர்களுக்கு உதவியது அவர்கள் புல

மனதிற்கு மகிழ்ச்சி அளிப்பது!

காரம், மணத்தில் நிகரற்றது!

எங்கும் கிடைக்கும்

பிரபல தெலுங்கு நடிகை கிருஷ்ணவேணி ஆலோ
சனை கலந்த ஆனந்தம் கொள்ளுவது தமிழ்ப் படமான
சோபனுசலாவின் ''மனைவி''யில் நடிப்பதற்காகவா ?

மை பெற்ற தமிழ் மொழி
தானே ! ஆகவே தமிழின்
வெற்றி என்றே குறிப்
பிட்டு விட்டார் ஆசிரியர்.

உதட்டில் உதடு

[ஆசிரியர்: ''சுராதா'';
விலை: ஆறு அணு; கிடை
க்குமிடம் : அஜந்தா பதிப்
பகம், கீழ்ப்பாக்கம்,
சென்னை-10]

புத்தகத்தின் தலைப்பு
தான் கொஞ்சம் விரஸமா
யிருக்கிறதே தவிர. உள்
ளே இருக்கும் சிறு சிறு
கவிதைகள் ரஸமாகவே
இருக்கின்றன. ஒவ்வொரு
கவிதையிலும் ஆசிரியர்
கொடுத்துள்ள உபமானங்
கள் அபாரம். ஒன்றிரண்
டை மட்டுமே குறிப்பிடு
கிறேன். மலையை எப்படிக்
குறிப்பிடுகிறுர் தெரியுமா?
''நிமிர்ந்த பம்பரம் போ
லே, யானை நெற்றியின்
மேடு போலே" "கூவு
கின்ற கோழியின் கருத்து
போன்ற அரிவாள் மணை"
—இப்படியாகப் பல உதா
ரணங்களைக் குறிப்பிட
முடியும். படிக்க வேண்
டிய ஒரு கவிதைத்தொகுதி
இது.

சங்கராந்தி பூஜை

[தொகுத்தவர்: ஆக்
கூர் கே. எஸ். ஸ்ரீனிவா
ஸன்; விலை: ரூ. 0-4-0:
கிடைக்குமிடம்: சுகுணு
பப்ளிஷிங் ஹவுஸ், 60,
ஈஸ்வரன் கோயில் தெரு,
சென்னை-17]

ஏற்கெனவே வெளியிட்
டுள்ள பல புத்தகங்களைப்
போல சுகுணு பப்ளிஷிங்
ஹவுஸின் இந்தப் புத்தக
மும் ஒரு நல்ல முயற்சி
தான். கோ பூஜையுடன்
கூட, சூரிய உற்பத்தி கார
ணத்தையும் கொடுத்திரு
க்கிருர் தொகுப்பாளர்.

ஆபாயப் பெண்

[ஆசிரியர்: ''வாசவன்;
விலை: 12 அணு; வாச
வன் வெளியீடு, 3/34,
போஸ்டாபீஸ் தெரு,
சென்னை-1]

சிறு கதையைத் தமது
வளவளவென்ற வர்ணனை
மூலம் ஒரு சிறு நாவலாக
வளர்த்திருக்கிருர் ஆசிரி
யர். கதை படித்து முடித்
ததும் ரஸமாக இருககிற
தென்ருலும் நடுவில் நடு
வில் அலுப்புத் தட்டத்
தான் செய்கிறது. கவர்ச்
சிகரமானமுறையில் இருக்
கிறது புஸ்தக அமைப்பு.

யூனிவர்சல் ஸ்டார்!

கோவையிலிருந்துவெளி
வரும் சினிமா மாத வெளி
யீடாகும் இது. இரண்
டணு விலையில், தாம
ரைக் கண்ணனை பதிப்பா
சிரியராகக் கொண்டு
வெளி வருகிறது.

இது படிக்காதவர்களுக்கு: டைரெக்டர் ரவிசந்தரின் சினிமாக் கோஷ்டியினர் வெளிப்புறக் காட்சிகளைத் தயாரிப்பதற்காக ஓர் இடத்தில் முகாமிட்டிருக்கின்றனர். இடைவேளையில், அங்கு பாழடைந்துகிடந்த வீரத்தேவன் கோட்டை பற்றிய கதையை கதாசிரியர் கதாநாயகி காமினி முதலியோருக்குச் சொல்கிறார்:

''சோழ நாட்டு ஜமீன்தாரர் குடும்பத்தைச் சேர்ந்த வீரத்தேவன் பாண்டிய நாட்டு நண்பன் இருளப்பனுடன் கொள்ளிடக் கரையை அடைகிறான். திருவிழா காலமானதால் ஏராளமான கடைகளும், ஜனத்திரளும் காணப்படுகிறது. ஒரு மரத்தடியில் ஒரு கிழவியிடம் இரு பெண்கள் குறி கேட்டுக் கொண்டிருக்கின்றனர், பெண்களில் கருப்பாயுள்ள பவளவல்லியும் வீரத்தேவனும் ஒருவரை யொருவர் கண்டதும் காதல் கொள்ளுகின்றனர்.

''வீரத்தேவனும் கிழவியிடம் குறிகேட்கிறான். கிழவி, ''அதிர்ஷ்ட தேவதையின் கடாக்ஷம் மட்டும் உன்மீது வீசியிருக்காவிட்டால் நீ பிச்சை எடுக்க வேண்டியவன்'' என்று கூறுகிறாள். இதைக் கேட்டதும் வீரத்தேவன் கோபமுற்று, கிழவியை அடிக்கப் போகிறான். இருளப்பன் அவனைத் தடுக்கிறான்.

''தன் மாளிகை அடைந்ததும் தாயார் மங்களாம்பிகையிடம் வீரத்தேன் இந்த சம்பவத்தைக் கூறுகிறான். அவள் நடுங்கிப் போகிறாள். ஒரு கிழவி காரணமாக தன் கணவன் மாண்டதையும், 'இந்தக் கிழவி ஒரு சூன்யக்காரியாய் இருப்பாள், நீ அவள் வழுக்குப் போகாதே' என்றும் மகனிடம் கூறி, வாக்குறுதி பெறுகிறாள்.

இனிமேல்......படித்தவர்களுக்கு:

மூன்றாம் அத்தியாயம்

134143

கொடுமையாக வீசிய வெய்யிலிலே வெகு நேரம் நின்று கொண்டிருந்து விட்டு, வானளாவி நின்ற அந்த மரத்தின் நிழலுக்கு வந்ததும், கதாசிரியருக்குச் சிறு பிராயத்தில் பள்ளியில் படித்த ஒரு பழமொழி நினைவுக்கு வந்தது. "நிழலின் அருமை வெய்யிலில்தான் தெரியும்'' என்று தமக்குள்ளே சொல்லிக் கொண்டார். அவரது கவனத்தைக் கவரும் நிமித்தம் எதிரே வந்து உட்கார்ந்த காமினி, ''எங்கள் பங்களாத் தோட்டத்திலே பழுத்த பழங்கள், ஸார்! சாப்பிட்டுப் பாருங்கள்!'' என்று கூறியபடி மாம்பழத் துண்டங்கள் நிறைந்த தட்டை அவர் அருகில் நகர்த்தினாள். ''உங்கள் புதிய பங்களா தோட்டத்திலே பழுத்தவைகளா இவைகள்? மிகவும் இனிப்பாக இருக்கிறதே!'' என்று புகழ்ச்சியாகப் பேசிய கதாசிரியர் பெரிய துண்டம் ஒன்றை எடுத்து வாயில் திணித்துக் கொண்டு சுவைத்து விழுங்கினார். மல்கோவா பழத்தின் இனிப்பு நாவிலே பரவியதும், அவரது கற்பனையும் இனிய உருவம் எடுக்கத் தொடங்கியது. துண்டினால் வாயைத் துடைத்துக் கொண்டு தொண்டையைப் பலமாகக் கனைத்துவிட்டுப் பேச ஆரம்பித்தார்.



• • •

அனல் பொரி பறப்பதைப் போன்று இதோ நம் முன் வீசுகின்றதே; இதைவிட மிகவும் கொடுமையாக அன்று பகல் சூரியன் காய்ந்து

கொண்டிருந்தான். கொள்ளிடத்து மணலினின்னும் எழுந்து வெம்மை, காலை வறுத்து விடும் போலிருந்தது. ஆனால், கால்களில் பாதரட்சைகளும், தலையிலே கனமான தலைப்பாகைகளும் அணிந்து கொண்டிருந்ததனால் வீரத்தேவனும் அவனது நண்பன் இருளப்பனும், மணல் கரை மீது நிலவிலே உலவுவது போல் மிகவும் சாவதானமாகப் பேசிக்கொண்டு நடந்து சென்ற வண்ணம் இருந்தனர்.

பேச்சின் இடையே தனக்கு முன்னே தெரிந்த நீண்ட சாலையைத் திரும்பிப் பார்த்தான் இருளப்பன். "தோழனே! வண்டி நிற்குமிடத்திலிருந்து வெகு தொலைவில் வந்து விட்டோம். பொன்னம்பலத் தேவருக்கு வேண்டியவர்கள் இந்தப் பிரதேசத்திலே அதிகம் உள்ளனர். அவர்கள் கண்களில் படுமுன் விரைவில் நாம் திரும்பி விடுவது நலம் அல்லவா! மேலும் இந்த முயற்சி பயனற்றது என்று நினைக்கிறேன். கடந்த பதினைந்து தினங்களாக நாமும் கொள்ளிடத்து இரு கரைகளையும் சுற்றி அலைந்து வருகிறோம். பயனைக் காணோம். புதுப்புனல் திருநாளிலிருந்து நீ இவ்வாறு மாறிவிட்டதை உன் அன்னையார் அறிவார்களானால் மெத்தவும் துயருறுவார்" என்றான்.

வீரத்தேவன் பதிலுக்கு குறுநகை செய்தான். அவனது உள்ளத்திலே குமுறிக் கொண்டு நின்ற உணர்ச்சிகள் யாவும் நீண்டதொரு பெருமூச்சாக எழுந்தது. இந்தப் பிடிவாதம், மௌனம், பெருமூச்சு இவைகள் எதைக் குறிக்கின்றன என்பதை இருளப்பன் நன்றாக அறிவான். ஆகவே அவன் நண்பனின் தோள்களைப் பரிவுடன் குலுக்கி விட்டு, "வெய்யிலின் கொடுமை சகிக்க முடியவில்லை. அதோ தெரிகிற அந்தச் சாலை மர நிழலிலே சற்று நேரம் இளைப்பாறுவோம், வா" என்று அழைத்தான்.

கரை ஓரத்திலே ஒரு பெரிய அரச மரம், குளிர்ந்த நிழலைத் தந்த வண்ணம் ஓங்கி உயர்ந்து வளர்ந்து நின்று கொண்டிருந்தது. மரத்தை யொட்டி யிருந்த மேடையை நோக்கி வேகமாகச் சென்ற இருளப்பன் பின்புறத்தினின்றும் பேச்சுக் குரல் எழும்பியதை உணர்ந்து தயக்கத்துடன் நின்றான்.

"பவளவல்லி! மேலே சொல்லேன்! கேட்பதற்கு மிகவும் ரஸமாய் இருக்கிறது" என்றது ஒரு பெண்ணின் குரல். நண்பர்கள் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் குறிப்பாகப் பார்த்துக் கொண்டனர். வீரத்தேவனின் கண்கள் ஆச்சரியத்தால் அகன்றன. இதழ்க் கடையிலே மெல்லியதொரு நகை அரும்பியது. சப்தமிட வேண்டாமென நண்பனுக்குச் சைகை செய்துவிட்டு, அவன் மரத்தின் பின் புறத்திலே வந்து நின்று கொண்டு மெல்ல அப்பால் எட்டிப் பார்த்தான்.

புதுப் புனல் திருநாளன்று மகிழ மரத்தடியில் தோன்றி மறைந்த அந்தக் கரும்பழகி, மேடைமீது, காலைத் தொங்க விட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவளது வலது கரம், அருகிலிருந்த தண்ணீர் குடத்தைத் தழுவியபடி இருந்தது. இடது கரத்தினால் தனது முகவாயைத் தாங்கிக் கொண்டு அவள் வீற்றிருந்த நிலை கதையின் கற்பனைகளுக்காக வான மண்டல முழுவதும் அவள் உலவிக் கொண்டிருக்கிறாள் என்பதை உணர்த்தியது. நீர் நிறைந்த செப்புக் குடத்தைத் தனது மடிமீது தாங்கிக் கொண்டு, கதையின் போக்கிலே நீர்க் குடத்தின் கனத்தைக் கூடப் பொருட் படுத்தாதவளாக அவளது வாயையே பார்த்துக் கொண்டு, எதிரே உட்கார்ந்திருந்தாள் தோழி வசந்தமாலை. புருவங்களைச் சிந்தனையோடு ஒருமுறை நெரித்து விட்டு, பவளவல்லி தோழியின் பக்கம் திரும்பினாள். ரோஜா இதழ்களை ஒத்த அழகிய அவளது உதடுகள் மெல்ல அசைந்தன. அவள் பேசலுற்றாள் :

"நான் சொல்கிறேன் என்று நீ சினந்து பயனில்லை, சோழனுக்குப் பெண் பேச ஒட்டக் கூத்தர் பாண்டிய மன்னனிடம் வந்திருந்தார். வந்த இடத்தில் எப்படி நடந்து கொள்வது என்ற முறை, கல்வியில் கற்றுத் தேர்ந்த கூத்தருக்கு மறந்து போயிற்று. அதற்குத்தான் சொல்ல வந்தேன், 'சோழ தேசத்தவர்களுக்கு என்றுமே மரியாதை பற்றிய உணர்ச்சி குறைவு' என்று" என்றாள் பவளவல்லி. வசந்தமாலை எதிர்த்துப் பேசாது இருப்பதைக் கண்டதும் அவள் மேலே சொல்ல ஆரம்பித்தாள்:

"குலோத்துங்க சோழன், தன் மகளை மணக்க விரும்புகிறான் என்ற செய்தியைக் கேட்ட பாண்டிய மன்னன் அதிசயித்துக் குறுநகை செய்து, 'புலவர் பெருமானே! உங்கள் அரசன், எங்கள் பாண்டிய குலப் பெண்ணைக் கொள்ளத் தகுதி வாய்ந்தவனா! அவனது பெருமைகளைக்

கூறும்!' என்று கேட்டார். உடனே கூத்தர், கர்வம் மேலோங்கியவராய், மிகவும் அதட்டலாகப் பேச ஆரம்பித்தார்.

"மன்னாதி மன்னா! எங்கள் சோழ அரசர்கள் ஏறும் புரவிக்குக் 'கோரம்' என்று பெயர். பாண்டிய மன்னர்கள் ஊர்ந்து செல்லும் 'கனவட்டம்' என்ற குதிரை, எங்கள் 'கோர'த்திற்கு ஒப்பாகுமா? மாரிக் காலத்தில் அன்றி, கோடையிலும் கடல் போல் பரவி, பெருகிப் பாய்ந்து பொன் கொழித்து அலையெறிகின்ற அகன்ற காவிரியாற்றுக்கு வைகையாறு நிகராகுமா? சிவனது திரு உளத்திற்கு உவப்பை யளிக்கும் ஆத்திமாலைக்குப் பாண்டிய மன்னர் அணியும் வேப்பமாலையா உவமையாகும்! உலகத்தைச் சூழ்ந்து நிற்கும் அந்தகாரத்தைப் போக்குவது எங்கள் சோழ மன்னனின் சின்னமாகிய சூரியனா? அல்லது பாண்டியன் குலச் சின்னமாகிய சந்திரனா? சோழனது புலிக் கொடிக்கு ஒப்பாகுமா பாண்டியனது மீனக் கொடி? உறையூருக்குக் கொற்கையை ஈடு சொல்ல முடியுமா? ஆகவே, எங்கள் சோழ நாட்டுக்குப் பாண்டிய நாடு எவ்விதத்தில் நிகராகும்' என்று பொருள்பட புலவர் பாடினார். அந்தச் சில அடிகளைக் கேள்" என்று கூறிவிட்டு பவளவல்லி வானத்தை நிமிர்ந்து பார்த்துத் தலையை இலேசாக அசைத்துக்கொண்டு, கண்களை மூடிக் கொண்டு, மோகனமான தொரு நிலையில் இருந்தவாறு வாய்திறந்து இனிய குரலில் பாடத் துவங்கினாள்;

"கோரத்திற் கொப்போ கனவட்டம்
அம்மானை
கூறுவதும் காவிரிக்கு வைகையோ
அம்மானை
ஆருக்கு வேம்பு நிகராகுமோ
அம்மானை
ஆதித்தனுக்கு நிகரம் புலியோ
அம்மானை
வீரருக்குள் வீரனொருவன் மீனவனோ
!அம்மானை
வெற்றி புலிக் கொடிக்கு மீன்
கொடியோ அம்மானை
ஊருக்குறந்தை நிகர் கொற்கையோ
அம்மானை
ஒக்குமோ சோனாட்டுக்கு பாண்டிய
நாடம்மானை"

என்று பாடி முடித்தாள்.

குளிர்ந்த நிழலிலே இன்பமாக வீசிய தென்றலிலே மிதந்து வந்த அந்தத் தேன்

குரல் வீரத்தேவனை மெய்சிலிர்க்கச் செய்தது. பெருமிதமும், வியப்பும் ஒருங்கே எய்தியவனாக அவன் தன் நண்பனை அணுகி, ரகசியமாக, "இருளப்பா! இனிப்புக்கு இன்னும் இனிப்பு ஊட்ட முடியாது என்று நான் ஐயுறுவதுண்டு. எனது ஐயப்பாட்டை இன்று தெளிந்துகொண்டேன்'' என்றான்.

"இப்பொழுதும் நான் தான் வெற்றி பெற்றிருக்கிறேன். எங்கள் பாண்டிய நாட்டுப் பெண்கள் வாயினின்றும் எழும் தமிழ் தமிழேயல்ல; அல்ல அப்பனே! தித்திக்கும் செந்தேன் என்று இன்றாவது அறிந்து கொள். மேலும், சோழநாட்டிலே கிடைக்கும் தேனைப் போல் நாக்கிலே ஊற்றி அதன் இனிமையை அனுபவிக்க வேண்டிய அவசியமே யில்லை. காது வழியே புகுந்தாலும் உடலும் உள்ளமும் இனிக்கச் செய்யும் தீந்தேன் வழிந்தோடும் வளமிகுந்த நாடு எங்கள் பாண்டிய நாடு'' என்று பரிகாசமாகக் கூறினான்.



பெண்ணின் தகப்பனார்:—மாப்பிள்ளைப் பையன் ரொம்ப சங்கோசப் பேர்வழி போலிருக்கிறது. பேசுகிற போதெல்லாம் பின்னாலே போய் நின்று கொண்டு பேசியதைக் கவனித்தீரா?

கல்யாணத் தரகர்:—அடடே, சொல்ல மறந்துட்டேனே! பையன் சினிமாவிலே பின் பாட்டுப் பாடறவன். அதனாலேதான்......... "இராசு"

''அருமைத் தோழனே! உனது ரசிகத் திறனை மெத்தவும் பாராட்டுகிறேன். சொல்லினைத் தேனிலே குழைத்துப் பேசும் இந்தப் பாண்டிய நாட்டு மோகினிக்குச் சோழ நாட்டைப் பற்றிப் பேசும்போது எவ்வளவு சினம் பொங்குகிறது பார்த்தாயா!'' என்று கேட்டுப் புன்னகை செய்தான் வீரத்தேவன்.

''விரைவிலே சோழநாட்டிற்குச் சொந்தமாகி விடப்போவதை அறியாதனால்தான் அவள் அவ்வாறு பேசுகிறாள். இருந்த போதிலும் வீரத்தேவா! முன்னெச்சரிக்கையாகக் கூறிவிடுகிறேன். இந்தப் பெண்மணி நமது அரண்மனை அந்தப்புரத்தை அடைந்தாளானால் அங்கு தற்போது உள்ளது போல் எப்பொழுதும் அமைதியே நிலவி நிற்காது'' என்று விஷமமாகக் கூறினான் நண்பன்.

''அமைதியான வாழ்விலே எனக்கு நம்பிக்கை இல்லை. மேலும் சொன்னதைக் கேட்டுத் தலையசைக்கும் பொம்மைகளாகப் பணி புரியும் சோழநாட்டுப் பெண்களின் அடிமை மனப்பான்மை என் வீரரஸனையுணர்ச்சிக்குப் பொருந்தவே பொருந்தாது. அதனால்தான் இந்த வீராங்கனை மீது என் மனம் ஓடி ஓடிச் சென்று உறவாடுகிறது'' எனக் கூறி, வாய்விட்டு உரத்துச் சிரித்தான் வீரத்தேவன்.

திடுக்கிட்ட பவளவல்லி கதையை நிறுத்திவிட்டுப் பரபரப்பாக எழுந்து நின்றாள். குடத்தைத் தூக்கித் தொப்பென இடையில் வைத்துக் கொண்டு, அச்சத்துடன் சுற்றிலும் பார்த்து மிரண்டு விழித்தாள் வசந்தமாலை.

ஒரு கண நேரந்தான் பவளவல்லி திடுக்கிட்டு மெய் பதறி நின்றாள். அடுத்த கணம் தன் எதிரே வந்து நின்ற அந்த ஆட்வர்களை அடையாளம் கண்டு கொண்டுவிட்டாள்.

கிருஷ்ணா பிக்சர்ஸார் சென்ற மாதம் வெளியிட்டுள்ள "மருமகள்" தமிழ்ப் படத்தில் பத்மினி.

வீரத்தேவனின் வசிகரமான முகத்தைக் கண்டு அவளது மனம் கொள்ளிடத்து சுழலைப் போல் இன்பப் பெருக்கிலே துள்ளிக் குதித்து வட்டமிட்டாலும், தன் உணர்ச்சிகளைச் சிறிதும் முகத்திலே காட்டிக் கொள்ளாது, மிகவும் அமைதியான குரலில் "ஐயா, பெண்கள் தனியாக உட்கார்ந்து வார்த்தையாடும் இடத்திலே தங்களுக்கு என்ன வேலை!"

என்று வேண்டுமென்றே போலியான தொரு கோபத்துடன் வினவினுள்.

"தமிழ் என்பதற்கு இனவேற்றுமை கிடையாது என்பதைத் தாங்கள் அறிந்திருக்க வேண்டும். தங்கள் வாயினின்றும் எழுந்த அந்தத் தமிழ் மொழி, தொலைவிலே நின்ற எங்களை இப்படி இங்கே காந்தமாகக் கவர்ந்து கொண்டு வந்துவிட்டது" என்று இருளப்பன் கூறிவிட்டு, இடி இடியென நகைத்தான்.

"முன் பின் தெரியாத பெண்களாகிய எம்மிடம் இவ்வளவு நெருங்கிப் பேச மிகுந்த துணிச்சல்தான். பார்த்தாயா, வசந்தமாலை! சோழநாட்டு ஆண் பிள்ளைகளுக்கு மட்டு மரியாதை என்பதே எப்பொழுதும் தெரிந்ததே கிடையாது" என்று இகழ்ச்சியாகப் பேசினுள் அவள்.

"முன் பின் தெரியாதவர்களா? பாண்டிய நாட்டுப் பெண்கள் பொய் அதிகம் பேசுவார்கள் போலிருக்கிறது. நாம் ஏற்கெனவே முன்னெரு தடவை சந்தித்திருப்பதாக எனக்கு ஞாபகம் நன்றாக இருக்கிறது. தாங்களோ இல்லை என்கிறீர்கள். சற்று முன் இந்த சோழ நாட்டைப் பற்றி அவதூருகத் தாங்கள் பேசுவதை நான் கேட்க நேர்ந்தது. அதைப் பற்றி ஒரு வார்த்தை மறுத்துக் கூறவே வந்திருக்கிறேன் நான்" என்ருன் வீரத்தேவன்.

பவளவல்லி பதில் கூருமல், அவனை ஏறிட்டு உறுத்து ஒரு முறை விழித்தாள். வேலைப் போல் பாய்ந்த அந்த விழிகளின் நிவீச்சைக் கண்டு அஞ்சாத வனுகத் தலை நிமிர்ந்து நின்ற அவன். "கூத்தர் பெருமான் மரியாதை தவறி பாண்டிய அவையில் மிகுந்த செருக்குடன் சோழநாட்டைப் புகழ்ந்து பேசினுர் என்றீர்கள், அம்மா! ஆனல் உங்கள் பாண்டிய நாட்டுப் புலவர் புகழேந்தி அதற்கு என்ன விடை யிறுத்தார்? அந்நிய நாட்டினின்றும் வந்த தூதுவனையிற்றே என்று அவர் சிறிதளவாவது மதித்தாரா? 'சிவன் முடியிலே ஏறுவது சூரியனு? எங்கள் பாண்டியக் குலச் சின்னமான சந்திரனு? திருஞான சம்பந்தர் பதிக மெழுதியிட்ட ஏடானது எதிரேறிக் கரை சேர்ந்தது காவிரியிலோ? எங்கள் வைகையில் அன்ருே?" என்று எதிர் பாட்டுப் பாடிக் கூத்தரை அவமதிக்கவில்லையா?"

பவளவல்லி அவனை எரித்து விடுகிறவள் போல் மீண்டும் ஒரு முறை உறுத்துப் பார்த்தாள். "ஐயா! விவாதம் செய்ய உங்களை நாங்கள் வலிய அழைக்கவில்லையே! நீங்கள் வந்த வேலையைப் பார்த்துக் கொண்டு போகலாம்" என்று வெடுக்கெனக் கூறிவிட்டு, குடத்தைத் தூக்கி இடையில் வைத்துக் கொண்டு தோழியின் கையைப் பற்றி இழுத்தபடி

பிரகாஷ் புரடக்ஷன்ஸாரின் தமிழ்ப் படமான "பெற்ற தாயி"ல் டி. டி. வஸந்தா, நாகேஸ்வரராவ், எம். என். நம்பியார்.

''புகையிலையில் அகப்பட்டுக் கொண்ட உன் பாடு வெகு குஷி. 'பாசவலை' யில் அகப்பட்டுக்கொண்ட நான் என்ன பாடு பட வேண்டியிருக்கிறது தெரியுமா ?'' என்று டி. ஆர். ராதா எதிரேயுள்ள விளம்பரப் பெண்ணிடம் கேட்கலாம்.

சாலையை நோக்கிச் சென்றுவிட்டாள்.

அரண்மனை அந்தப் புரத்திலே ஒரு சிறு சம்பவம் நிகழ்ந்து கொண்டிருந்தது. நெற்றியிலே திருநீறும், கழுத்திலே உருத்திராட்ச மாலையும், இடையிலே அணிந்த வெண்பட்டுச் சேலையுமாக மங்களாம்பிகை அம்மையார் சைவப் பழமானதொரு தோற்றத்திலே நின்று கொண்டிருந்தார். அந்தப் புரத்தினுள் இருந்த சிறு கோயிலுக்குச் சென்று அன்றாடம் காலை தமது கையினாலேயே பூஜை செய்து முடித்த பின்புதான் அம்மையார் உணவு உட்கொள்வது வழக்கமாதலால் அவர்கள் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். தோட்டத்தினின்றும் வேகமாக ஓடிவந்த பணிப்பெண் அவளை அச்சத்துடன் அணுகி ''ராணி அம்மா! தங்களைக் காணவேண்டுமென்று வயது சென்ற கிழவி ஒருத்தி நம் பூங்காவிலே காத்திருக்கிறாள். 'பார்க்காமல் போக மாட்டேன்' என்று பிடிவாதம் செய்கிறாள். பெயர் என்ன என்று கேட்டால் சொல்ல மறுக்கிறாள்'' என்றாள்.

மங்களாம்பிகையின் தாமரைப்பூவை நிகர்த்த முகம் ஒருகணம் வெளிறடைந்து போயிற்று. அருகிலிருந்த தூண் ஒன்றை இடது கரத்தால் சட்டெனப் பிடித்துக் கொண்டாள். நெஞ்சத்திலே ஏற்பட்ட பரபரப்பைத் திறமையுடன் கட்டுப்படுத்திக் கொண்டு, சாவதானமாக மெல்லிய குரலில் ''ராணியார் பூஜைக்குக் கிளம்பிக் கொண்டிருக்கிறார்கள் எனத் தெரிவித்தாயல்லவா?'' என்று வினவினாள்.

''தெரிவித்தேன் அம்மா! மிகவும் அவசரம். பார்த்து விட்டு விரைவில் சென்றுவிடுகிறேன் எனக் கெஞ்சுகிறாள்'' என்றாள்.

''பூஜை வேளையில் கரடி வந்தாற் போன்று என்பார்கள். அது போல் யாரவள் இந்த சண்டிக் கிழவி!' என்று தனக்குள் பேசுவது போல் சொல்லிக் கொண்ட மங்களாம்பிகை மெல்ல நகைத்தாள். அவளது நகைப்பு மிகவும் செயற்கையாக இருந்ததை பணிப் பெண் கவனித்துத் தனக்குள்ளே அதிசயித்தாள் எனினும், அவள் குனிந்த தலையை நிமிராது உத்தரவுக்காகக் காத்துக் கொண்டு நின்றாள்.

''நாட்டிலே பஞ்சம் மேலோங்கி விட்டதிலிருந்து தினமும் பிச்சைக்காரர்கள் தொந்தரவு அதிகரித்து விட்டது. பரதேசிகள் எந்த நேரமும் வந்து ஓயாது தொல்லை கொடுத்த வண்ணமே தான் இருக்கிறார்கள்'' என்று சலித்துக் கொண்ட மங்களாம்பிகை, ''பெண்ணே! சீக்கிரமாகச் சென்று அந்தக் கிழவியை இங்கு வரச் சொல்'' என்று உத்தர விட்டாள்.

பணிப் பெண் பின் தொடர உள்ளே மெல்ல வந்து நின்ற கிழவியைக் கண்ட

தும் மங்களாம்பிகை தன் முத்துப் பற்கள் தெரிய சிரித்தாள். "பாட்டி! மிகவும் அவசரம் என்று நிர்ப்பந்தம் செய்தாயே, வந்த காரியத்தைப் பேசலாமே" என்று கூறிவிட்டு பணிப் பெண்ணை நோக்கி, "கோயிலுக்குச் சென்று நீ காத்திரு. நான் விரைவில் வருகிறேன்" என்று கூறி அவளை அனுப்பிய பின்பு அறையின் கதவைச் சாத்தித் தாளிட்டாள்.

கிழவியுடன் மட்டும் தனியே இருந்த மங்களாம்பிகை கண்கள் சிவக்கப் பற்களை நறநறவெனக் கடித்துக் கொண்டு கடுமையான குரலில் "கிழட்டுப் பிணமே! அன்று நீ என் மகனைக் கண்டு என்ன சொன்னாய்! மறுமுறை அவ்வாறு நீ பேசுவாயானால் உன் தலை உன் கழுத்திலே நீடித்து நிற்காது, மறக்க வேண்டாம்!" என்று உறுமினாள்.

"ராணியம்மா! உன் மகன் மிகவும் அழகான காளை போல் வளர்ந்திருக்கிறான். முதலில் எனக்கே அடையாளம் தெரியாமல் போய்விட்டது. பிறகு அவனை யார் என அறிந்து கொண்டு விட்டேன்" என்று பதிலளித்த கிழவி, அச்சம் சிறிதும் இன்றித் தலையை ஆட்டிக்கொண்டு சிரித்தாள். நெற்றி மீது நழுவிப் புரண்ட தன் கூந்தலைத் தள்ளிச் சரிப்படுத்திக் கொண்டாள் மங்களாம்பிகை. அவளது உடல் முழுவதும் உணர்ச்சிக் கொந்தளிப்பால் நடுங்கியது.

"நேரில் வரவேண்டாமென்று முன்பே ஒரு தடவை உனக்கு எச்சரித்திருந்தேன். அப்படியும் நீ மிகவும் துணிவுடன் இங்கே வந்து எனக்குத் தொல்லை கொடுக்கிறாய். இதன் பயனை நீ அனுபவிக்காது போக மாட்டாய்" என்று அதட்டினாள்.

"வரவேண்டாம் என்று தான் இருந்தேன் ராணியம்மா! ஆனால் பசியின் கொடுமையைத் தாள முடியாததனால் நேரேயே வர நேர்ந்தது. உனக்கு என் மேல் ஏன் இவ்வளவு கோபம்? உன் மனம் மகிழும் செயலை நான் செய்து கொடுக்கவில்லையா! அதை நீ எவ்வாறு மறக்க முடியும்?" என்று நயவஞ்சகமாகக் கேட்டாள் கிழவி.

"ஆனாலும் உன் பசி அடங்காத கோரப் பசியாகவன்றோ இருக்கிறது? பேராசைப் பேயே!" என்று சினத்துடன் மொழிந்த மங்களாம்பிகை அறையின் மூலையில்

"டேய் ! உனக்கு வால் ஒன்றுதாண்டா பாக்கி !" என்று ராதாகிருஷ்ணனிடம் கே. ஆர். ராமசாமி கூறுகிறுப் போலிருக்கிறது. ஏவி.எம்.மின் "செல்லப்பிள்ளை"யில்.

பொறுமையற்ற மங்களாம்பிகை, மீண்டும் சில நாணயங்களை எடுத்து வந்து கிழவி முன் வீசிவிட்டு, "சரி, சரி! போய்த் தொலை என்றுள் வெறுப்புடன். பொற்காசுகளை எல்லாம் பொறுக்கிச் சேர்த்துத் தன் சேலைத் தலைப்பிலே முடிந்துகொண்ட கிழவி அவ்விடத்தை விட்டு அகன்றுள்.

அன்று மங்களாம்பிகையின் மனம் பூசையிலேயே செல்லவில்லை. விரைவாகத் தனது அன்றுடத் தொழுகையை முடித்துக் கொண்டு கோயிலினின்று வெளிப்பட்டாள். அது சமயம்

ந்த சிறு பேழையொன்றைத் திறந்து, சில பொன் நாணயங்களை எடுத்து வந்தாள்.

"இந்தா, இத்துடன் போய்த் தொலைந்து விடு. மீண்டும் ஒரு முறை உனது நிழல் இந்த அரண்மனை மீது படியக் கூடாது என்றுள்.

தரை மீது உருண்டோடிய நாணயங்களைப் பொறுக்கி எடுத்துக் கொண்ட கிழவி தன் பொக்கை வாயைத் திறந்து பயங்கரமாக ஒரு முறை சிரித்தாள்.

"பூ! ராணியம்மாள் வரவர மிகவும் கருமியாகி விட்டாளே! இந்த இரண்டு காசுகள் எனக்கு எத்தனை நாட்களுக்கு வரும்? என்று கேட்டாள்.

மீண்டும் சில நாணயங்களை எடுத்து வந்து அவள் முன் ஆத்திரத்துடன் வீசிய மங்களாம்பிகை "கிழப்பிணமே! நீ அதிக பேரம் செய்கிறுய். முன்பே தான் சொன்னேனே! அந்த ஓலையை என்னிடம் ஒப்படைத்து விடு என்று. அவ்வாறு செய்தால் நீ கேட்கும் தொகையைக் கொடுத்து உன்னை ஒழித்து விடுகிறேன்" என்றுள்.

கிழவி பதிலுக்குக் கைகொட்டி நகைத்தாள். "ராணியம்மா! அது எப்படி முடியும்? ஓலையை உன்னிடம் கொடுத்து விட்டேனுனல் நமது உறவு அத்துடன் அற்று விடுமே! என்று ஏளனமாகக் கேட்டாள்.

வீரத்தேவன் அங்கே வந்துகொண்டிருந்தான்.

தாயைக் கண்டதும் அவன் அடக்க முடியாத பரபரப்புடன் "அம்மா! ஒரு விந்தையான சம்பவம்! தங்களைக் காண நான் இங்கே வந்த சமயம் அந்தப் புரத்துப் பூங்காவிலே வயதானதொரு மூதாட்டி நின்றுகொண்டிருப்பதைக் கண்டேன். தொலைவிலிருந்து பார்த்ததில் அவள் அன்று என்னிடம் வீண் வார்த்தையாடிய அந்தக் கிழவி போன்று தோன்றிற்று. அருகில் சென்று பார்ப்பதற்காக நான் விரைந்து செல்லுமுன் அவள் மாயமாக எங்கோ மறைந்துவிட்டாள்" என்றுன்.

"என் அந்தப்புரப் பூங்காவிலே காற்றுக்கூட நுழைய முடியாதேயப்பா! வீரத்தேவா! இரவில்தான் எல்லோரும் கனவு காண்பார்கள். நீ பகலிலேயே கனவு காணத் துவங்கியிருப்பது விந்தையிலும் விந்தை" என்று இலேசாகச் சிரித்த வண்ணம், பூசைத் தட்டிலிருந்த ஒரு வில்வதளத்தை எடுத்து மகன் முன் நீட்டினுள்.

தாயின் கரம் நடுங்குவதைக் கண்ட வீரத்தேவன் தனக்குள்ளே வியப்புற்றுன்.

'இத்துடன் இடைவேளை முடிந்துவிட்டதனுல் நாளை மீண்டும் தொடரப்படும்' என்று நிறுத்தினுர் கதாசிரியர்.'

'பூங்கோதையில்' அஞ்சலியின் சிறந்த நடிப்பு

அவசியமற்ற வசனப் பந்தல்

பெண்களின் அநாவசியமான ஐயம் அவர்களது வாழ்வையே குலைத்து விடும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது "பூங்கோதை"யின் கதை. கதையின் சம்பவங்களில் பல ஏற்கெனவே பல படங்களில் கையாளப்பட்டவைகள் தான். முக்கியமாக, நாடோடிப் பெண் பட்டணம் பாபு மீது காதல் கொண்டு ஏமாறுவது போன்ற சம்பவங்கள் நமக்கு "காதல்" கதையையே நினைவூட்டுகின்றன.

வசனம் உயர்தரம் என்று புகழ முடியா விட்டாலும், மட்டம் என்று ஒதுக்கி விட முடியாது. "பெண்களின் முகம் ஒரு கூடை அல்வா மாதிரி இருக்கிறது"— இப்படிப்பட்ட கீழ்த்தரமான வசனங்களை நீக்கியிருக்கலாம். தவிர, சந்திரன் பேசும் நாஸ்திகப் பிரசார வசனங்கள் படத்தில் வேண்டுமென்றே புகுத்தப்பட்டிருப்பது நன்கு தெரிகிறது. "பராசக்தி" வெற்றி பெற்றது போல இப் படமும் வெற்றி பெறட்டும் என்று நினைத்து சேர்த்தார்கள் போலும்! ஆனால் அவர்களுக்கு அது பெருத்த ஏமாற்றமாக முடிந்து விட்டிருக்கிறது. வசனங்கள் ஒரே மாதிரியாக இல்லை. கொச்சையும் இலக்கணமும் கலந்து இருக்கிறது.

பட்டணம் பாபுவாக நாகேஸ்வர ராவ் நடித்திருக்கிறார். முன் பகுதிகளை விட பின் பகுதியில் — கிழவரான பிறகு — அவரது நடிப்பு நன்கு சோபிக்கிறது. மலையின் உச்சியில் நின்றபடி அவர் பேசும் கட்டம் நாடக மேடையை நினைவூட்டுகிறது. அவருடைய தமிழ் உச்சரிப்புகள் திருப்தி கரமாக இல்லை.

படத்திலேயே சிறந்த அம்சம் அஞ்சலி தேவியின் அற்புத நடிப்புதான். வெள்ளை உள்ளம் படைத்த பூக்காரப் பெண்ணை ரொம்ப இயற்கையாக நடித்திருக்கிறார். தன் தவறைத் தந்தையிடம் ஒப்புக் கொள்ளும் கட்டத்திலும், தந்தை இறந்த போதும், தன் மகளைக் கண்டித்து அறையும் இடத்திலும், தன் மகள் தந்தையென்று தெரியாது கணவனைக் கன்னத்தில் அறைவதைக் காணும் போதும் இவரது நடிப்பு உச்சத்தை அடைகிறது. சோக கட்டங்களில் இவரது நடிப்பு கண்களில் நீரை வருவிப்பதாக உள்ளது. படத்தின் வெற்றிக்கு ஒரே முக்கிய காரணம் அஞ்சலி தான் என்றால் மிகையாகாது. சுசீலாவாக பண்டரிபாய் உணர்ந்து நடித்திருக்கிறார்.

தந்தையாக வரும் எஸ். வி. ரங்காராவ் சொல்ப நேரமே வருகிறா ரென்றாலும் அதற்குள் தம் நடிப்புத் திறமையை வெளிப்படுத்தி விடுவது குறிப்பிடத் தக்கது. சிவாஜி கணேசனைப் பற்றி ஒன்றும் குறிப்பிடுவதற் கில்லை. அவரது நடிப்பு "பராசக்தி"யைப் பிரதிபலிக்கிறது. டி. கே. ராமச்சந்திரனுக்கு இப்படத்தில் சரியான வேலை யில்லை. வந்து போகிறார், அவ்வளவு தான். தாராவாக வரும் புது முகம் வஸந்தாவின் நடிப்பு பரவாயில்லை. பேச்சுகள் தான் கதவுக்கு இடுக்கில் அகப்பட்டுக் கொண்ட எலி கத்துவது போல் இருக்கிறது.

ரேலங்கி, ராதாகிருஷ்ணன், அங்கமுத்து, சூரியகாந்தம் இவர்கள் ஹாஸ்யம் என்ற பெயரில் அடிக்கும் கோமாளிக் கூத்து சகிக்கவில்லை. ஆபாசமாகவும் அருவருப்பாகவும் இருக்கிறது. ஒரு ஸ்திரீ பரபுருஷனைக் கன்னத்தைப் பிடித்து

பூங்கோதை

தயாரிப்பு	... அஞ்சலி பிக்சர்ஸ்
வெளியீடு	... நாஷனல் பிக்சர்ஸ்
வசனம்	...டி.கே.கிருஷ்ணசாமி
டைரெக்ஷன்	பிரஸாத்
ஸ்டுடியோ ...	வாஹினி
நீளம்	... 15,830 அடிகள்

நடிகர்கள் :

அஞ்சலி தேவி, வஸந்தா, பண்டரி பாய், நாகேஸ்வரராவ், சிவாஜி கணேசன், ரேலங்கி மற்றும் பலர்.

நேஷனல் டுபாக்கோ கம்பெனி உதவி மானேஜரும், ஸென்ட்ரல் டீ போர்டின் டிபுடி டைரெக்டர் ஸ்ரீ. கே. வெங்கடாச்சாரியின் புத்திரருமான ஸ்ரீ. வி. எஸ். ராகவனுக்கும், ரிடையர்டு விவசாய உதவி டைரெக்டர் ஸ்ரீ. கே. ராகவாச்சாரியாரின் புத்திரி சௌ. வஸந்தாவுக்கும் சமீபத்தில் திருமணம் நடந்தேறியது.

இழைப்பது கொடுமையிலும் கொடுமை.

பிரஸாத் டைரெக்ஷனைப் பற்றி 'ஓஹோ' என்று ஒன்றும் சொல்லும்படியாக இல்லை. ஹாஸ்யக் காட்சிகளைக் குறைத்து படத்தை மேலும் விறுவிறுப்பாக்கி யிருக்கலாம். பல இடங்களில் நாடக மேடை வாஸனை வீசுவதைத் தவிர்த்திருக்கலாம். 'துஷ்யந்தன் சகுந்தலை காதல் காட்சி' நன்றாகத் தயாரிக்கப் பட்டுள்ளது "மேக்-அப்" சிறப்பாகச் செய்யப் பட்டுள்ளது. ஹாஸ்யக் காட்சிகளைப் பெறும் அளவுக்கு நீக்கி அநாவசியமான நாஸ்திகப் பிரசார வசனங்களையும் வெட்டிவிட்டு படத்தைப் பிரமாதமாக்கி யிருக்கலாம்.

ஒலிப் பதிவு பாதகமில்லை. கமால் கோஷின் ஒளிப் பதிவு பிரமாதம். படத்தின் ஆரம்பத்தில் ஆனந்தனின் தந்தை காரைக் கண்டபடி செலுத்தி தற்கொலை செய்து கொள்ளும் கட்டமும், பிற்பகுதியில் மலை உச்சிக் காட்சிகளும் சிறந்த ஒளிப்பதிவுக்கு எடுத்துக் காட்டுகள்.

மொத்தத்தில் அஞ்சலி தேவியின் சிறந்த நடிப்பு ஒன்றுக்காகவே கூடப் பார்க்கப்பட வேண்டிய படம் "பூங்கோதை."

—"ஜாம்பவான்."

நாடகப் பெரியார் கௌரவிக்கப்பட்டார்

[30ம் பக்கத் தொடர்ச்சி]

டர் வரதராசனார், வி. ஸி. கோபால்ரத்னம். ஸி. என். அண்ணாத்துரை, கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார் ஆகியோர் பேசினார்கள். "கம்பதாஸன்" தாம் இயற்றிய வாழ்த்துக் கவி ஒன்றைப் பாடினார்.

அன்று மாலையில் நாடகாசிரியர் எழுதிப பல நாடகங்களிலிருந்த சில காட்சிகள் நடித்துக் காட்டப்பட்டன. சுகுண விலாஸ சபையினரும், கே. சாரங்கபாணி, டி. ஆர். ராமச்சந்திரன், மனோஹரர், டைரக்டர் ஏ. டி. கே. கோஷ்டி தனித் தனியே "சபாபதி" நாடகத்தில் சில காட்சிகளை நடித்தார்கள். திருவல்லிக்கேணி பைன் ஆர்ட்ஸ் கிளப் அங்கத்தினர்கள் "இரு நண்பர்க"ளிலிருந்தும், மெட்ரூஸ் அமெச்சூர் ஆக்டர்ஸ் க்ரூப்பினர் "காதலர்கண்களி"லிருந்தும், கே. ஆர். ராமசாமி, ராஜேந்திரன், ராஜம் மூவரும் "மனோஹரா"விலிருந்தும், எம். ஆர். ராதா, டி. கே. சம்பங்கி, டி. எஸ். பாலய்யா மூவரும் "கள்வர் தலைவ"னிலிருந்தும் சில பகுதிகளை நடித்தார்கள்.

அன்று நாடகப் பேராசிரியருக்கு அளிக்கப்பட்ட அந்தக் குதூகல மரியாதை நாடகக் கலைக்கே அளிக்கப்பட்டதாகவே கொள்ள வேண்டும். இந்த ஏற்பாடு செய்த நாடகக் கழகத்தினர் உருப்படியான ஒரு காரியத்தைச் செய்தமைக்கு அவர்களைப் பாராட்ட வேண்டியது அவசியம்.

ஆர். ஆர். பிக்சர்ஸார் உன்னத முறையில் தயா
ரித்துவரும் ''வாழப் பிறந்தவள்'' தமிழ்ப்
படத்தில் பி. எஸ். சரோஜாவும், ஸ்ரீராமும்.

ஓம் - உமா கூட்டுத் தயாரிப்பான "பணக்காரி"யில் (யோக) மங்களம்.

லட்சியவாதி பி.என்.ரெட்டி

'குதூகலன்'

நானும், நண்பர்கள் இருவரும் டைரெக்டர் பி.என். ரெட்டியின் வரவிற்காக அவரது பங்களாவின் ஹாலில் காத்திருந்தோம். அதே சமயம் வேறு சிலரும் அவரைத் தேடி அங்கு வரவே, ஹால் நிறைந்துவிட்டது. வந்தவர்களில் ஒருவர் ''ஹவுஸ் புல்'' என்று சொன்னார். சட்டென்று மற்றொருவர் "பி. என். ரெட்டி விஷயத்தில் எப்பொழுதுமே 'ஹவுஸ் புல்' தானே'' என்று ஹாஸ்யமாகச் சொன்னார். ஆனால் அது முழுக்க முழுக்க உண்மை தான். அவரது படங்களுக்கு எப்பொழுதுமே 'ஹவுஸ் புல்'தான்.

'பொம்மி நரஸிம்ம ரெட்டி' என்பது பி. என். ரெட்டியின் முழுப் பெயர். கடப்பை ஜில்லாவிலுள்ள கொத்தபள்ளி என்ற ஊர் கொலையாளிகளுக்குப் பெயர் போன ஊர். அது தான் பி. என். ரெட்டியின் சொந்த ஊர். அங்கே, 1908-ம் வருஷம், நவம்பர் மாதம் 11ம் தேதி பிறந்தார் அவர். கொலைகளுக்குப் பிரசித்தமான ஊரில் பிறந்தவரென்றாலும் அவர் ஒரு கொலை கூட—படத்தில் கதாபாத்திரத்தைக் கூட—செய்தது கிடையாது. பரம்பரையாக ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் செய்து வந்த குடும்பம். ரெட்டியின் தந்தையும் அதே தொழிலைத்தான் செய்து வந்தார். பி. என். ரெட்டி, சென்னைக்கு வந்து கல்வி கற்கலானார். 1930ம் வருஷம் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் இண்டர் மீடியட் வகுப்புடன் தம் காலேஜ் படிப்பை நிறுத்தினார். அதன் பிறகு, ஆடிட்டர் வேலைக்குப் படித்தார். 1932-ம் வருஷம் அதிலும் தேறி, 1934ம் வருஷம்வரை அப்பரிண்டிஸாக இருந்து வந்தார். காலேஜில் படிக்கும் காலத்தல், பிரபல நடிகரான பெல்லாரி ராகவாச்சாரியுடன் கூட பல அமெச்சூர் நாடகங்களில் அவர் நடித்திருக்கிறார். அப்பொழுதிலிருந்தே அவருக்குத் தாம் ஒரு எழுத்தாளராக வேண்டும் என்ற ஆவல் இருந்தது. இந்த எண்ணத்துடன் அவர் 1934-ம் வருஷம் சென்னையில் பி. என். கே. பிரஸ்ஸை ஆரம்பித்தார். இங்கு தான், காலஞ் சென்ற தெலுங்கு டைரெக்டர் ஜி. ராமபிரம்மம், தமது 'பிரஜா மித்ரா' என்ற பத்திரிகையை அச்சடித்து வந்தார். அதன் மூலம் ஜி. ராமப்பிரம்மத்துடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் பி. என். ரெட்டிக்குக் கிடைத்தது. அப்பொழுது ''கனகதாரா'' என்ற

பழைய நடிகை புஷ்ப வல்லியைப் புது நடிகர் கணேசன் ஏன் இப்படி மிரட்டுகிருரோ தெரிய வில்லை-"பெற்ற மனம்" படத்தில் ஒரு கட்டம்.

யென்றாலும் எச். எம். ரெட்டி வெகு தூரம் சொல்லி சம்மதிக்கச் செய்துவிட்டார்.

அதன் விளைவுதான், 1937-ம் வருஷம் ரோகிணி பிக்சர்ஸ் லிமிடெட் என்ற படக் கம்பெனி தோன்றியது. பி. என். ரெட்டி முயற்சி செய்து தமது நண்பர்கள் பலரை அதில் பங்குதாரர்களாகச் சேர்த்தார். எச். எம். ரெட்டியும். பி. என். ரெட்டியும் சேர்ந்து ரெட்டி அண்ட் கம்பெனி என்ற பெயரில் மேற்படி கம்பெனியின் மானேஜிங் ஏஜண்டுகளாக வேலை செய்தார்கள். கம்பெனியின் முதல் படமாக "கிருஹலக்ஷ்மி" தெலுங்குப் படம், அப்பொழுதிருந்த கார்த்திகேயா ஸ்டுடியோவில் தயாரிக்கப்பட்டது. அப்பொழுதுதான் ராம்னுத்-சேகர் இருவருடனும் பி. என். ரெட்டிக்குப் பழக்கம் ஏற்பட்டது. அன்று முதல் அவர்கள் மூவரிடை பரஸ்பரம் நெருங்கிய நட்பு ஏற்பட்டது.

"கிருஹலக்ஷ்மி" படத் தயாரிப்பின் பொழுதே எச். எம். ரெட்டிக்கும் இவருக்கும் பல விஷயங்களில் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டன. படம் தயாரித்து முடிவடைந்ததும், படம் மிகப் பிரமாதமான வசூல் அடையும் என்பது தெரிந்திருந்தும், சந்தோஷமாகப் பிரிவதே மேல் என்ற காரணத்தினுல், சிறு தொகை லாபத்துடன் பி. என். ரெட்டியும், அவரது சகாக்களும் விலகிக்கொண்டார்கள். அந்த சம்பவத்திற்குப் பிறகு பி. என். ரெட்டிக்கு இந்தத் தொழில் மீதே ஒரு விரக்தி ஏற்பட்டு விட்டது. அதை மறந்து விடுவதெனவும் அவர் தீர்மானம் செய்திருந்தார்.

ஆனல், அவர் எண்ணம் ஈடேருதது மட்டுமில்லை. உடனடியாக அதே துறைக்குத் திரும்பும்படியும் ஆகி விட்

தெலுங்குப் படத்தை ஜி. ராமபிரம்மம் தயாரித்து வந்தார். அவர் ஒரு நாள், ஷூட்டிங் பார்க்க வரும்படி, பி. என், ரெட்டியை அழைத்தார். அவரும் சம்மதித்துப் போயிருந்தார். போன இடத்தில் புழுக்கம் அதிகமாக இருக்கவே பேசாமல் ஒரு மரத்தடியில் போய் உட்கார்ந்து கொண்டுவிட்டார் பி. என். ரெட்டி. ஜி. ராமப்பிரம்மம், ஒரு நண்பரை அழைத்து வந்து, "நீங்கள் டவுனுக்குத்தானே போகிறீர்கள். உங்கள் காரில் இவரை ஏற்றிக்கொண்டு போய் வழியில் சென்ட்ரலில் இறக்கிவிடுங்கள்" என்று கூறி, அந்த நண்பரையும் அறிமுகம் செய்து வைத்தார்.

ஜி. ராமப்பிரம்மம் அறிமுகம் செய்து வைத்த அந்த நண்பர் வேறு யாருமல்ல; டைரெக்டர் எச். எம். ரெட்டிதான். காரில் போகும் பொழுதே இருவருக்கும் படத் தொழில் பற்றி பேச்சு நடந்தது. பி. என். ரெட்டி, நேருக்கு நேர் எச். எம். ரெட்டியிடம் அதற்கு முன் அவர் தயாரித்த படங்களிலுள்ள குறைகளையெல்லாம் எடுத்துக் கூறினர். அதற்குள் சென்ட்ரல் வரவும் எச். எம். ரெட்டி இறங்கிப் போய் விட்டார். இது நடந்த சில தினங்களுக்குப் பிறகு பி. என். ரெட்டியைத் தேடிக்கொண்டு எச். எம். ரெட்டி வந்தார். பி. என். ரெட்டிக்கு இத்தொழிலுக்கு வர விருப்பமில்லை

டது. அவருக்கும், நண்பர்களுக்கும் ரோஹிணியிலிருந்து கிடைத்த முதலும் லாபமும் மொத்தமாக பி. என். ரெட்டியிடமே இருந்தன. மறுநாள் காலை பணத்துடன் அவருடைய நண்பர்கள் அவரவர்கள் ஊருக்குப் போவது என்று ஏற்பாடு. முதல் நாள் இரவு சாப்பாட்டுக்குப் பிறகு அனைவரும் நிலா வெளிச்சத்தில் தமாஷாகப் பேசிக் கொண்டிருந்தனர். பேச்சு படத் தொழிலைப் பற்றி வந்தது. "யாராலும் இத்தொழிலில் வெற்றிகரமாக வர முடியாது" என்று ஒருவர் குறிப்பிட்டார். அவ்வளவுதான் பி. என். ரெட்டிக்கு ஆத்திரம் வந்துவிட்டது. "என்னால் முடியும்" என்று துள்ளிக் குதித்தார். "எங்கே செய் பார்க்கலாம்" என்று சவால் விட்டனர் மற்றவர்கள். சவாலை ஏற்றுக்கொண்ட பி.என். ரெட்டி, படத் தொழிலுக்குத் திரும்பாமல் வேறு என்ன செய்ய முடியும்!

இதுதான் வாஹினி பிக்சர்ஸ் லிமிடெட் பிறந்த கதை. நண்பர்கள் அப்படியே தங்கள் பணத்தை மூலதனமாகப் போட்டு கம்பெனியை ஆரம்பித்துவிட்டார்கள். பி. என். ரெட்டி அதன் மானேஜிங் டைரெக்டரானார். முதன் முதலில் கம்பெனி ரூ. 65,000 மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. ராம்னாத்–சேகர் ஜோடியாக, இக்கம்பெனியில் லாபத்தில் பங்கு பெறும் ஊழியர்களாக வந்து சேர்ந்தார்கள். வாஹினி பிக்சர்ஸின் முதல் படம் "வந்தேமாதரம்" தெலுங்குப் படமாகும். "வந்தே மாதரம் கதை பி. என். ரெட்டியினுடையது. அவர் அதை முதலில் நாவலாக வெளியிட வேண்டுமென இருந்தார். படத்தை ராம்னாத்தே டைரெக்ட் செய்ய வேண்டுமென ரெட்டி அபிப்பிராயப்பட்டார். ஆனால், ராம்னாத் "நீங்களே டைரெக்ட் செய்யுங்கள். நான் உங்களுக்கு வேண்

உலகத்தின் உச்சி உணர்ச்சிக்கு
போனிக்ஸ்
விசிறிகளை உபயோகியுங்கள்

PHOENIX
FANS

ஆபிசிலோ அல்லது வீட்டிலோ இருந்தவண்ணமாகவே குளிர்ந்த கடற்காற்றையோ, மந்த மாருதத்தையோ அனுபவிக்க, போனிக்ஸ் விசிறிகளைப் பொருத்தினாலேயே போதுமானது!

EWI LTD
RMS.2
EPOCH

R.M.S. & CO. LTD., 16, Broadway, Madras. 1

டேபிள், கேபின், பெடஸ்டல், எக்ஸாஸ்ட் ரக விசிறிகளும் கிடைக்கின்றன.

டிய உதவிகள் செய்கிறேன்'' என்று ரெட்டியை ஊக்குவித்தார்.

ராம்நாத் சொன்னபடியே, பி. என். ரெட்டிக்கு டைரெக்ஷன் விஷயத்தில் பெரும் உதவியாக இருந்தார். ''அப் படத்திற்கு என்னை டைரெக்டர் என்று சொல்வதைவிட ராம்னுத்தையே சொல் லலாம். டைரெக்டர் என்று எனக்கு இன்று ஏதாவது பெயரும் புகழும் ஏற் பட்டிருக்கிறது என்றால் நான் ராம்னுத் துக்கு அதற்காகப் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறேன்'' என்று அவர் ஹிரு தய பூர்வமாகக் கூறுகிறார். காஞ்சன மாலா, நாகய்யா நடித்த அப்படம் பெரும் புகழையும், பொருளையும் சம்பா தித்துக் கொடுத்தது.

இப்படத்திற்குப் பிறகாவது பட உல கிலிருந்து விலகிவிடலாமென அவர் நினைத்தார். ஆனால் மீண்டும் விடப்பட்ட ஒரு சவால்தான் அவரை படத் துறையி லேயே இருத்தி விட்டது. ''வந்தே மாதரம்'' அடைந்த அபார வெற் றிக்குக் காரணம், அதில் நக்ஷத்திர நடி கர்கள் நடித்ததுதான் — என்று பேச்சு வந்து விட்டது. ''அப்படியா நினைக்கி றீர்கள்! முற்றிலும் புது முகங்களுடன் ஒரு வெற்றிப் படம் தயாரிக்கிறேனு இல்லையா பாருங்கள்'' என்ற ரோஸம் வந்து விட்டது, பி. என். ரெட்டிக்கு.

அதன் விளைவுதான் வாஹினி பிக் சர்ஸின் இரண்டாவது படமான ''சுமங் கலி'', மாலதி, கிரி, குமாரி ஆகிய புது முகங்களைக் கொண்டு அவர் அப்படத் தைத் தயாரித்தார். அதனுல்தான் வேண்டுமென்றே நாகய்யாவுக்குக் கூட அப்படத்தில் ஒரு சிறு பாகத்தை அளித் திருந்தார். படம் சிறப்பாக இருந்ததென் ருலும், பண வசூலில் அது வெற்றி யடைய வில்லை. போட்ட பணத்தை எடுக்கவே ஆறு வருஷங்களாயின.

''தான் சினிமாக் தொழிலில்தான் இருக்கவேண்டும் என்பது ஆண்டவனின் கட்டளை'' என்பதை அவர் உணர்ந்து அதிலேயே ஸ்திரமாகி விட்டார். மூன் ருவதாக ''தேவதா'' என்ற படத்தை டைரெக்ட் செய்து தயாரித்து வெளி யிட்டார். இப்படத்தின் தரம் உயர்தர மாக இருந்தது; வசூலும் பிரமாதமாக இருந்தது. சென்னையில் வெள்ளி விழா வாரம் கொண்டாடிய முதல் தெலுங் குப் படம் ''தேவதா''தான். நான்கா வது வாஹினி பிக்சர்ஸின் படமான ''பக்த போதனு''. அதை அவர் டைரெக்ட் செய்யவில்லை என்றாலும், அவரது மேற்பார்வையில்தான் அந்த 'பாக்ஸ் ஆபீஸ் படம்' தயாரிக்கப்பட் டது.

''பாவுறமா பானுமதி''யை நக்ஷத்திர மாக்கிய படம் ''ஸ்வர்க்க ஸீமா'' ஆகும். அப்படத்தின் தயாரிப்பாளரும், டைரெக்டரும் பி. என். ரெட்டிதான். இப்படத்திற்கான கதை சக்ரபாணியால் எழுதப்பட்டது. அதுமுதல்தான் சக்ர பாணியும் இவர்கள் கோஷ்டியிலே இரு ந்து வருகிறார்.

''ஸ்வர்க்க ஸீமா'' படம் முடிவடைந் ததுமே, சொந்த ஸ்டுடியோ விஷயத் தில் பி. என். ரெட்டியின் கவனம் விழுந் தது. ''நமக்கென்று சொந்தமாக ஸ்டு டியோ ஒன்று இருந்தால்தான் சௌகரி யப்படும்'' என்று பி. என். ரெட்டி மற்ற பாகஸ்தர்களிடம் கூறினர்.

வாஹினி பிக்சர்ஸ் லிமிடெட் ஸ்தாப னத்தில் ஒரு பாகஸ்தரான நாராயண ஸ்வாமி, தம்முடைய சொந்தத்தில் ஸ்டு டியோவை ஆரம்பிப்பதாகவும், அதில் வாஹினி பிக்சர்ஸ் படங்களைத் தயாரிக் கலாமென்றும் கூற, மற்றவர்களும் சம் மதித்தனர். உடனடியாக ஸ்டுடியோ ஆரம்ப வேலைகளில் பி. என். ரெட்டி கவனம் செலுத்தத் தொடங்கினர். அந்த ஒரு காரணத்தினுல்தான் இடை யில் நான்கு வருஷங்களுக்கு அவர் எந் தப் படத்தையும் டைரெக்ட் செய்ய வில்லை.

1946-ம் வருஷ முடிவில் வாஹினி ஸ்டுடியோவுக்கான நிலம் வாங்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. *1948*-ம் வருஷம்தான் ஸ்டுடியோ படத் தயாரிப் புக்கு ஏற்ற நிலையை அடைந்தது. முதன் முதல் அந்த ஸ்டுடியோவில் ''குணசுந் தரி கதா'' தெலுங்குப் படம் தயாரிக் கப்பட்டது. அதன் பிறகு *1944*-ம் வரு ஷம் நாராயணஸ்வாமி என்பவரால் ஸ்டு டியோவை நிர்வகிக்க முடியாமல் போக, விஜயா புரொடக்ஷன்ஸார் ஸ்டுடி யோவைப் பதினைந்து வருஷங்களுக்கு குத்தகைக்கு எடுத்துக் கொண்டார்கள்.

அப்பொழுதுதான் ''மல்லேஸ்வரி'' படத்தை டைரெக்ட் செய்து தயாரித் தார் பி. என். ரெட்டி. படத்தின் தரம்

'ஓஹோ' என்று புகழும்படி இருக்கிறது. ஆனால், படத்தின் முதல்கூட இன்னும் திரும்ப வந்தபாடு இல்லை. பி. என். ரெட்டி மிகவும் சிரத்தை எடுத்துக் கொண்டு, கிருஷ்ண தேவராயர் காலத்து சரித்திரத்தை நன்ருக ஆராய்ச்சிசெய்து இப்படத்தைத் தயாரித்தார்.

பி. என். ரெட்டி தாம் டைரெக்ட் செய்யும் எல்லாப் படங்களுக்கும் இவ்வளவு ரூபாய் என்று சன்மானம் பெறுவதில்லை. பிரதிமாதமும் ஒரு சிறு தொகை அலவன்ஸ் பெற்றுக் கொள்ளுவார். பிற்பாடு படத்தின் நிகர லாபத்தில் டைரெக்ஷனுக்காக அவருக்குப் பங்கு தரப்படுகிறது.

அடுத்தபடி வாஹினி புரொடக்ஷன்ஸுக்காக ஒரு தெலுங்குப் படத்தை அவர் டைரெக்ட் செய்ய ஒப்புக்கொண்டிருக்கிருர். அது விஷயமான பூர்வாங்க வேலைகளில் அவர் இப்பொழுது ஈடுபட்டிருக்கிருர். அதுதவிர, பங்களூர், காயத்ரி புரொடக்ஷன்ஸாருக்காகவும் அவர் ஒரு தமிழ்-தெலுங்குப் படத்தை டைரெக்ட் செய்து கொடுக்க ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிருர்.

"உபயோககரமான பொழுது போக்கை அளித்து அதன் மூலம் மக்களுக்கும் தேசத்துக்கும் தொண்டுபுரியவேண்டும்" என்ற நோக்கத்துடன் தான் அவர் படத்தொழிலில் ஒட்டிக் கொண்டார். ஆனல், தம்மால் அந்த விஷயத்தில் வெற்றிபெற முடியவில்லை என்று அவர் கூறுகிருர். அவரது பல படங்கள் அவரது இலட்சியம் கைகூடும் முறையில்தான் இருந்திருக்கின்றன. ஆகவே அவரை ஒரு லட்சியவாதி என்று கூறுவது சரிதானே!

பி. என். ரெட்டி, பட உலகில் ஒரு தனிப் பிறவி. ஆடம்பரமோ, டாம்பீகமோ அவருக்குப் பிடிப்பதில்லை. அவருடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தால், அவர் ஒரு வேதாந்தியோ என்ற சந்தேகம் கூட வந்துவிடும். மனிதனிடம் தேவைக்கு வேண்டிய பணம் தான் இருக்கவேண்டும். அதற்கு அதிகமாகப்போனல்தான் பணம் அவனைப் பல தீய வழிகளிலும் போகத் தூண்டுகிறது--என்பது அவர் சித்தாந்தம். அவர் இப்படி வாய் விட்டுச் சொல்வதுடன் நிற்காமல் வாழ்க்கையிலும் அதுபோல நடக்கிருர். 'சம்பாதிப்பது ஒரு தம்பிடி-யானலும், அது பாடுபட்டு, நாணயமாகச் சம்பாதித்ததாக இருக்க வேண்டும்' என்பது அவரது கொள்கை.

ரோஹிணி பிக்சர்ஸார் இரு பாஷைகளில் தயாரித்து வரும் "வஞ்சம்" தமிழ்ப் படத்தில் வில்லனுக நடிக்கும் ராஜநளா.

'செய்வன திருந்தச் செய்தல் வேண்டும்' என்பதில் நம்பிக்கை கொண்டவர் ரெட்டி. வருஷத்திற்கு ஒரு படம் தயாரித்தாலும் அதை சிறப்பாகத் தயாரிக்கிருர் அவர். பி. என். ரெட்டி ஒளிவு மறைவின்றிப் பேசுகிறவர். தம் மனதில் பட்டதைச் சட்டென்று ஒளிவு மறைவின்றி சொல்லி விடுவார்.

பி. என். ரெட்டிக்கு ஒரு தினசரி பத்திரிகையை நடத்தவேண்டுமென்ற ஆவல் இருக்கிறது. எதிலுமே அதிகமாக ஆசைப்படாத அவருக்கு இப்பொழுது ஒரே ஒரு பெண்தான் இருக்கிருள்.

ஸ்ரீ வாணி கான சபா

புதுக்கோட்டை, ஸ்ரீ வாணிகான சபாவின் நான்காம் ஆண்டு விழா, சென்ற மாதம் 12ம் தேதி நடைபெற்றது. அன்றிரவு சபா அங்கத்தினர்கள், டி. கே. கோவிந்தன் எழுதிய "மனோரதம்" என்ற நாடகத்தை நடித்தார்கள்.

பிரம்மலோகம்

சீக்கிரமே திரையிடப்படக் கூடிய படங்களில், தமிழாக்கப்பட்டு வரும் ''அத்தை மகள்'' ஒன்றாக இருக்கும். தெலுங்கில், ஜம்பனுவின் டைரெக்ஷனில் தயாராகி வரும் இது உடனுக்குடன் தமிழிலும் தயாரிக்கப் படுகிறது— ஜம்பனு புரொடக்ஷன்ஸாரால். ஜி. வரலக்ஷ்மி, நாராயண ராவ், சாவித்திரி, ராமசர்மா, ரேலங்கி, சிவராவ், ஹேமலதா ஆகியோர் பிரதம பாகங்களில் நடித்துவரும் படம் இது. இந்தப் படத்தின் தமிழ் வசனங்களை சுப்ரமணியம் என்பவர்எழுதியிருக்கிறார்.

அவள்

சுகுமார் புரொடக்ஷன்ஸாரின் நான்காவது தயாரிப்பான ''அவள்'' நெப்டியூனில் துரிதமாகத் தயாராகி வருகிறது. இது தெலுங்கிலும் தயாரிக்கப்பட்டு வருகிறது. இரு படங்களையும் டி. ஆர். மஹாலிங்கமே டைரெக்ட் செய்து வருகிறார். டி. ஆர். மஹாலிங்கம், எஸ். வரலக்ஷ்மி, கே. சாரங்கபாணி ஆகியோர் பிரதம பாகங்களில் நடித்து வருகின்றனர். டைரெக்டர் ஸிம்ஹாவின் கதையாம் இது. படத்தின் வசனங்களை தஞ்சை ராமய்யாதாஸ் எழுதியிருக்கிறார்.

செல்லப் பிள்ளை

ஏவி. எம்.மின்''செல்லப் பிள்ளை'' மார்ச்மாத வெளியீடு என்பது நிச்சயமாகி விட்டதாம். படப்பிடிப்பு முடிவடைந்து,—இப்பொழுது படத்தை மெருகு கொடுக்கும் வெட்டு ஒட்டு வேலைகள் நடந்து வருகின்றன. கே. ஆர். ராமசாமி, பி. ஆர். பந்துலு, பண்டரிபாய், சாவித்திரி, ஸஹஸ்ரநாமம், பி. டி. சம்பந்தம் ஆகப் பலர் நடிக்கும் இப்படத்தை ப. நீலகண்டன் டைரெக்ட் செய்திருக்கிறார்.

ஆயிரம் விளக்கு

பம்பாயில் தயாராகி வரும் ஸன்னி ஆர்ட் புரொடக்ஷன்ஸின் ''உறன் கட்டோலா' என்ற ஹிந்திப்படம்''ஆயிரம் விளக்கு'' என்ற பெயரில் தமிழாக்கப்பட்டு வருகிறது. திலீப் குமார், ரூப் மாலா, நிம்மி இப்படிப் பிரபல நக்ஷத்திரங்கள் நடித்த படம் இது. இப்படத்தில் குரல் கொடுப்பதுடன் தமிழாக்கும் வேலைக்கும் பொறுப்பாக இருந்து வருகிறார் எம். என். ஸ்ரீனிவாஸன் என்பவர்.

பணக்காரி

மார்ச் மாதம் திரைக்கு வரக்கூடிய படங்களில் ''பணக்காரி''யும் ஒன்றாக இருக்கலாம். ஓம்—உமா பிக்சர்ஸாரின் கூட்டுத் தயாரிப்பான இப்படத்தின் நகாசு வேலைகள் இப்பொழுது கே. எஸ். கோபாலகிருஷ்ணன் டைரெக்ஷனில் நடைபெற்று வருகின்றன. நாகய்யா, எம். ஜி. ராமச்சந்திரன், ஜாவர் சீதாராமன், ஸி. வி. வி. பந்துலு, டி. ஆர். ராஜகுமாரி, யோகமங்களம், இந்திரா ஆசார்யா, செல்லம், ஆகப் பலர் நடித்து வரும் படம் இது. பிரபல ரஷ்ய நாவல் ஒன்றைத் தழுவியது இப் படத்தின் கதை. குமாரி பாரதியின் நடனம் ஒன்றும் இப்படத்தில் இருக்குமாம்.

ரத்தக் கண்ணீர்

நேஷனல் பிக்சர்ஸ், அடுத்தபடியாக எம். ஆர். ராதாவின் ''ரத்தக் கண்ணீரை'' வளர்க்க முற்பட்டுள்ளனர். அதற்காக சமீபத்தில் ஒரு பாட்டு 'ரிகார்டிங்' செய்யப்பட்டது. புரட்சிக்கவி பாரதிதாசன் புனைந்துள்ள அந்தப் பாட்டை, சங்கீத டைரெக்டர் ஸி.எஸ். ஜயராமன் டியூன் அமைத்துக் கொடுக்க, சூலமங்கலம் சகோதரியருள் ஒருவரான ராஜலட்சுமி பாடினார். இப்படத்தில் குசலகுமாரி பிரதம பாகத்தில் நடிக்க ஒப்பந்தம் ஆகியுள்ளார்.

ஔவையார்

பலவருஷங்களாகத் தயாராகி வரும் ஜெமினியின் ''ஔவையார்'' கண்டிப்பாகத் தமிழ் வருஷப் பிறப்பன்று திரைக்கு வந்துவிடுமாம். ஔவையார் கைலையை அடையும் காட்சி ஒன்றுதான் இன்னும் படமாக்கப்பட வேண்டியது பாக்கி இருக்கிறது. அது படத்திலேயே மிகச்சிறப்பான ஒரு கட்டமாக இருக்கவேண்டும் என்று வெகு சிறப்பாக அதைத் தயாரிக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றனவாம். அனாதரவாக விடப்பட்ட குழந்தை ஔவையை அவ்வழியே வந்த பரணரி

மனைவி தன் வீட்டுக்கு எடுத்துப் போகிறாள். இந்தக் கட்டம், சமீபத்தில் ஜெமினியில் "ஔவையார்" படத்திற்கென காமிராவுக்குள் புகுந்தது. பரணராக பாலசுப்பிரமணியமும், அவர் மனைவியாக குமுதினியும் அன்று நடித்தார்கள். கொத்தமங்கலம் சுப்பு டைரெக்ஷனில் உருப்பெற்று வரும் இப்படத்தில் ஔவையாக வரும் கே. பி. சுந்தராம்பாள், சங்கீத மழை பொழிந்திருக்கிறாராம். மற்றும் எல். நாராயணராவ், எம். கே. ராதா நடராஜன், குமாரி வனஜா, ஸி. வி. வி. பந்துலு, இப்படியாகப் பலர் நடித்து வருகின்றனர் படத்தில். நீண்ட நாட்களுக்குப் பிறகு சுப்பு—சுந்தரிபாய் ஹாஸ்ய ஜோடியையும் இப்படத்தில் காணலாம். இவ்வளவு காலம் ரஸிகர்களைக் காக்கவைத்ததற்கு பிரதியாக "ஔவையார்" ஒரு உயர்ந்த படமாக அமைந்திருக்கும் எனத் தெரிகிறது.

பெற்ற மனம்

டைரெக்டர் பிரஸாத், தம் சொந்த புரொடக்ஷன்ஸுக்காக "பெற்ற மனம்" என்னும் சமூக சித்திரத்தைதிரைக்காவியமாகச் செய்து வருகிறார், வாஹினி ஸ்டுடியோவிலே. இந்த "பெற்ற மனம்" படத்தின்மூலம் பார்ப்பவர்கள் மனத்தைக் கலங்க அடித்து முடிவில் களிப்பில் ஆழ்த்த டைரெக்டர் பிரசாத் திட்டமிட்டிருக்கிறார். இப்படத்தில் கதாநாயகனாக ராஜேந்திரனும், கதாநாயகியாக பி. கே. சரஸ்வதியும், வில்லனாக பராசக்தி கணேசனும் நடிக்கிறார்கள். பெற்ற மனத்தைப் பிரதிபலிக்கும் தாயாக நடிகை புஷ்பவல்லி சிரமப்பட்டு நடித்துள்ளாராம். இப்படியாக உருவாகிவரும் இந்த சமூகப் படம் அடுத்த மூன்று மாதங்களில் வெள்ளித் திரைக்கு வரும் என்று தெரிகிறது.

தந்தை

எம். ஆர். எஸ். மணி டைரெக்ஷனில் படமாக்கப்பட்டு, கேரளத்தில் திரையிடப்பட்டுள்ள "அச்சன்" மலையாளப் படம் தமிழிலும் தயாராகி வருகிறது. உதயா ஸ்டுடியோவில் தயாராகி வரும் இந்தப் படம் எக்ஸெல் புரொடக்ஷன்ஸ்

கும்பகோணத்திலுள்ள கஸ்தூரிபாய் மாதர் சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு விழா சென்ற மாதம் 8-ந் தேதியன்று தஞ்சை டிப்டி கலெக்டர் ஸ்ரீ. டி. எம். பாஸ்கர தொண்டமான் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடந்தபோது எடுக்கப்பட்ட மேலேயுள்ள படம்.

தயாரிப்பு ஆகும். பி. எஸ். சரோஜா, தீக்குரிச்சி, பிரேம் நஸீர் ஆகியோர் பிரதம பாகங்களில் நடித்துள்ள படம் இது. இதே படம் "தன்றி" என்ற பெயரில் தெலுங்குப் படமாகத் தயாராகிறது.

மதன மோஹினி

லிபர்ட்டி பிக்சர்ஸின் "மதன மோஹினி" படப்பிடிப்பு முடிவடைந்து திரையிடத் தயார் என்ற நிலைமையை அடைந்துவிட்டது. எம். எல். பதி டைரெக்ஷனில், ஸின்ஹாவின் மேற்பார்வையில் தயாராகியுள்ள படம் இது. சங்கீத டைரெக்டர் கே. வி. மஹாதேவன் இப்படத்திற்கென பல அரிய 'ட்யூன்'களை அமைத்திருக்கிருராம். நரஸிம்மபாரதி, வீரப்பா, எம். எல். பதி, ஸி. ஆர். ராஜகுமாரி, பொள்ளாச்சி கமலா, அங்கமுத்து, நவநீதம், புளிமூட்டை ஆகியோர் பிரதம பாகங்களில் நடித்துள்ள படம் இது.

மனம் போல மாங்கல்யம்

நாராயணன் கம்பெனியாரின் "மனம்போல மாங்கல்யம்" படப்பிடிப்பு ரேவதியில் நடைபெற்று வருகிறது. சமீபத்தில், கணேசன், பி. ஆர். மங்களம், பாலசரஸ்வதி, இவர்கள் சம்பந்தப்பட்ட காட்சியொன்று படமாகியது. இவர்களைத் தவிர சாவித்திரி, சந்தானலக்ஷ்மி கே. சாரங்கபாணி, 'பிரண்ட்' ராமசாமி, சிவதாணு, 'பொட்டை' கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் நடித்து வருகின்றனர். படத்தை பி. புல்லய்யா டைரெக்ட் செய்கிருர்.

ஜிஞேவா

சந்திரா பிக்சர்ஸின் "ஜிஞேவா" தமிழ்ப் படம் மார்ச் இறுதிக்குள் வெளிவந்துவிடும். சென்னை நியூடோன் ஸ்டுடியோவிலே "ஜிஞேவா"வுக்கான ஷூட்டிங்குகள் பரபரவென்று நடைபெற்றுவருகின்றன. எம். ஜி. ராமச்சந்திரன், வீரப்பா, பி. எஸ். சரோஜா, சக்ரபாணி, டி. எஸ். துரைராஜ் ஆகியவர்கள் இதில் நடித்து வருகின்றனர்.

"ஒய்! அகோர சாஸ்திரியாரே! கலியாணத்தை முடித்து வைப்பதற்குள்ளாகவே பணப் பெட்டியைக் காலி செய்துவிடுவீர் போலிருக்கிறதே!"—"வாழப் பிறந்தவள்" தமிழ்ப் படத்தில் காமெடியன் கே. சாரங்கபாணியும், டி. வி. சேதுராமனும்,

இது செய்தி

சென்ற மாதம் 12ம் தேதி ஒற்றவாடை தியேட்டரில் "மதி" என்ற நாடகம் நடைபெற்றது. மதி ஒளி நாடக மன்றத்தின் அங்கத்தினர்கள் நடித்தார்கள். அன்றைய நாடகம் இலவச இரவுப்பள்ளி நிதிக்காக நடைபெற்றது.

புரசை நண்பர்கள் குழுவின் ஆதரவில் சென்னை கோகலே ஹாலில் சென்ற மாதம் 14ம் தேதி "தொழில் மாற்றம்" என்ற குட்டி ஹாஸ்ய நாடகம் நடைபெற்றது. இந்த நாடகத்தில் கஜகர்ணம், கோகர்ணம் இருவரும் நடித்தார்கள்.

கடந்த சில மாதங்களாகவே, கட்சிப் பிரசார நாடகங்களையும், மட்டமான நாடகங்களையும் பார்த்துச் சலித்துப் போயிருந்த நாடக அபிமானிகளுக்கு சென்ற மாதம் ஆறுதல் ஏற்பட்டது என்னவோ உண்மைதான். சென்ற மாதம் 14, 15ம் தேதிகளில் மயிலை ரஸிக ரஞ்சனி சபா ஹாலில் நடைபெற்ற "அனார்க்கலி" தான் அத்தகைய ஆறுதலை அளித்தது. சிரஞ்சீவித்வம் பெற்ற அந்தக் காதல் காவியத்தை சுவை குன்றாது கவர்ச்சிகரமாக நாடகமாக்கி விறுவிறுப்பான வசனங்களையும் எழுதியிருந்தார். டி. கே. கோவிந்தன். இங்க உணர்ச்சி மிகுந்த நாடகத்தின் மெருகு கெடாமல் டாக்டர் வி. ராமமூர்த்தி நாடகத்தைச் சிறப்பாகத் தயாரித்திருந்தார். நல்ல ஒத்திகைகள் கொடுத்து ஒவ்வொரு நடிகரும் உணர்ந்து நடிக்கும்படி செய்திருந்த அவர் பாராட்டுதலுக்கு உரியவர். நாடகத்தில் அதிமுக்கியமான, கஷ்டமான பாத்திரமான மான்ஸிங் பாத்திரத்தை டாக்டர் வி. ராமமூர்த்தி ஏற்று கணீரென்று பேசி, கம்பீரமாக நடித்தார். வேஷப் பொருத்தமும் மிகவும் நன்கு அமைந்திருந்தது. எல்லோருக்குமே தகுந்த பாத்திரங்களாக அளிக்கப்பட்டிருந்தன. அனார்க்கலியாக நடித்த ராமமூர்த்தி அசல் பெண்ணாகவே காட்சி அளித்தார். பெண்கள் கண்டு பிரமிக்கும்படி அவர் மினுக்கிக் குலுக்கி நடந்தார்; ஆடினார்! அக்பராகத் தோன்றிய வரதராஜனும் நன்கு நடித்தார்.

இயற்கையான நடிப்புடன்கூட காட்சி ஜோடனைகளும், உடைகளும் நாடகத்தின் வெற்றிக்குப் பெரிதும் உதவின. ஏரியையும், மலையையும், பூஞ்சோலையையும், சிறைச்சாலையையும் தத்ரூபமாய் மேடைமீது காட்டினார்கள். இந்த நாடகங்களில், இதுவரை யாராலும் கையாளப்படாத ஒரு புது அம்சம் கையாளப்பட்டது குறிப்பிடத்தக்கது. நாடகத்தில் ஒவ்வொரு காட்சியிலும் செய்யப்பட்டிருந்த ஒளி ஏற்பாடுகளைத்தான் குறிப்பிடுகிறேன். க்ராம்டன் இஞ்சினீயரிங் கம்பெனி சுந்தரராமனின் இந்த முயற்சி போற்றத்தக்கதாயிருந்தது.

மியூஸியம் தியேட்டரில். சென்ற மாதம் 18ம் தேதி, "மைதிலி" நாடகம் நடைபெற்றது. "ஆனந்த விகடன்" "தேவன்" எழுதிய இந்த நாடகத்தை ரிஸர்வ் பாங்க் பொழுதுபோக்கு சங்கத்தினர் நடித்தார்கள். நாடகத்தை என். எஸ். நடராஜன் டைரெக்ட் செய்தார்.

சென்ற மாதம் 6ம் தேதி, ரஸிக ரஞ்சனி சபா ஹாலில் வைரம் நாடக சபையாரின், "புயலுக்குப் பின்" என்ற நாட

"மாமியார்" தமிழ்ப் படத்தில் பி. எஸ். சிவ பாக்கியத்தைச் சந்திக்கலாம்.

கம் நடிக்கப்பட்டது. நாடகத்தில் கருத்துகள் நிறைந்த வசனங்கள் இருந்தன. சர்வாதிகாரியாக நடித்த ராமனுதன் சர்வாதிகாரியாகவே மாறவிட்டார். கவிஞன் முரளீதரனுக நடித்த மணிநாதன் வார்த்தைகளை உச்சரித்ததும் நடித்ததும் அவரை ஒரு நிஜ கவிஞர் என்றே எண்ணும்படி செய்து விட்டன. காஞ்ஞுவாக நடித்த ரத்னமாலா வசனங்களை அதிவேகமாய் உச்சரித்ததால் சில இடங்களில் அவர் பேசியதே புரியவில்லை. கவியாக நடித்த ராஜகோபால் நன்கு நடித்தார். சிறைக் கைதிகளாக நடித்த சாயிராம், ஷண்முகம், வெங்கட்ராமன், கிருஷ்ணமூர்த்தி, நாராயணன் முதலிய எல்லாரும் நன்ருகவே நடித்தார்கள். நடனம் ஆடிய குமாரி ஜெயலக்ஷ்மி, குமாரி டி. ஆர். ராஜகுமாரி நன்ருகவே நடனம் ஆடினர்கள். பின்னணி வாத்திய கோஷ்டியினர் மிகவும் அனுசரணையாக வாசித்தார்கள். பின்னணியில் பாடிய சந்திரா நன்ருகப் பாடினர். பொதுவாக, வைரம் நாடக சபையின் முதல் நாடகமே முற்றிலும் வெற்றி என்று சொல்லலாம்.

மயிலை பைன் ஆர்ட்ஸ் கிளப் அங்கத்தினர்கள், சென்ற மாதம் 22ம் தேதி ''இரு மனம்'' என்ற நாடகத்தை நடித்தார்கள். டி. கே. கோவிந்தன் எழுதிய நாடகமாகும் இது.

ரோஹிணியின் புதுப் படம்

ரோஹிணி ஸ்டுடியோவில் மூன்ருவதாக ஒரு படத்திற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருகின்றன. "லாகாசி கோஷ்டே" என்ற மராத்திப் படத்தைத் தமிழில் தயாரிக்கப் போகிருர்கள். இப்படத்தில் நடிக்கவென டி. ஆர். ராமச்சந்திரனும் மைனுவதியும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். இப்படத்தின் சங்கீத டைரெக்ஷனை டி. ஏ. கல்யாணம் கவனித்து வருகிருர்.

ரத்த பாசம்

சென்ற மாதம் 2ம் தேதி, நெப்டியூன் ஸ்டுடியோவில் ''ரத்தபாசம்'' என்ற ஒரு புதுப் படத்திற்கான ஆரம்ப பூஜை நடைபெற்றது. ஸி. வி. வி. பந்துலு பூஜை பண்ணியதும், (டி. கே. முத்துசாமியின் பெண்களில் ஒருத்தி) ஒரு சிறுமி காமிராவை முடுக்கிவிட்டாள். இது டி. கே. எஸ். சகோதரர்களால் நடிக்கப்பட்டுவந்த நாடகம். நாடகத்தை எழுதிய ஸ்ரீதரே படத்தின் வசனங்களையும் எழுதுகிருர். இது ஜூபிடர்—ஔவை புரொடக்ஷன்ஸ் கூட்டுத் தயாரிப்பாக நெப்டியூன் ஸ்டுடியோவிலே, ஆர். எஸ். மணி டைரெக்ஷனில் படமாக்கப்படும். படத்தில் டி. கே. ஷண்முகம், டி. கே. பகவதி, எம். எஸ். திரௌபதி, டி. என். சிவதாணு, பிரண்ட் ராமசாமி, கருப்பய்யா, இவர்கள் தவிர இரண்டொரு நக்ஷத்திர நடிகர்களும் நடிப்பார்கள்.

ஆர். ஸி. ஏ. எக்விப்மெண்ட்

''தி எஸ். எஸ். யுனைடெட் ஸ்டேட்ஸ்'' என்ற யு. எஸ். ஏ.யின் ராக்ஷஸ பிரயாணக் கப்பலில் இரு தியேட்டர்கள் உள்ளன. அவை இரண்டும் ஆர். ஸி. ஏ., சாதனங்களுடன் கூடியவை.

வாழ்த்துகிறோம்

பிரபல ஹோமியோபதி டாக்டரான வி. ஆர். மூர்த்தி தமது புத்திரன் சிரஞ்சீவி சிங்களாஞ்சேரி ஸ்ரீனிவாஸனுக்கு உபநயனம் செய்து வைத்தார். சென்ற மாதம் 22ம் தேதி கும்பகோணத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது இந்த உபநயன வைபவம். அன்று மாலை வரவேற்பில் எம். எல். வஸந்த குமாரியின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

நமது பத்திரிகை அச்சாகும் கமர்ஷியல் அச்சகத்தில் பணியாற்றும் சிரஞ்சீவி கே. ஜெயவேல், சென்ற மாதம் 23ம் தேதி, சௌ. வி. கமலாவைத் தமது வாழ்க்கைத் துணைவியாகப் பெற்ருர். கமர்ஷியல் அச்சகத்தினர் அனைவரும் விஜயம் செய்து மணமக்களை வாழ்த்திச் சென்ருர்கள்.

பிரபல பொடி வியாபாரக் கம்பெனியான வி. ஷண்முகம் செட்டி அண்ட் கம்பெனியின் முதலாளி சிரஞ்சீவி வி. ஷண்முகம் செட்டி, சென்ற மாதம் 25ம்தேதி கிருஹஸ்தரானுர். ஊத்துக்கோட்டையில், சௌ. ராதாபாய் அம்மாளை அவர் தம் வாழ்க்கைத் துணைவியாகப் பெற்ருர்.

பரிசளிப்பு விழா

ஆங்கில விளக்க உரையுடன் "யூகி வாரிசு'' ஜப்பானியப் படம் சென்னை நகரில் திரையிடப்பட்டபோது, ஜெமினி ஸ்டுடியோவினர் குழந்தைகளுக்கு அப்படத்தைத் திரையிட்டுக் காட்டி, ஒரு பரிக்ஷை வைத்தது நினைவிருக்கலாம். அது சம்பந்தமான பரிசளிப்பு விழாவை அவர்

கள் சென்ற மாதம் 15ம் தேதி தங்கள் ஸ்டுடியோவில் நடத்தினார்கள். பரிசளிப்பு விழாவுக்கு "தினமணி" ஆசிரியர் ஏ. என். சிவராமன் தலைமை வகித்தார். மேனாடுகளில் குழந்தைகளிடையே அறிவுப் போட்டி நடைபெறுவது சகஜமென்றும், அதைப்போல் நம் நாட்டிலும் நடத்துவது அவசியமென்றும், அம்மாதிரியான ஒரு முயற்சியைச் செய்த ஜெமினி வாஸனைப் பாராட்டுவதாகவும் அவர் கூறினார். போட்டியில் கலந்துகொண்ட (114) எல்லாக் குழந்தைகளுக்குமே பரிசுகள் வழங்கப்பட்டன. ஜெமினி விளம்பர அதிகாரி வி. கே. என். சாரி, அறிவுச் சோதனை பற்றிய எண்ணம் எவ்வாறு உதயமாயிற்று என்பதையும், அது எவ்வாறு நடத்தப்பெற்றது என்பதையும் விவரித்தார்.

மாடர்ன் தியேட்டர்ஸின் அடுத்தது

மாடர்ன் தியேட்டர்ஸின் அடுத்த படத்திற்கான பூர்வாங்க வேலைகள் இப்பொழுது ஸ்டுடியோவில் நடைபெற்று வருகிறதாம். அப்படத்தின் கதை வசனங்களை மு. கருணாநிதி எழுதுவாரென்றும், படத்தை டி. ஜானகிராமன் டைரெக்ட் செய்வாரென்றும் தெரிகிறது. அப்படத்தில் நடிக்க சிவாஜி கணேசன், நரசிம்மபாரதி, டி. எஸ். துரைராஜ், பொட்டை கிருஷ்ணமூர்த்தி ஆகிய நால்வரும் ஒப்பந்தம் ஆகியிருக்கிறார்கள்.

ஸினி டெக்னீஷ்யன்கள் சங்கம்

சென்னை நகரில் முகாமிட்டு நாடகங்கள் நடித்து வந்த, எம். ஆர். ஏ. கோஷ்டியினருக்கும், அதன் தலைவர் டாக்டர் புச்மென்னுக்கும் ஸினி டெக்னீஷ்யன்கள் சங்கத்தார் ஒரு வரவேபளித்தனர். அந்த வரவேற்பு வைபவம் சித்ரா டாக்கீஸில் சென்ற மாதம் 8ம் தேதி நடைபெற்றது. சென்னை சட்ட மந்திரி ஸ்ரீ. கே. பி. குட்டி கிருஷ்ணன் நாயர் தலைமை வகித்தார்.

ஆண்டு விழா வைபவம்

பிருத்வி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்., தி ஏஷியாடிக் கவர்ன்மென்ட்



ஏவி.எம். ஸ்டுடியோவில் மூன்று பாஷைகளில் தயாராகிவரும் ''பெண்'' படத்தறகு பின்னணி பாடவந்த பிரபல வட இந்தியப் பாடகி லதா மங்கேஷ்கர் ஏவி.எம். சங்கீத கோஷ்டியினருக்கு ஒரு தேநீர் விருந்தை அளித்தார். மேலே படத்தில் டைரெக்டர் எம். வி. ராமன், சங்கீத டைரெக்டர் சுதர்ஸன் முதலியோரைக் காணலாம்.

செக்யூரிட்டி லைப் அண்ட் ஜெனரல் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட், இவைகளின் ஏழாவது ஆண்டு விழாவை சென்ற மாதம் 8ம் தேதி கொண்டாடினார்கள். தேநீர் விருந்துக்குப் பின் பிருத்வி கிளப் அங்கத்தினர்களால் மாறுவேஷப் போட்டி, நாடகம், இவைகள் நடைபெற்றன. பிரதம நீதிபதி கனம் பி. வி. ராஜமன்னார் இந்த விழாவுக்குத் தலைமை வகித்து பரிசுகளை வழங்கினார்.

பழைய படங்களுக்குத் தணிக்கை

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் திரையிடப்பட்ட படங்கள் 1953ம் வருஷம் மே மாதம் 31ம் தேதிக்குப் பிறகு திரையிடப்பட வேண்டுமானால், சென்ஸார் போர்டிடமிருந்து புதிய ஸர்டிபிகேட் வாங்க வேண்டுமென இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளனர்.

பத்திரிகைக் காட்சிகள்

கஜானனா புரொடக்ஷன் ஸாரது "மாமியார்'' படத்தின் பத்திரிகைக் காட்சி சென்ற மாதம் 12ம் தேதி சென்னை, சித்ரா டாக்கீஸில் நடைபெற்றது. சென்ற மாதம் 6ம் தேதி முதல் இப்படம் வெளியூர்களிலும், 12ம் தேதி முதல் சென்னையிலும் நடைபெறுகிறது.

கிருஷ்ணா பிக்சர்ஸின் "மருமகள்'' பத்திரிகைக் காட்சி சென்ற மாதம் 19ம் தேதி, சென்னை மினர்வாவில் நடைபெற்றது. இப்படம் சென்ற மாதம் 20ம் தேதி முதல் (சென்னை நகர் உள்பட) தமிழ்நாட்டின் பல நகரங்களில் திரையிடப்பட்டு ஆதரவு பெற்றுவருகிறது.

அமெச்சூர் நடிகர் குழாம்

சென்னை, அமெச்சூர் ஆக்டர்ஸ் க்ரூப்பினர், தங்களது மூன்றாவது ஆண்டு விழாவை, சென்ற மாதம் 22ம் தேதி, சௌந்தர்ய மஹாலில் நடத்தினார்கள். விழாவில் சுந்தரித் தம்பி பதங்கள் பாட, அவரது மகள் குமாரி பத்மினி ஆடினார்.

கீதாஞ்சலி நடனம்

சென்ற மாதம் 15ம் தேதி, கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் பழைய மாணவர்கள் சங்கத்தில்ஆதரவின் கீதாஞ்சலியின் முதல் நடனக் கச்சேரி நடைபெற்றது. கீதாஞ்சலி, நட்டுவனார் டி. எஸ். ஷண்முகசுந்தரம் பிள்ளையின் சிஷ்யை ஆவார்.

வாழ்க்கை வர்ணனை

[12-ம் பக்கத் தொடர்ச்சி]

பிறந்தவர்தான் நம் சாவித்திரி. அவரது தாயாரின் பெயர் துர்க்காபாய். சாவித்திரியுடன் பிறந்தவர் மாலதி என்றபெயருடைய ஒரே ஒரு தமக்கைமட்டும்தான். சாவித்திரி கம்மா ஜாதியைச் சேர்ந்த ஒரு கண்யமான குடும்பத்தில் பிறந்தவர்.

இப்பொழுது பதினேழாவது வயதை அடைந்துள்ள சாவித்திரி 1936ம் வருஷம் ஜனவரி மாதத்தில் சங்கராந்தி பண்டிகை தினத்தன்று பிறந்தார். சிறுவயதில் அவருடைய தமக்கையும்அவரும் பெஜவாடாவிலுள்ள கஸ்தூரிபாய் மெமோரியல் கல்லூரியைச் சேர்ந்த பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டனர். தமக்கை எஸ். எஸ். எல். ஸி. வரையில் படித்துவிட்டு நிறுத்தினார். ஆனால், தங்கை சாவித்திரியோ தம் படிப்பை இரண்டாவது பாரத்துடனேயே நிறுத்திவிட்டார். இதற்கு முக்கிய காரணம், அவருக்குப் படிப்பைவிட சங்கீதம், நடனம் ஆகியவைகளில் அதிகமான அக்கரை ஏற்பட்டிருந்ததுதான்.

சாவித்திரி சிறு வயதில் அசாத்தியமான துறுதுறுப்புள்ள பெண்ணாக இருந்தார். எதையும் எளிதில் கிரஹித்துக் கொண்டு, அதை அப்படியே திரும்பச் செய்து காட்டிவிடும் குணத்தையும் அவர் இயற்கையாகப் பெற்றிருந்தார். அவர் தாமாகவே எங்கோ பார்த்துவிட்டு வந்த டான்ஸை அப்படியே ஆடிக் காட்டியதும், அவருக்கு நாட்டிய சிக்ஷை சொல்லி வைக்கவேண்டும் என்ற எண்ணம் தகப்பனாருக்கு ஏற்பட்டது. இப்படி நினைத்த அவர், நினைத்ததோடுநின்றுவிடாமல், சிஸ்ட்லா பூர்ணய்ய சாஸ்திரி என்பவரிடம் சாவித்திரி நடனக் கலையில் சாஸ்திரோக்தமான பயிற்சி பெறுவதற்கு ஏற்பாடும் செய்தார். இரண்டு வருஷ காலம் இப்படியாக சிக்ஷை பெற்ற பின்னர், சாவித்திரி எளிய கவர்ச்சிகரமான சில நடனங்களை ஆடுவதற்கு பி. வி. நரசிம்ம ராவ் என்பவரிடம் கற்றுக் கொண்டார். பிறகு குச்சிபூடி நடனத்தில் புகழ்பெற்றவரான கோட்டா சுப்ரமண்ய சாஸ்திரிகாருவிடம் அவர் குச்சிபூடி நடனங்களைக் கற்றுக் கொண்டார்.

நடனத்தை பயின்றுவந்த அதே காலத்தில் சாவித்திரி சங்கீதத்தையும் கற்று வந்தார். நெல்லூரைச் சேர்ந்த வயலினிஸ்ட் வி. என். ஆச்சார்யா அவருக்கு குருவாக அமைந்தார். இப்பொழுதுகூட சாவித்திரிக்கு நன்கு பாடத் தெரியுமாம். பெஜவாடா ரேடியோவில் அவர் சில தடவைகள் பாடியுமிருக்கிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

சாவித்திரியின் நடன சங்கீத சிக்ஷைகளெல்லாம் 7வது வயது முதல் 12வது வயதுக்குள் முடிவடைந்துவிட்டன. நடனத்தில் ஓரளவு சிக்ஷை முடிந்தவுடனேயே சாவித்திரி மேடைக் கச்சேரிகளில் நடனம் ஆடத் தொடங்கிவிட்டார். அவருடைய முதல் நடனக் கச்சேரி பெஜவாடாவில் ராம் மோஹன் புத்தகசாலையில் நடைபெற்றது. பிறகு, ஸ்ரீராமநவமி உத்ஸவத்தின்போது ராஜமஹேந்திரபுரத்தில் ஒரு தியேட்டரில் அவர் நடனம் ஆடினார். பின்னர் கொத்தகூடா, பாலக்கோல் ஆகிய ஊர்களிலும் நடனம் ஆடி அவர் நல்ல புகழ்பெற்றார்.

இப்பொழுது விற்பனையாகிறது!

வெண்ணிலா

காதல் மாதப் பத்திரிகை

மார்ச் இதழ்

ஆர்வி, மாயாவி, எல்லார்வி, வி. லட்சுமி, கா.ஸ்ரீ.ஸ்ரீ. முதலியோரின் கதைகள். 'கண்ணாடி ஜன்னல்' என்னும் தொடர் நாவல், இன்னும் பல புதுமையான அம்சங்கள்.

மூவர்ண அட்டை.

விலை 8 அணாதான்

வருஷ சந்தா ரூ. 6

எங்கும் ஏஜெண்டுகள் தேவை

"வெண்ணிலா"

P. B. 1793 :: Madras—1.

''பெண் மனம்'' தமிழ்ப் படத்தில் நீங்கள் பார்த்த இந்த பேபி கீதா (பட்டு) வைச் சீக்கிரமே இன்னொரு தமிழ்ப் படத்திலும் பார்க்கலாம்.

ஆந்திர நாடக கலாபரிக்ஷத்தின் மஹாநாடு 1950-ம் வருஷத்தில் காக்கினடாவில் நடந்தது. பிரபல வட இந்திய குணசித்ர நடிகரான பிருதிவிராஜ் தலைமைவகித்த இந்த மஹாநாட்டில் சாவித்திரியின் நடனக் கச்சேரி நடந்தது. பிருதிவிராஜ் சாவித்திரியின் ஆட்டத்தை மிகப் பாராட்டிவிட்டு, அதன் அறிகுறியாக ஒரு புஷ்பச் செண்டை பரிசளித்தார்.

இந்த நடனங்களில் ஒன்றை பெஜவாடாவில் பார்த்து மகிழ்ந்த தோனேபூடி கிருஷ்ணமூர்த்தி என்பவர் சாவித்திரியை சினிமாவிற்குள் நுழைத்து வைக்கும் கைங்கரியத்தை ஏற்றுக்கொண்டார். அவர் அப்பொழுது தயாரிக்கப்பட்டு வந்த ''சம்ஸாரம்'' தெலுங்குப் படத்தின் வினியோக உரிமைகளை வாங்கியிருந்தார். ஆதலால், அப்படத்தில் சாவித்திரியை பிரதம பாகத்தில் நடிக்கச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் அவர் அவரை சென்னைக்கு அழைத்து வந்தார். அதன்படியே பிரதம பாகத்தையும் அவருக்கு வாங்கித்தந்தார்.

சாவித்திரி பதினைந்தே தினங்கள்தான் அந்த பிரதம பாகத்தில் நடித்தார். பிறகு, காதல் கட்டங்களில் அவரது நடிப்பு அப்பொழுது உப்புச் சப்பில்லாமலிருந்ததால் பிரதம பாகத்தை ரத்துசெய்து, அவருக்கு ஒரு சாதாரண கதாபாத்திரம் அளிக்கப்பட்டது.

நகரத்திற்கு வந்து நல்லதோர் வெற்றிப் படத்திலும் நடித்த பிறகு சாவித்திரிக்கு தம் ஊருக்குத் திரும்ப மனமில்லை. தாம் கதாநாயகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டும் தள்ளப்பட்டு விட்டது அவர் மனதை உறுத்திக்கொண்டேயிருந்தது. மேலும் படங்களில் தொடர்ந்து நடித்து சீக்கிரத்தில் ஒரு புகழ்மிக்க நக்ஷத்திரம் ஆகிவிட வேண்டும் என்று அவர் தீர்மானித்துக் கொண்டார். அதற்கிணங்க, அவரை விஜயாவின் ''பாதாள பைரவி'' தமிழ், தெலுங்குப் படங்களுக்கு டைரெக்டர் கே. வி. ரெட்டி ஒப்பந்தம் செய்து கொண்டார். இந்தப் படத்தில் கிராமிய நடனம் ஆடியிருக்கும் பெண்மணி சாவித்திரிதான். கூடியவரையில் அந்த நடனம் நன்றாகவே அமைந்திருந்ததால் விஜயா புரொடக்ஷன்ஸார் அடுத்தபடியாகத் தயாரித்த ''கல்யாணம் பண்ணிப் பார்'' படத்திலும் அவருக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்தனர்.

''கல்யாணம் பண்ணிப் பார்'' படத்தில் விஜயா புரடக்ஷன்ஸார் அவருக்கு ஒரு சிறிய வேஷத்தையே கொடுத்திருந்தனர். ஆனால், அந்தச் சிறிய வேஷமே சாவித்திரிக்கு தெலுங்குப் பட உலகில் மிகுந்த கிராக்கியை ஏற்படுத்தி வைத்துவிட்டது. மளமளவென்று அவர் பல படங்களில் நடிக்கத் தொடங்கினார்.

பாரத் லக்ஷ்மி பில்ம் கம்பெனியார் தயாரித்த ''பிரியராலு'' என்ற தெலுங்குப் படத்தில் அவருக்கு முக்கிய பாத்திரம் கிடைத்தது. அடுத்தாற்போல் சாவித்திரி நடித்த ''சாந்தி''யில் அவருக்கு அளிக்கப்பட்ட வேஷமும், அவர் நடித்திருந்த நடிப்பும் பாராட்டத் தக்கதாயிருந்தது. இப்படங்களைத் தொடர்ந்து அவர் ''ரூபாவதி'', ''ஆதர்சம்'', ''பல்லட்டூரு'', ''சங்கராந்தி'' ''பிரதகுதேரு'', ''மேனரீகம்'', ''ஜோதி'' ஆகிய ஏழு படங்களில் பிரதான வேஷங்களில் நடித்தார்.

முதல் படத்தில் கதாநாயகி வேஷத்திற்கு லாயக்கில்லை என்று தள்ளப்பட்ட அதே சாவித்திரி இரண்டேவருஷ காலத்திற்குள் ஒரு டஜன் படங்களில் — அது

வும் முக்கிய பாகங்களில் நடித்து — ஒரு பிரபல நக்ஷத்திரம் ஆகிவிட்டது ஆச்சரியம் அல்லவா!

சாவித்திரி தற்போது எட்டுப் படங்களுக்கு ஏககாலத்தில் ஒப்பந்தமாகி நடித்து வருகிறார். அவர் நடித்துவரும் "தேவதாஸ்" படம் தமிழ், தெலுங்கு, ஆகிய இரு பாஷைகளில் தயாராகி வருகிறது. இதே போலத்தான் ரோஹினி யாரின் படமும்—"பிரதிக்ஞை", "வஞ்சம்" என்ற பெயர்களில் இரு பாஷைப் படமாகத் தயாராகி வருகிறது. சாவித்திரி நடித்துவரும் "சந்திரஹாரம்", "செல்லப் பிள்ளை" ஆகியவையும் இரு பாஷைப் படங்களாகும். இவை தவிர, அவர் தற்பொது "மனம்போல் மாங்கல்யம்", "ரத்தக் கண்ணீர்", ஆகிய தமிழ்ப் படங்களிலும், "பரோபகாரம்", "கன்ன கடுபு" ஆகிய தெலுங்குப் படங்களிலும் நடித்துக் கொண்டிருக்கிறார்.

"செல்லப்பிள்ளை"யில்—தமிழ்ப் படங்களில் முதல் தடவையாக—சாவித்திரிக்கு பிரதான வேஷம் கிடைத்துள்ளது. "மனம்போல் மாங்கல்யம்" படத்திலும் அவருக்கு புகழ் தேடித் தரக்கூடிய நல்ல வேஷம் கிடைத்திருக்கிறதாம். "செல்லப் பிள்ளை" வெளி வந்தவுடன், அது சாவித்திரியை தமிழ்ப்பட உலகிலும் ஒரு முன்னணிக் கதா நாயகியாக ஆக்கி வைத்துவிடும் என்று தாராளமாய் எதிர்பார்க்கலாம்.

சாவித்திரிக்கு தாய்பாஷையான தெலுங்கு தவிர, தமிழ், ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய பாஷைகளும் தெரியும். சில கன்னட, தெலுங்கு நக்ஷத்திரங்களைப் போல் சாவித்திரி தம் தமிழ்ப்பட வசனங்களை தம் தாய் பாஷையில் எழுதிக் கொண்டு கர்ண கடூரமாய் பேசுபவர் அல்ல. அவருடைய கையில் "குண்டூசி" பிரதி ஒன்றைக் கொடுத்ததும் அவர் கடகடவென்று பக்கங்களைப் புரட்டிப் படிக்கத் தொடங்கி விட்டார். மூன்றே வருஷ காலத்திற்குள்—பல வேலைகளுக்குமிடையே—அவர் தமிழ் பாஷையை கொச்சையில்லாமல் பேசுவதற்கு மட்டுமன்றி எழுதப் படிக்கவும் கற்றுக்கொண்டுள்ளதை அறிய நான் ஆச்சரியமடைந்தேன்.

சாவித்திரிக்கு தாமே மோட்டாரை ஓட்டிக் செல்லுவதில் மிக இஷ்டம். படத்திற்காக கத்திச்சண்டையிடுவதிலும் பயிற்சி பெற்று வருகிறார். அவகாசம் உள்ள போது அவர் ஆங்கிலப் படங்களையும், நல்ல ஹிந்திப் படங்களையும் பார்க்கச் செல்லுவது வழக்கம். பிரபல வட இந்திய நக்ஷத்திரங்களான திலிப் குமாரும், நர்கீஸும் அவருக்கு மிகப் பிடித்த நக்ஷத்திரங்களாவர்.

"சாவித்திரிக்குப் பிடித்தவைகளையெல்லாம் சொன்னீர்கள். அவருக்குப் பிடிக்காதது ஒன்றுமில்லையா?" என்று நீங்கள் கேட்கக்கூடும். அவருக்குப் பிடிக்காததும் ஒன்றுண்டு. நாமெல்லாம் காலையில் எழுந்தவுடன் விரும்பி அருந்தும் காபி பானம்தான் அது! இதற்குப் பதில் அவர் டீயையே விரும்புகிறார்.

ஷூட்டிங்கில் கடினமாக உழைக்கும் போதுகூட, சாவித்திரி அதைச் சிறிதும் பொருட்படுத்தாமல், கலகலப்பாகச் சிரித்துப் பேசி, தன்னையும், கூட இருப்பவர்களையும் உத்ஸாகப்படுத்தும் சுபாவம் கொண்டிருக்கிறார். அவர் காட்டும் ஒத்துழைப்பு மனோபாவம் மிகப் போற்றத் தக்கது. துரிதமாய் பிரபலம் அடைந்து வரும் சாவித்திரியின் வெற்றி ரகஸியம் இந்த நற்குணங்களே ஆகும்.

எவ்வளவு அதிகமான வேலையிருந்தாலும், இரவு எவ்வளவு நேரமானாலும், அன்றைய நிகழ்ச்சிக் குறிப்புகளை டைரியில் பதிந்தால்தான் சாவித்திரியின் இமைகள் மூடுமாம்! அவருக்கு தமிழ் நாட்டிலிருந்தும், ஆந்திராவிலிருந்தும் பல ரஸிகர்கள் கடிதம் எழுதி வருகிறார்களாம். அவைகளில் மிக முக்கியமானவைகளுக்கு மட்டும் அவர் அவ்வப்போது (முடிந்த வரையில்) பதில் எழுதிவருகிறாராம்.

ஐந்து வருஷத் திட்டம் வகுப்பதில் நம் இந்திய சர்க்கார் தான் தேர்ந்தவர்கள் என்று நினைக்கிறீர்களா! சாவித்திரிகூட ஒரு ஐந்து வருஷத் திட்டத்தை வகுத்துக் கொண்டிருக்கிறார். ஐந்து வருஷத்திற்குள் அவர் ஒரு முன்னனி நக்ஷத்திரம் ஆகிவிடத் திட்டமிட்டிருக்கிறார். அது மட்டுமல்ல, திருமணமும் செய்து கொண்டு, தாயாராகும் பாக்கியத்தையும்கூட அவர் அடையப் போகிறாராம். இதைப் படித்ததும், "சாவித்திரியின் கணவர் ஆகும் பாக்கியம் நமக்கே ஏற்பட வேண்டும்" என்று சினிமா ரஸிகர்களில் பலர் "கனவு" காணத் தொடங்கி விடுவார்கள் என்பது நிச்சயம்!

'மருமகள்' - பார்க்க வேண்டிய படம்

உன்னத கருத்துகளும், உயரிய நடிப்பும் ஒருங்கே பொருந்தியது.

சென்ற ஓரிரண்டு வருஷ காலத்தில்–"சமூகப் படங்கள் வேண்டும்" என்று கிளர்ச்சி செய்தவர்களுக்கு தண்டனை அளிக்கும் தோரணையில் – பல சமூகப் படங்கள் வெளிவந்துள்ளன ! அவைகளில் பெரும்பாலனவைகளில் கடவுள் நிந்தனை, அரசியல் நிந்தனை, கட்சிப் பிரசாரம். ஜாதிமதக் கிண்டல் போன்றவைகள் மலிந்து காணப் படுகின்றன. இது தான் போகட்டும் என்றால், விபசாரம், திருட்டு, கொள்ளை, மோசடி முதலிய குற்றங்கள் கண்டிக்கப் படுவதற்குப் பதில், நம் படங்களில் போற்றப்பட்டு வருகின்றன ! இந்த சமூக 'வேதனை'ப் படங்களை பார்த்துச் சலித்துப்போன ரஸிகர்கள், "நல்ல நீதிகளையும், ஒழுக்கத்தையும் பிரசாரம் செய்யும்–ஆபாஸமற்ற உன்னத தமிழ்ப் படங்கள் எப்பொழுது வருமோ ?" என்று ஏங்கத் தொடங்கினர். இந்த நிலைமையில், சமீபத்தில் வெளிவந்த "என் வீடு". "மருமகள்" ஆகிய இரண்டு படங்களும் பட ரஸிகர்களை "அப்பாடா" என்று பெருமூச்சுவிட்டுச் சந்தோஷிக்கும்படிச் செய்து வருகின்றன. இவ்விரண்டு படங்களிலும் மேற்சொன்ன குற்றங்கள் இல்லாததோடு, நல்ல தத்துவ அடிப்படையின் பேரில் தயாரிக்கப் பட்டிருப்பது மிகப் போற்றத் தக்கதாகும்.

'பணம் ஒருவனது குணத்தை எவ்வளவு மாற்றிவிடுகிறது' என்பதைச் சித்திரிக்கிறது, "மருமகள்" கதையின் ஆரம்பப் பகுதி. அத்யந்த நண்பர்கள் இருவர் பணம் காரணமாக விரோதிகளாக மாறிவிடுகின்றனர். பெற்றோர்களின் விரோதத்தினால், ஒருவரை யொருவர் காதலித்துவந்த குமாரும், உஷாவும் பிறிக்கப் படுகின்றனர். ஆனால், கல்லூரி மாணவ மாணவிகளின் முயற்சியினால் அவர்கள் (பெற்றோர்களின் விருப்பத்திற்கு மாறாக) தம்பதிகளாகின்றனர்.

வேண்டாத மருமகளாக வந்து சேர்ந்த உஷாவையும், மூத்த மருமகளான சாந்தாவையும் குமாரின் தாயார் கொடுமைப் படுத்துகிறாள். சாந்தா சரியான எதிர்ப்பு சக்தியுடைய மருமகளாய் விளங்குகிறாள். வீட்டில் சதா ரகளை. அதனால் மனமுடைந்த சாந்தாவின் கணவன் பரஸ்திரி உறவை நாடுகிறான்.

குமார் மேல் படிப்பிற்காக அமெரிக்கா செல்கிறான். குமாரின் தங்கை ரூபா ஒரு சினிமாப் பித்தனிடம் சிக்கி கர்ப்பவதியாகிறாள். இந்த நிலைமையில், உஷா அசாத்தியமான பொறுமையுடன் நடந்து, அதன் மூலம் தவறு செய்யும் அனைவரையும் திருத்துகிறாள். இந்த முயற்சியில் அவளுக்கு பல கஷ்டங்களும் அவமானமும் ஏற்படுகின்றன. முடிவில்,

மருமகள்

தயாரிப்பு : கிருஷ்ணா பிக்சர்ஸ்

டைரெக்ஷன் :	யோகானந்த்
ஸ்டுடியோ :	ரேவதி, சென்னை
வசனம் ;	ஏ. எஸ். ஏ. சாமி
பாட்டு :	உடுமலை நாராயண கவி
ஒளிப்பதிவு :	பொம்மன் டி. இரானி
ஒலிப் பதிவு :	வி. ரங்காச்சாரி
,, பாட்டு :	டி. எஸ். ரங்காச்சாரி

பின்னணிப் பாட்டு :

பெரியநாயகி, வஸந்தகுமாரி, ஜிக்கி, ஏ. பி. கோமளா, ரத்னமாலா, ஏ. எம். ராஜா

நடிகர்கள் :

என். டி. ராமராவ், டி. ஆர். ராமச்சந்திரன், சகஸ்ரநாமம், பி. ஆர். பந்துலு, டி. பாலசுப்ரமண்யம், வி. கே. ராமசாமி, மாஸ்டர் சுதாகர்,

நடிகைகள் :

லலிதா, பத்மினி, எஸ். டி. சுப்புலக்ஷ்மி, எம். சரோஜா. லக்ஷ்மி பிரபா, சுரபி பாலசரஸ்வதி, ராஜகாந்தம், அங்கமுத்து, ஆதிலக்ஷ்மி, சூர்யகாந்தம், இந்திரா, ஆச்சார்யா, பேபி சரஸ்வதி முதலியோர்.

பிரிந்த பெற்றோர்கள் ஒன்று கூடுகின்றனர். குழந்தைக்குத் தாயாகிவிட்ட ரூபாவை சினிமாப் பித்தனே தன் மனைவியாக ஏற்றுக் கொள்ளுகிறான்!

இக்கதையில் நம்ப முடியாத சம்பவங்கள் ஒன்று கூட இல்லை. தினசரி வாழ்க்கையில் நிகழும் பல சில்லரை நிகழ்ச்சிகளை அழகாக ஒன்று சேர்த்து, ஸ்வாரஸ்யம் மிக்க ஒரு கதையாக்கப் பட்டிருக்கிறது—"மருமகள்." டைரெக்டர் கதையைக் குழப்பமற்ற முறையில் படமாக்கியிருக்கிறார். இதற்காக கதாசிரியரும், டைரெக்டரும் பாராட்டப்பட வேண்டியவர்களே. கதையில் தொடர்பு விட்டுப் போகும் இடங்கள், இரு கோள் சொல்லிகளின் பேச்சு மூலம் சரிப்படுத்தப் படுகிறது. இது சிறந்த 'டெக்னிக்' இல்லை யென்றாலும் வெறுக்கத் தக்கதாயில்லை.



மைதீன் புகையிலைக் கம்பெனியார் குடியரசு தினத்தை சிறப்பாகக் கொண்டாடினார்கள். அச்சமயம், சிறந்த காந்தி பக்தரும், இக் கம்பெனியின் ஸ்தாபகருமான காலஞ்சென்ற ஈ. எஸ். மைதீன் அவர்களின் உருவப் படம் திறந்துவைக்கப்பட்டது. படத்தில்உள்ளவர்கள் : (இடது புறம்) மைதீனின் ஏக புத்திரர். (இடது புறம்) மைதீன் புகையிலைக் கம்பெனி மானேஜர் ராமு பிள்ளை.

படத்தின் ஆரம்பப் பகுதி—அவசியமற்ற நீளமான நடனப் பகுதி காரணமாக—விறுவிறுப்பின்றி அலுப்புத்தட்டுகிறது. இதே போலத்தான் சினிமாப்பித்தனின் லீலைகளும் அளவுக்கு அதிகமாய் நீண்டிருக்கிறது.

'சட்டி பானைகள் உருளுவது போல் பேசப்படும் வசனங்களே சிறந்த வசனம்' என்ற தவறான அபிப்பிராயம் நம் ரஸிகர்களின் மனதில் சமீப காலமாய் ஏற்பட்டிருக்கிறது. இதற்குமாறாக இப்படத்தில் வசனங்கள் பொருத்தமாய் அமைக்கப் பட்டிருக்கின்றன. ஒரேயடியாய் கொச்சையாகவோ, அல்லது இலக்கணப் பிரசங்கமாகவோ இல்லாமல் நடுநிலைமை வகிக்கிறது வசனம்.

பாட்டுகள் எளிய பேச்சு நடையில் அமைக்கப்பட்டுள்ளன. படத்தில் சங்கீத அம்சம் பூரண திருப்தி அளிப்பதாக இல்லை. நிறையப் பாட்டுகள் இருந்தும் ஒன்றிரண்டு பாட்டுகளே காதில் ஒலிப்பவையாய் உள்ளன.

கிருஷ்ணா பிக்சர்ஸின் படமென்றால் ஒரே நக்ஷத்திரக் குவியலாக இருக்குமல்லவா! மருமகளிலும் பல பிரபல நக்ஷத்திரங்கள் நடித்திருக்கிறார்கள். படத்தில் வேஷப் பொருத்தமும், நடிப்பும், புகழத்தக்க வகையில் பொருந்தியிருக்கின்றன, அநேகமாக எல்லோருமே தம் தம் பாத்திரங்களை உணர்ந்து பொருத்தமாய்நடித்திருக்கிறார்கள். டி. பாலசுப்ரமண்யத்திற்கும், பத்மினிக்கும் நடிப்பில் முதல் ஸ்தானம் அளிக்கலாம். என். டி. ராமராவின் நடிப்பு இப்படத்தில் ஏமாற்றத்தையே அளிக்கிறது.

படத்தின் பிற்பகுதியில் கதை மளமளவென்று முன்னேறுகிறது. பொதுவாக, டைரெக்ஷன் பாராட்டத்தக்க முறையிலுள்ளது. ஒலிப்பதிவு, ஸெட்டிங்ஸ், ஆடையலங்காரம், மேக்கப், எடிட்டிங் ஆகியவை திருப்திகரமான முறையில் இருக்கின்றன. ஒளிப்பதிவு கலை நுணுக்கங்கள் கூடியதாயிருக்கிறது.

"மருமகள்" உன்னத நோக்கங்களுடன் தயாரிக்கப் பட்டிருக்கும் ஒரு நல்ல படம். சிறந்த நடிப்பும், பொழுதுபோக்கு அம்சங்களும் நிறைந்துள்ள இப்படம், சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவரும் பார்க்கவேண்டிய படம் என்று சிபார்சு செய்கிறேன். —"நிழல்"

சென்னையில் "மிஸ்டர் சம்பத்"

முன்பு ஜெமினி "மிஸ் மாலினி" என்ற தமிழ் படத்தை வெளியிட்டு புகழ் தேடிக் கொண்டார்களல்லவா? அதே கதையை "மிஸ்டர் சம்பத்" என்ற பெயருடன் ஹிந்திப் படமாகத் தயாரித்து வட இந்தியாவில் காட்டி வருகின்றனர். இந்த ஹிந்திப் படம் இப்பொழுது சென்னையிலும் (வெலிங்டனில்) காட்டப்பட்டு வருகிறது. இதில் பத்மினி, குமாரி வனஜா, மோதிலால் போன்ற பிரபல நக்ஷத்திரங்கள் நடித்திருக்கின்றனர். "மாலினி"யைப் பார்த்தவர்களுக்குக்கூட "சம்பத்" ஒரு புதுப் படமாகவே தோன்றும், பழைய படத்தை பூராவாக மாற்றி, பல புது அம்சங்களையும் சேர்த்து வெளியிட்டிருக்கின்றனர்.

"சம்பத்"தில் நடனக் காட்சிகள் அதிகரிக்கப் பட்டிருக்கின்றன. மோதிலால் (சம்பத்) பிரமாதமாய் நடித்திருக்கிறார். பத்மினியின் நடிப்பு சிறந்து விளங்குகிறது. வனஜாவின் நடனமும் பரவாயில்லை.

படத்தில் ஹாஸ்யச் சுவை மிக்க வசனங்கள்பிராதான்யம் வகிக்கின்றன. என் பக்கத்திலிருந்த—ஹிந்தி தெரிந்த நண்பர் சிரித்த வாய் மூடவேயில்லை.

மொத்தத்தில், "மாலினி"யில் காணப்பட்ட விறுவிறுப்பும், கச்சிதமும் "சம்பத்"தில் இல்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. ஒருவேளை, சம்பாஷணைகளை என்னால் ரஸிக்க முடியாமற்போனதும் இதற்குக் காரணமாக இருக்கலாம்.

ராமனுத் தலைவரானுர்

ஏப்ரல் மாதம் நடக்கவிருக்கும் இரண்டாவது அகில இந்திய ஸினி டெக்னிஷ்யன்கள் மஹாநாட்டிற்கு டைரெக்டர் கே. ராமனுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். மாகாணத்திற்கு நால்வர் வீதம் 12 பேர்கள் கொண்ட ஒரு நிரந்தர கமிட்டியும் அமைக்கப்பட்டிருக்கிறது.

உபநயன வைபவங்கள்

பிரபல சித்திரக்காரரும், நம் பத்திரிகையில் 'லக்ஷ்மி'யின் கதாபாத்திரங்களை தத்ரூபமாய் சித்திரித்து உங்கள் கண்முன் கொண்டுவந்து நிறுத்துபவரும், "கிரைட்டீரியன்" விளம்பர ஸ்தாபனத்தைச் சேர்ந்தவருமான ஸ்ரீ. கே. ஜி. எல். நாராயணன் ("ரவி") தம் புத்திரர்களான ராம் கோபாலுக்கும், ராம்தாஸுக்கும் மார்ச் 2-ந் தேதியன்று உபநயனம் செய்து வைத்தார். இதையொட்டி மாலையில் வரவேற்பும், விருந்தும் தடபுடலாக நடந்தன.

• • •

அதே தினத்தன்று, சென்னையில் இன்னொரு பிரபல விளம்பரக் கம்பெனியான அசோஸியேட்டட் ஆட்ஸ் & சர்விஸின் சொந்தக்காரர் ஸ்ரீ. எல். கே. லக்ஷ்மிராகவன் தம் புத்திரர்களான ஸ்ரீநிவாஸராகவனுக்கும்; கல்யாணராகவனுக்கும் உபநயனம் செய்து வைத்தார். மாலையில் சிறந்த முறையில் வரவேற்பும், விருந்தும் நடந்தன.

இவ்விரு வைபவங்களுக்கும், பத்திரிகாசிரியர்கள், பொதுஜனப் பிரமுகர்கள் முதலியோர் ஏராளமாய் விஜயம் செய்து பையன்களை ஆசிர்வதித்துச் சென்றனர்.

சபா நிகழ்ச்சிகள்

தாம்பரம் சங்கீத சபாவில் சென்ற மாதம் 21-ந் தேதியன்று பிரபல பூதலூர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளின் கோட்டு வாத்தியக் கச்சேரி நடைபெற்றது. ஸ்ரீமதி கல்பகம் சுவாமிநாதன் வீணையில் தொடர்ந்து வாசித்தார்.

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி ஸ்வாமி சபாவில் சென்ற மாதம் 28-ந் தேதியன்று ராதா, ஜயலக்ஷ்மியின் இனிய சங்கீதக் கச்சேரி நடந்தது. ஆர். எஸ். கோபாலகிருஷ்ணன் பிடிலும், கல்பாத்தி ராமனுதன் மிருதங்கமும், சுந்தரம் கடமும் வாசித்தனர்.

பிரிவுபசாரம்

சென்னை பிரதேச தணிக்கை அதிகாரியாய் இருந்து பம்பாய்க்கு மாற்றலாகிப் போகும் ஸ்ரீ. கே. ஸ்ரீநிவாஸனுக்கு சென்னை சினிமா ரஸிகர்கள் சங்கத்தினர் சென்ற மாதம் 28-ந் தேதியன்று ஒரு பிரிவுபசார விருந்தை சென்னையில் நடத்தினர்கள்.

நாட்டிய முத்திரைகள்

(34-ம் பக்கத் தொடர்ச்சி)

சிலர் பெருவிரலை மற்ற விரல்களின் அடிப் பாகத்துக்கு நேராக இருக்கும்படி மடக்க வேண்டும் என்பர். நாட்டியத்தின் ஆரம்பம், மேகங்கள், காடு, நதி, குதிரை, பனையோலை, அலை, கேடயம், சிறந்த அரசன், கடல், தேவலோகம், காற்று, நிலவு, உக்ரமான வெயில், இரவு, மாதம், வருஷம், மழை காலம், முதலியவைகளையும், வேண்டாமென மறுப்பது, வெட்டுவது, கீழே படுப்பது, போவது, கதவை வேகமாகத் திறப்பது, பிரமாணம் எடுப்பது, வீதியில் நுழைவது, வஸ்துக்களைத் தொடுவது, ஜலம் தெளிப்பது, ஒரு இடத்தைக் குறிப்பது, ஒருவரை அழைப்பது, முன்னுக்குப் போவது, வாளேந்தி யிருப்பது, சுத்தம் செய்வது, முதலிய செய்கைகளையும், சக்தி, தயை, பெருந்தன்மை, சமத்துவம், நிசப்தம், நற்செயல்கள், முதலியவைகளையும் பதாகை குறிக்கிறது.

பதாகைக் கையில் மோதிர விரலை முன் பக்கம் மடித்தால் **திரி பதாகை** முத்திரையாகிறது. கிரீடம், மரம், வஜ்ராயுதம், வஜ்ராயுத பாணி (இந்திரன்), விளக்கு, அக்னி ஜ்வாலை, புரு, அம்பு, கன்னங்கள், ஆண் பெண் சேர்க்கை, சுற்றித் திரும்புதல், முகத்திலும் உடலிலும் அழகுக்காக தீட்டப்படும் சித்திரம் ஆகியவைகளை இம்முத்திரை குறிக்கிறது.

திரி பதாகைக் கையில் சிறு விரலையும் மடித்துக் கொண்டால், **அர்த்த பதாகை** முத்திரையாகிறது. "இரண்டு" என்று சொல்லுவது, கொடி, கத்தி, கோபுரம், கொம்பு, நதிக்கரை, எழுத அல்லது சித்திரம் வரைய உபயோகிக்கும் பலகை, முதலியவைகளை அர்த்த பதாகை முத்திரை குறிக்கும்.

திரி பதாகைக் கையில், ஆள் காட்டி விரலை அகட்டி நீட்டினால் **கர்த்தரி முக** முத்திரையாகிறது. ஆண் பெண்களின் பிரிவு, மறுத்தல், திருடுதல், கண்ணின் மூலை, மரணம், ஒருவகைக் கொடி (creeper) அபிப்பிராய பேதம், மின்னல், தனியாகத் தூங்குதல், கீழே விழுந்து அழுதல், முதலியவற்றை கர்த்தரி முக முத்திரை குறிக்கிறது.

மோதிர விரல் நுனியையும், பெருவிரல் நுனியையும் ஒன்றாகச் சேர்த்து, மற்ற விரல்களை நேராக நீட்டுவதால் **மயூர ஹஸ்தம்** உண்டாகிறது. மயிலின் அலகு, கொடி, சகுனப் பறவை, நெற்றி, புருவ மத்தி (திலகம்), நதி, ஜலம், பிரக்யாதி பெற்றவை, வாந்தி எடுத்தல், சிகையைச் சீவுதல், கண்ணீரை துடைத்தல், முதலியவைகளை இது குறிக்கும்.

பதாகை ஹஸ்தத்தில் பெரு விரலை விலக்கி நீட்டினால் **அர்த்த சந்திர** முத்திரையாகும். தேய்ப் பிறை எட்டாவது நாளின் சந்திரன், உணவுக்கலம், இடை, ஆவல், தியானம், துதி, கழுத்தைப் பிடித்து இறுக்க உபயோகிக்கும் கை, சாதாரண மனிதர்களுக்கு வந்தனம் புரிதல் 'தான்' (self), சிலையை ஆவாஹனம் செய்தல், ஆரம்பம் (origin) முதலியவைகளை இந்த முத்திரையால் காட்டலாம்.

பதாகைக் கையில் ஆள் காட்டி விரலை மடித்துக் கொண்டால் **அரால** முத்திரையாகும். விஷமுண்ணுதலைக் குறிப்பது, கொடிய திராவகம், பேய்க் காற்று முதலியவைகளை இந்த முத்திரை குறிக்கும்.

அராளக் கையில் மோதிர விரலை கொஞ்சம் வளைத்தால் **சுகதுண்ட** முத்திரையாகும். அம்பு எய்தல், ஈட்டியை வீசுதல், மர்மம், உக்ரம் முதலியவைகளை சுகதுண்டம் குறிக்கும்.

எல்லா விரல்களையும் உள்ளங் கைப்புறம் மடித்துக் கொண்டு, பெரு விரலை அதன் மேல் அழுத்திக் கொண்டால் **முஷ்டி** முத்திரையாகிறது. வஸ்துக்களை கையில் பிடித்திருப்பது, சண்டையிடும் மனோ நிலை, சிகையைப் பிடித்தல், இறுக்கம், முதலியவைகளை இது குறிக்கும்.

முஷ்டிக் கையில் பெரு விரலை நேராக நீட்டினால் **சிகர** முத்திரையாகும். காதற் கடவுள் (மன்மதன்), தூண், வில், கணவன், பல், உடல், காதலன், நிசப்தம், மணியோசை, தோமராயுதத்தை வீசுதல், தழுவுதல், நுழைதல், வினவுதல், 'இல்லை' என்றுரைத்தல், ஞாபகப் படுத்திக் கொள்ளல், யோசனை கூறல் முதலியவைகளை இந்த முத்திரை குறிக்கும்.

சிகரக் கையில் பெருவிரலின் நுனியுடன் ஆள் காட்டி விரலின் நுனியையும் சேர்த்தால் **கபித்த** முத்திரையாகும். லக்ஷ்மி, சரஸ்வதி, முறுக்குதல், தாளத்தை ஏந்தி யிருத்தல், பசுவை பால் கறத்தல், காதல் புரியும் போது புஷ்பங்களை ஏந்தி யிருத்தல், விளக்குகளால் ஆராதித்தல், ஆடை நுனியைப் பிடித்திழுத்தல் இவைகளை கபித்த முத்திரை குறிக்கும்.

குண்டூசி டைரி

டிஸம்பர் '52

25\. தமிழ் விளக்க உரையுடன் "யூகி வாரிசு" சென்னையில் திரையிடப் பட்டது.

27\. மதுரை தேவி பால விநோத சங்கீத சபையின் இருபதாவது ஆண்டு விழாக் கொண்டாட்டம் நடந்தது.

மதரூஸ் பிக்சர்ஸின் "பணம்" தமிழ் நாட்டில் வெளிவந்தது.

ஜனவரி '53

1\. "பணம்" சென்னை நகரில் திரையிடப்பட்டது.

4\. அன்னதான சிவன் பஞ்ச நிவாரண நிதிக்காக டி. கே. எஸ். சகோதரர்கள் "கள்வனின் காதலி" நாடகத்தை நடித்தனர்.

11\. ஸினி டெக்னீஷ்யன்கள் சங்க ஏற்பாட்டில் நக்ஷத்திர ஊர்வலமும், கிரிக்கெட் ஆட்டமும் சென்னையில் நடைபெற்றன.

14\. "வேலைக்காரி மகள்" சென்னை நகரிலும், தமிழ் நாட்டிலும் திரையிடப் பட்டது.

17\. அவர் இந்தியா பிலிம்ஸ் "என் வீடு" சென்னையிலும் தமிழ் நாட்டிலும் திரையிடப்பட்டது.

18\. "என் வீடு" பத்திரிகைக் காட்சி வாஹினியில் நடைபெற்றது.

25\. 'ஸினி டெக்னீஷ்யன்கள் சங்கத்தில், 'சினிமாவும் டெக்னீஷ்யன்களும்' என்பது பற்றி எஸ். எஸ். வாஸன் பேசினர்.

28\. நம்ஜனாதிபதி, 'இந்தியநடன நாடக இசைக்கழகம்' ஒன்றை டில்லியில் ஆரம்பித்து வைத்தார்.

31\. அஞ்சலி பிக்சர்ஸின் "பூங்கோதை" சென்னையிலும் தமிழ் நாட்டிலும் திரையிடப்பட்டது.

செய்தி - ஒலிபரப்பு மந்திரி கனம் பி. வி. கேஸ்கர் தென்னிந்திய பிலிம் சேம்பர் அங்கத்தினர்களைச் சந்தித்து சினிமா விஷயங்களை விவாதித்தார்.

பிப்ரவரி '53

1\. நாடகப் பெரியார் ப. சம்பந்த முதலியார் கௌரவிக்கப்பட்டார்.

வட நாட்டு நடிகர் பிருதிவிராஜுக்கும், கனம் பி. வி. கேஸ்கருக்கும், ஸினி டெக்னீஷ்யன்கள் சங்கத்தார் வரவேற்பு அளித்தனர்.

கனம் பி. வி. கேஸ்கர் பத்திரிகாசிரியர்களை சந்தித்துப் பேசினர். அவருக்கு, தென்னிந்திய பிலிம் சேம்பர் ஒரு விருந்தளித்தது.

2\. ஜூபிடர் - ஔவை புரொடக்ஷன்ஸின் "ரத்த பாசம்" படத்திற்கு பூஜை போடப்பட்டது.

'சென்னை கலைச் சங்கம்' என்ற பெயரில் ஒரு சங்கத்தை ஸர். ஸி. பி. ஆரம்பித்து வைத்தார்.

6\. ஸ்ரீகஜானனாவின் "மாமியார்" தமிழ் நாட்டில் திரையிடப் பட்டது.

8\. ஸினி டெக்னீஷ்யன்கள் சங்கத்தார் எம். ஆர். ஏ. கோஷ்டியினருக்கு ஒரு வரவேற்பளித்தனர்.

12\. "மாமியார்" படம் சென்னை நகரில் திரையிடப் பட்டது. இப்படத்தின் பத்திரிகைக் காட்சி சித்ரா டாக்கீஸில் நடைபெற்றது.

மதி ஒளி நாடக மன்றத்தினர் "மதி" என்ற நாடகத்தை நடித்தனர்.

14\. புரசை நண்பர்கள் ஆதரவில் "தொழில் மாற்றம்" என்ற ஹாஸ்ய நாடகம் நடைபெற்றது.

15\. ரிஸர்வ் பாங்க் பொழுது போக்குச் சங்கத்தினர் "மைதிலி" நாடகத்தை நடித்தனர்.

"யூகிவாரிசு" படம், சம்பந்தமாக நடைபெற்ற குழந்தை அறிவுப் போட்டியின் பரிசளிப்பு விழா ஜெமினியில் நடைபெற்றது.

19\. கிருஷ்ணா பிக்சர்ஸின் "மருமகள்" பத்திரிகைக் காட்சி மினர்வாவில் நடைபெற்றது.

20\. "மருமகள்" தமிழ்ப்படம் சென்னை உள்பட பல நகரங்களில் திரையிடப்பட்டது.

13414

Edited and Published by P. R. S. Gopal (Gundoosi) at 26, Godown St., Madras—1. 'Printed by S. Sriraman at Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras—1.

வருகிறது!

"நீ என்ன நல்ல
தாய் அம்மா!
உன் பெற்றபாசத்துக்கு
எல்லை ஏதம்மா!!"

பிரகாஷ்
ப்ரொடக்ஷன்ஸ்

பெற்ற தாய்

G. வரலக்ஷ்மி.. நாகேஸ்வரராவ்.. M.N. நம்பியார்
வஸந்தா

ஸ்டுடியோ
பிரகாஷ்

டைரக்ஷன்
பிரகாஷ்ராவ்

விநியோகஸ்தர்கள் : தமிழ் நாடு, மலபார், வெளிநாடு, சென்னை நகரம் :
ஏவி. எம். லிமிடெட், சென்னை-2.

இதர விபரங்களுக்கு :
பிரகாஷ் புரொடக்ஷன்ஸ், சென்னை-26.

GUNDOOSI March 1953 Regd. No. M. 4924

எல்லா கடைகளிலும் கிடைக்கும்